
அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com



# தாய் வீடு

THAIVEEDU உள்ளும் புறமும் யூன் 2007



வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE HIGHER STANDARDS
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5



# உலகின் அமைதியான நாடுகள் வரிசைப்படுத்தலில் கனடா 8வது இடத்தில்

உலகின் அமைதியான நாடுகளின் பட்டியலை கடந்த வாரம் தி எக்கொனமிஸ்ட் சஞ்சிகை வெளியிட்டிருக்கிறது. இந்த விரிசைப்படுத்தலின் படி உலகில் மிகவும் அமைதியான நாடாக நோர்வே முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது.

வெளியிடப்பட்ட 121 நாடுகளுகளின் தரவரிசையில் அமெரிக்கா 96வது இடத்திலும் ஈரான் 97வது இடத்திலும் உள்ளன. அமெரிக்காவின் அதிகளவில-ான பாதுகாப்புச் செலவினங்கள் அதனைப் பாதித்திருப்பதாக எக்கொனமிஸ்ட் ரிசேர்ச் நிறுவனத்தின் பணிப்பாளர் அன்ரு வில்லியம்ஸன் நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டார்.

இந்த ஆய்வுக்கான தகவல்கள் ஐ.நா. சபை, உலக வங்கி, அமைதி சார் அமைப்புகள் ஆகியவற்றின் தரவுகளிலிருந்தும் ஆய்வாளர்களின் நேரடி ஆய்வுகளிலிருந்தும் பெறப்பட்டன.

“கிடைத்த தகவல்களிலிருந்தே தாம் பட்டியலையே வெளியிட்டிருப்பதாகவும் தாம் வெளியுறவுக் கொள்கைகளைத் தீர்மானிக்கவில்லை எனவும் வில்லியம்ஸன் தெரிவித்தார்.

நோர்வேக்கு அடுத்த இடங்களை முறையே நியூசிலாந்து. டென்மார்க், அயர்லாந்து, ஜப்பான் ஆகியவை பெற்றுள்ளன. ஈராக் இறுதி இடத்திற்கு வந்துள்ளது.

12 வகையான தகவல்களின் அடிப்படையில் இந்த வரிசைப்பட்டியல் தயாரிக்கப்படுள்ளது. மேற்கு ஐரோப்பா உலகின் மிகவும் பாதுகாப்பான பிரதேசமாக தேர்வுசெய்யப்பட்டுள்ள போதிலும் பிரான்ஸ் 34 இடத்திலும் பிரித்தானியா 49வது இடத்திலும் உள்ளன.

இதே வேளை இலங்கை இந்த வரிசைப் பட்டியலில் 111வது இடத்திலும் இந்தியா 109வது இடத்திலுமுள்ளன. தெற்காசியாவிலுள்ள பூட்டான் 19வது இடத்திலும் சிங்கப்பூர் 29வது இடத்திலுமுள்ளன.

இந்த வரிசையில் 8வது இடத்தைப்பிடித்திருக்கும் கனடா 2006ம் ஆண்டு ஐ.நா. வின் உலகில் வாழ்வதற்கான மிகச்சிறந்த நாடுகளின் பட்டியலில் 6வது இடத்தைப்பிடித்திருந்தது, 2004ம் ஆண்டு கனடா இந்த வரிசைப்படுத்தலில் முதலாவது இடத்திலிருந்தது குறிப்பிடத்தக்கது.

■ ■ ■



வாரம்தோறும் 100 மில்லியன் பிளாஸ்டிக்பைகள் எறியப்படுகின்றன. இந்தப் பிளாஸ்டிக் பைகள் மண்ணோடு மண்ணாகப் போவதற்கு ஆயிரம் வருடங்கள் வரை எடுக்கும். உங்களது ஐம்பதாவது தலைமுறைக்கும் உக்காத குப்பைகளை வைத்துவிட்டுப் போகின்றீர்கள்... (பக்கம் - 63)


Guna Selliah
Life Insurance Broker
416.371.7776

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI PROPERTY MORTGAGE CANADA INC.


Cash Point Mortgages
Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E., Unit 202, Scar, ON


WE BRING CANADA'S LEADING LENDERS TO YOU
PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300


இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடு வாங்க, விற்க,
வீட்டிற்கான பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட (Appraisal)
தயங்காமல் உடனே அழையுங்கள்
S.K. Bales CRA, MVA, CRES, FRI
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21
Affiliate Realty Inc.



# Whatever your dream is ...

Whether your dream is to own a perfect house or starting a business, don't just keep dreaming about it, call us and we'll arrange the finance for you.



- *Up to 100% financing on purchase*
- *Discounted interest rates O.A.C*
- *Mtg. computer analysis - amortization schedules*
- *Second mortgages guaranteed for very low interest rates*
- *Debt Consolidation to 100% of value*
- *Mortgage investment opportunities*
- *Bank refusals restructured*
- *Real estate project (acquisition + development + construction)*
- *Residential, Commercial & Industrial*

LOOKING AFTER YOUR BEST INTEREST!





**SHANJITH (SHAWN) SATKUNANANTHAN**
**Senior Mortgage Consultant (AMP)**

**RAJANI SHANJITH**
**Mortgage Consultant**

**CENTUM** Advance Realty Inc
**(647)998.5450** / (416).290.1200

80, Corporate Drive Suite 208,
Toronto, ON M1H3S5
shanjith2002@yahoo.com
www.centum.ca

# வன்னியின் செல்வன்

## சரித்திர நவீனம்: - நான்காம் பாகம்: - அத்தியாயம் ஒன்று



த.சிவதாசன்

### யாழ்ப்பாணம் வீழ்ந்தது

தெற்கில் கெமுனு இராசனும் வடக்கில் எல்லாள இராசனும் பொருதவிருக்கிறார்கள் என்ற சேதி நாடெங்கும் பிரசித்தமாகப் போகிறதென்று மக்கள் பேசிக் கொண்டார்கள். முன்னைநாட் போரில் கெமுனு மகாராசா எல்லாளனை வென்றானென்று வரலாறு கூறுமாயினும் உண்மையில் போர்க்களத்தில் தன்னால் உரிய முறையிற் தோற்கடிக்கப்பட்ட கெமுனு அவமானம் தாங்காமல் தனக்கு இன்னுமொரு தடவை அவகாசம் தருமாறு வேண்டி நிற்கவும் எல்லாளன் போர்த் தர்மத்தை மதித்து கெமுனுவுக்கு அச்சந்தர்ப்பத்தை வழங்கி னானென்றும் ஆனால் அப்போரில் தன் படைகளை மீண்டுமொரு தடவை உபயோ கித்தல் தருமமில்லை என்ற கணக்கில் தள்ளாத வயதிலும் தான் மட்டுமே கெமுனு வோடு பொருதுவேன் என்று இளையவ னான கெமுனுவுடன் பொருதியதில் தோற் றுப்போய் எதிரியாற் கொல்லப்பட்டான் என்றும் வாசகர்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆனால் இத்தடவை கெமுனு எல்லாளனை விடவும் வயது முதிர்ந்தவனாகையால் அவனுக்கு இரண்டாவது சந்தர்ப்பத்தை அளிப்பதில் பிரயோசனம் எதுவுமில்லை என்று எல்லாளன் தீர்மானித்திருந்ததாகவும் பிற்கால ஈழ வரலாற்று ஆசிரியர்கள் குறிப் பிட்டிருந்தார்கள்.

ரோஹண நாட்டில் (தென்னிலங்கை) சமீப காலமாக புதிய கெமுனு மகாராசாவின் பிரமாண்டமான படங்கள் சட்டங்களில் மாட்டப்பட்டு இராஜபாட்டைகளில் தொங்க விடப்பட்டிருக்கின்றன என்றும் அவற்றுக்குப் பக்கத்தில் பழைய கெமுனுவின் உருவச் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்றும் மக்களும் ராசாவின் கட்டளைக ளைத் தலையால் ஏற்றுக் கடன் புரிந்து கொள்கிறார்களென்றும் ஈழத்து ஒற்றர்கள் தகவல் கொண்டுவந்திருந்தனர். பழைய கெமுனுவின் மறு பிறப்பே தான் என்ற இறுமாப்பில் பௌத்த சங்கத்தின் விருப்புகட் கிணங்கவே நாட்டைத் தான் பரிபாலிப்பேன் என்று புதிய கெமுனு அடம் பிடித்ததை யடுத்து புத்த பிக்குகளும் பிட்சா பாத்திரங் களைத் தூக்கியெறிந்துவிட்டு போராயுதங் கள் சகிதம் நடுத்தெருக்களில் நடமாடு கிறார்கள் என்ற விடயம் எல்லாளனுக்கும் எட்டியிருந்தது.

எல்லாளனின் ஆட்சியின்கீழ் ஈழப் பேரரசு உருவாகிவிடலாமென்ற அச்சத்தில் அயற் தேசங்களிலுள்ளோர் ரோஹண நாட்டின் பால் பேரன்பு காட்ட முனைந்தனர். வடக்கே இந்திய தேசத்தில் சேர நாட்டுக காரரின் ஆதிக்கம் கோலோச்சியிருந்தது. இந்திய தேசத்தின் ஒற்றர் படைகளிற் பெரும்பாலோர் சேரநாட்டுக் காரராயிருந் தனர். பாண்டிய நாட்டிலோ கருணாநிதிப் பாண்டியரின் முதுமைக் காலத்தில் ஏற்பட்ட அவரது குடும்பப் பகை காரணமாக நாடு மிகவும் பலங்குன்றியிருந்தது. அது மட்டு மல்லாது சோழரோடு கொண்டிருந்த பழம் பெரும் பகைமை காரணமாக இந்தத் தடவையும் ரோஹண நாட்டிற்கே உதவி செய்வதாக வாக்களித்திருந்தார். கருணா நிதிப் பாண்டியரின் சந்ததியினரிடையே ஏற்பட்ட பகைமையால் மக்களிடம் ஏற்பட்ட அதிருப்தியை ஒருவாறு ஈழத்தின்பால் திருப் பிவிட்டுப் பாண்டியன் தன்னைக் காப்பாற் றிக்கொண்டார் என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

சோழரின் ஆட்சிக் காலமே இந்திய வரலாற்றின் பொற்காலமென்பதை உலகறி யும். இக்காலத்தில் சோழர் கங்கை, கடாரங்களையும் வென்று கம்புச்சியத்தில் தான் விரும்பியவனை ஆட்சியில் அமர்த் தும் வல்லமை கொண்டிருந்தனர் என்ற விடயத்தை நன்கு உணர்ந்திருந்த ரோஹண நாட்டார் வளர்ந்து வரும் ஈழ அரசின் வலிமை கண்டு இச் சோழரும் எதிர்காலத்தில் சோழப் பேரரசை



உருவாக்கி உலகின் ஏனைய நாடுகளையும் பிடித்து விடுவார்கள் என்ற அச்சத்தில் உலகெங்கும் தமது மந்திரி பிர- தானிகளை அனுப்பி ஈழ அரசுக்கு எதிரா- கத் தமக்குப் படையணியும் ஆளணியும் தந்துதவுமாறு கேட்டுக் கொண்டனர். கெமுனு ராசாவும் அவ்வப்போது களியாட்டங்களென்று நூற்றுக்கணக்கான தனது பரிவாரங்களையும் அழைத்துக் கொண்டு பிரயாணங்களை மேற் கொண்டார். இப்படியாகத் தனது பலம் வாய்ந்த மந்திரிகளை அழைத்துச் செல்வதால் நாட்டில் தனக்கு எதிராகச் சதி செய்ய ஒருவரும் இருக்க முடியாது என்ற எண்ணமே அவர் இப்படியாக மந்திரி சேனைகளைக் கொண்டு செல்கிறார் என்று மக்கள் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டனர். அத்தோடு ஈழத்திலிருந்து ஒளித்தோடிச் சென்றிருந்த சில சிற்றரசர்களையும் தம்மோடு அழைத்துச் சென்று ஈழ நாட்டின் மக்களும் தன்னோடு ஒற்றையாட்சியில் இணைந்து வாழவே விரும்புகிறார்கள் என்ற கருத்தையும் தனது வெளிநாட்டுப் பயணங்களின்போது ரோஹண ராசா வெளிப்படுத்தத் தவறவ- ில்லை.

இருப்பினும் அயல் தேசிகளும், பர தேசிகளும் ரோஹண நாட்டின் ஆழ்கடல் இயற்கைத் துறைமுகங்களிலும் இன்னோரன்ன வளங்களிலும் கண்வைத்தே தமது காரியங்களை ஆற்றி வந்தனர். முறைப்படி அவ் வளங்களிற் பல ஈழ தேசத்தின் எல்லைகளுக்குள்ளே அமைந்திருந்ததால் ஈழ நாடு முற்று முழுதாகத் தனது சுய ராச்சிய பரிபால- னத்துக்குள் அவற்றைக் கொண்டு வரும் பட்சத்தில் என்ன செய்வது என்ற கவலையும் இப் பரதேசிகளின் மனங்களில் அவ்வப்போது உதித்தது. இதனால் இப் பரதேசிகள் வெளிப் புறத்தில் நடு நிலையாளர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்டே வந்திருந்தனர். சமயம் பார்த்து எவரது கரங்கள் பலம் பெறுகின்றன என்பதை மிகவும் கூர்மையாக அவதான- ித்து வந்தனர். இருப்பினும் ஈழ நாட்டு அரசர் ஒரு வணங்கா முடியென்பதும் எந்த வித உதவிகளாலும் அவரை இலகுவில் வாங்கிவிட முடியாது என்பதும் இப் பரதேசிகளுக்கு எப்போதுமே கவலை தருவதாகவிருந்தது. ஈழ நாட்டு அரசரை ஆட்சியிலிருந்து கவிழ்த்துவிட அயல் தேசிகளால் பல தடவைகள் சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அவற்றிலிருந்தெல்லாம் தெய்வாதீனமாகத் தப்பி அவ்வரசர் கால் நூற்றாண்டு காலம் தொடர்ந்து ஆட்சி நடத்த முடிந்திருக்கிறதே என்பது ரோஹண நாட்டு மக்களிடையேயும் அவர் மீது மதிப்பை உருவாக்கியிந்தது. சமாதான காலத்தில் அவரது பிறந்தகத்துக்கு யாத்திரை சென்று அங்கிருந்து ஒரு பிடி மண்ணையே கொண்டு செல்லுமளவுக்கு ரோஹண நாட்டு மக்கள் சிலரும் அம் மன்னரை நேசித்தனர். இதனால் பொறாமை கொண்டதனாற்றான் ரோஹண மன்னர் தனது திருவுருவங்களைத் தெருவெங்கும் வைத்து மக்கள் வழிபடவேண்டுமென்று உத்தரவு போடுவதற்குக் காரணமாக அமைந்தது என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.


ஆனால் துர்ப்பாக்கியமாக ஈழநாட்டு மக்கள் நேசிக்குமளவிற்கு கெமுனு மன்னர் தனது நடத்தைகளை நெறிப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக, கட்டு மீறிய அவரது படைகளின் நடவடிக்கைகளாலும், தன் நாட்டிற்கும் ஈழநாட்டிற்குமிடையே பல காலமாக நடைபெற்று வந்த வாணிபத்தை நிறுத்தியதன் மூலம் ஈழ நாட்டினரது கடுங் கோபத்துக்கும், சாபத்துக்கும் அவர் ஆளாக நேர்ந்தது. இதன்காரணமாக ஈழநாடு தனது போர்த் தயாரிப்புகளில் ஈடுபடும்போது பெருவாரியான மக்கள் வயது வேறுபாடின்றி தமது மன்னரை ஆதரித்தனர். கெமுனு ராசாவின் இந்த மக்களை உதாசீனம் செய்த நடவடிக்கையால் பர தேசிகளும் அவரைப்பகிரங்கமாகவே விமர்சனம் செய்யத் தலைப்பட்டனர். தமது அயல் தேசிகளான இந்துஸ்தானம், பாகிஸ்தானம் போன்ற நாடுகள் தம்மிடையே கொண்டிருந்த தீராப்பகைமையைக் காரணம் காட்டி இரு சாராரையும் மிரட்டி அவ்வப்போது உதவிகளையும் பெற கெமுனு அரசர் தயங்கவில்லை.

முன்னாள் சோழப் பேரரசின் பலத்திற்குக் காரணமாகவிருந்த கடற்படையைப் போலவே இப்போதும் ஈழ அரசுக்கும் அதிக பலம் வாய்ந்த கடற்படையும் அதைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட வான்படையும் பலத்தை அளித்தன. பல தடவைகளில் ஈழப் படைகளின் தாக்குதல்களினாற் சிதறியோடிய ரோஹணப் படைகளின் இயலாத தன்மையும் அரசருக்கும் அவரின் அரசிற்குத் துணை நின்ற சிற்றரசர்களுக்கும், அயற்தேசிகளுக்கும் அச்சத்தையே கொடுத்தது.

இதன் காரணமாக அயற் தேசிகளும் பர தேசிகளும் ரோஹண நாட்டிற்கே தமது உதவிகளைச் செய்யத் தலைப்பட்டனர். ஈழ நாடு தனிமைப்படுத்தப்பட்ட போதிலும் அதன்மக்களும் படைகளும் எப்போதுமே போருக்கான தயாரிப்பில் விழிப்போடு ஈடுபட்டு வந்தனர்.

தம்மிடையேயான பிணக்குகளைப் பேசித் தீர்ப்பதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் பரதேசிகளின் துணை தனக்கு எப்போதுமே உள்ளது என்ற நினைப்பிலும் அயற் தேசம் தனது கடலெல்லையில் தன்னோடு துணை ரோந்து செய்யச் சம்மதித்திருந்ததனாலும் அதிக இறுமாப்புக் கொண்டிருந்த கெமுனு அரசர் ஈழ அரசரைத் தான் போர்க்களத்திற் தோற்கடிப்பேன் என்று சபதம் பூண்டு கொண்டார். இதன் பொருட்டு அவ்வப்போது ஈழத்தின் பல கிராமங்கள் மீது

7ம் பக்கம் பார்க்க...

#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.

PROPERTY MAX®
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# குரங்கிலிருந்து வருமுன்னரே மனிதன் அமெரிக்காவுக்கு சென்றுவிட்டான்!



மாமூலன்

இந்தக் கட்டுரையில் யாரைப்பற்றி முதலில் எழுதுவது என்ற குழப்பம்! இசுலாமியர் களைப்பற்றி எழுதுவதா? அமெரிக்கர் களைப்பற்றி எழுதுவதா?

அடித்த அமெரிக்காவும் அடிவாங்கிய இசுலாமியர்களும்? அல்லது அடித்த இசுலாமியர்களும் அடிவாங்கிய அமெரிக்கா வும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு புள்ளியில் இன்ற இருக்கின்றன. நின்று குரல் கொடுக் கின்றன. அதற்கு அடிப்படை என்ன?

அமெரிக்க செய்தி ஒலிபரப்பு துறையின் பணி செய்திகள் தரவுகள் பற்றிய உண்மை யான திறந்த உரையாடலை 'மக்களாட்சி' நோக்கி அமெரிக்காவிலும் உலகம் முழு வதும் உருவாக்குவதற்கு உதவுவது தான்.

இந்த நிலையில் அமெரிக்காவில் அண்மை யில் பல்கலைக் கழகங்களிலிருந்து கிறித்தவ அடிப்படைவாதிகள்வரை எடுத்துக் கையாளும் ஒரு தலைப்பு செய்தி ஊடகங் களில் மிகப் பிரபலமாகப் பரப்பப்படுகிறது. டார்வின் கூர்ப்புக்கு எதிர்க் கருத்துத்தான் அது.

**கூர்ப்பு பரிணாமம் எனப்படும் கோட்பாடு பிழை என்பதுதான் தற்போதைய வாதம்.**

இதற்கு வைக்கின்ற வாதம் பின்வருமாறு அமைகிறது:

திட்டமிட்ட ஓர் சிறந்த அறிவியல் நுட்பம் செயற்படுத்தப்படா விட்டால் இந்தளவு படைப்புக்களும் சிறப்பாக சாத்தியமில்லை. எனவே அந்தப் படைப்புக்களைத் திட்டமிட்ட கடவுள் எங்கோ இருந்து அதைச் செய்கின் றார் என்பதுதான்.

எனக்கு விலங்கியல் பாடத்தில் எனது ஆசிரியர் அனைத்து கருக்கொள்ளல் முறைகளையும் கற்பித்தார். மனித வயிற் றில் கரு வளர்கையில் சிறிய விலங்கின் வடிவத்திலிருந்து படிப்படியான மாற்றம் பெறுகிறது என்றார். மரபணுக்களைப் படிப் பித்தார். கலங்களின் உள் என்ன இருக் கிறதென்றார். அந்த தொடர் வகுப்புக்கள் முடிந்தவுடன் ஆசிரியருடன் உரையாடுகை யில் நானும் இப்படித்தான் சொல்லிக் கொண்டேன்.

"இவ்வளவத்தையும் செய்த இறைவன் ஒரு பெரிய சயன்ரிஸ்ராய்த்தான் இருக்க வேணும்"


ஆசிரியர் சிறிதாகச் சிரித்துக் கொண்டார். இன்றுவரை அது எதற்கென்று எனக்கு தெரியாது.

இந்த டார்வின் எதிர்ப்பு அணுகு முறையால் அமெரிக்கா இரண்டுபட்டுக் கிடக்கிறது. அமெரிக்கா இரண்டுபட்டால் நல்லதுதானே என்று இருந்துவிட முடியாது.

டார்வின் என்று ஒருவர் பெயரை நாம் எல்லோரும் எப்படியும் கேள்விப்பட்டிருப் போம். கூர்ப்பு கோட்பாட்டை முன்வைத்த வர்.

அதாவது உலகில் உள்ள உயிரினங்கள் சிறிய நிலையில் இருந்து சிக்கலான தற்போதைய மனித நிலை நோக்கி நகருகின்றன. நகர்ந்திருக்கின்றன. இதனை அவர் பல ஆண்டுகள் அலைந்து திரிந்தும் பலருடைய ஆய்வு வேலைகள் என்பவற் றிலிருந்தும் பெற்றுக்கொண்ட பல வகை யான மெய்மைகளின் அடிப்படையில் உருவாக்கியிருந்தார்.

அவருடைய ஆணித்தரமான அணுகுமுறை இன்றளவும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுதான். அதன் அடிப்படையில்தான் இன்றளவும் பல உயிரியல் ஆய்வு முறைகள் நடக்கின்றன.



ஓர் கலம் கொண்ட உயிரிலிருந்து பல்கலம் கொண்ட பல் உறுப்புக்கொண்ட சிக்கலான உயிர் அமைப்புக்கள் தோன்றுகின்றன. அவை ஒன்றிலிருந்து ஒன்ற பல ஆயிரம் ஆண்டுகள் ஏற்டும் மாற்றத்திலிருந்து ஒன்றிலிருந்து மற்றதாக மாற்றமடைகின்றன என்று டார்வின் சொன்னவற்றை பொதுமைப்படுத்தி குறுக்கிச் சொல்லலாம்.

இன்றிலையில் அமெரிக்காவில் உள்ள அமெரிக்கர்களுக்கு எங்கே வந்தது சிக்கல் என்றால் இந்த டார்வின் பைபிளுக்கு எதிராக கண்டபடி பொய் சொல்லிவிட்டார் என்பதிலிருந்ததான்.

அதுவம் தற்போது ஆட்சியிலிருக்கும் திருவாளர் புஸ் அவர்களின் ஆளும் பழமை வாதக் குடியரசுக் கட்சி உறுப்பினர் பலரும் இந்த டார்வின் எதிர்ப்பு குரலில் இறங்கியிருப்பது தான் முதன்மையான செய்தி. அவர்களது அரசு செய்தித்துறை யும் இந்த உரையாடல்களை முடுக்கி விட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் அமெரிக்காவெங்கி லும் இந்த டார்வின் எதிர்ப்பு அலை கிளம்பியிருக்கிறது. அமெரிக்க மக்களின் பிரதான மதமாக இருக்கும் பைபிள் சார்ந்த ஆவிக்குரிய பல சபைகளும் டார்வின் தவறானவர் என்கின்றன. தற்போது அமெரிக்காவின் அறிவியல் ஆய்வு மையங் கள் டார்வினின் கோட்பாட்டைப் பற்றி இந்த விவாதம் தொடர்பாக ஆய்வரங்குகள் நடத்தும் நிலைக்கு தள்ளப் பட்டிருக்கின் றன.

அதாவது டார்வின் சொன்ன கூர்ப்புக் கொள்கை சரியா தவறா என்ற பட்டி மண்டபம் அமெரிக்காவில் தற்போது நடக் கிறது.

டார்வினை எதிர்ப்பவர்கள் டார்வினியக் குறுக்கல் வாதம் என்று சொல்லி வரு கிறார்கள். அவர்கள் கருத்துப்படி கண்டபடி டார்வினின் கூர்ப்புக் கொள்கையை ஏற்று மக்களிடமிருந்து மரபான நம்பிக்கைளை இல்லாமல் செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

இந்த டார்வினின் கோட்பாட்டின் அடிப்பை டையில் எழுந்த அறிவியல் சமூக அறிவி யல் கோட்பாடுகள் கண்டுபிடிப்புக்கள் அனைத்தையும் குழப்பத்தான் தற்போது இந்தக் கும்பலின் வேலை தொடங்கியிருக் கிறது.

இதில் புஸ் சின் பரிவாரங்களுடன் சேர்ந்து களமிறங்கியிருப்பது அடிப்படை வாத இசுலாமியர்கள்!

அமெரிக்காவின் அடிப்படைவாத கிறித்தவர் களும் உலகின் அடிப்படைவாத இசுலா மியர்களும் டார்வினுக்கு எதிராகக் கிளம்பியிருக்கிறார்கள். இதே கிறித்தவர் களும் இசுலாமியர்களும் சிலுவைப்போர் என்ற பெயாரால் ஆண்டுக்கணக்கில் பல தடவை வெட்டுக்குத்துப் பட்டுக்கொண்டார் கள். தற்போதைய ஈராக் வரையிலும் அது தொடர்நதது.

இந்நிலையில் புஸ்சின் பரிவாரங்களும் அடிப்படைவாத இசுலாமியர்களும் ஒன்றி யைந்து டார்வினை எதிர்க்கிறார்கள். இதைப்பார்த்து அவர்கள் நம்பும் கடவுளே அசந்துவிடமாட்டாரா என்ன?

சூரியன் உலகத்தைச் சுற்றுகிறது என்று உலகம் நம்பிக்கொண்டிருந்தது. கலிலியோ கலிலி என்ற அறிவியல் அறிஞர் 1633 இல் அதை மறுத்தார்.

அதை வத்திக்கான் எதிர்த்தளவு அப்போது முசுலிம் சமூகம் எதிர்ககவில்லை. அவர்க ளுடைய மதம்சார் அறிவியல் அறிஞர் சிலர்கூட பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்பதை கண்டறிந்திருந்தனர். அல்லது கிட்டத்தட்ட ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.

19 ஆவது நூற்றாண்டில் டார்வின் தனது கூர்ப்புக்கொள்கையை அறிவித்தபோதும் வத்திக்கான் துள்ளிய அளவுக்கு இசுலா மியச் சமூகம் துள்ளவில்லை. எதிர்ப்போ ஆதரவோ அடக்கியே வாசித்தார்கள்.

தற்போது அமெரிக்காவின் ஷமக்களாட்சி' நடைமுறைக்கு உலகெங்கும் வர அமெரிக் காவின் 'கடவுள்' உலகெங்கும் ஆட்சியில் அமரவேண்டும்.

அல்லது அமெரிக்காவின் உளவு நிறுவனத் தைப்போல 'தானும் அதுவாகி' இசுலாமியக் கடவுளையும் தனக்குரியதாய் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அதன்வழியாக உள் நுழைந்து இசுலாமியர் களையும் அவர்கள் வளங்களையும் கைப் பற்ற வேண்டும். இதைப்போல பல வேண் டும்கள் அமெரிக்காவுக்கு இருக்கிறது. அதைப்போன்ற பிற இனகங்களையும் பிடித்து தன்பக்கம் இழுக்க வழி தேடும் முறைகளில் இதுவும் ஒன்று.

கடவுள் - மிகப்பெரிய அறிவியல் திட்டமிட லாளர்- அல்லது தூரத்தில் வேற்று கிரகங்களில் இருக்கும் தலைசிறந்த யாரோ- எல்லாம் யாருடைய பக்கம் என்பதைத் தீர்மானிப்தற்கு இன்னொரு உலகப்போரே வரலாம்.

அப்படி ஒன்றை நோக்கி உரிமை கொண்டாடிப் பெரிய உலகப்போரை ஏற்படுத்தவும் சாத்தானின் சகோதர்களும் சம்மனசின் சகோதரர்களும் தயாராய்த்தான் இருப்பார்கள்.
அடுத்தவரைக் கொல்வதில் மட்டும் எந்தக் கடவுளும் இவர்களைத் திருத்திவிட முடி யாது. அடுத்தவரைத் துன்பப்படுத்துவது தவறு என்பதைச் சுட்டிக் காட்டவும் எதுவும் அந்த உயரிய அறிவுடைய படைக்கும் ஆற்றல் அவர்களுக்கு எதையும் செய்து விடவில்லை.

என்னதான் நடக்கிறது சற்றுப் பொறுத்திருந் துதான் பார்க்கவேண்டும்.

இந்தச் சிக்கலை அமெரிக்கா எதிரிப்புக் கண்ணோட்டத்திலிருந்துமட்டும் பார்ப்பது தவறாகலாம். அப்பிடி பார்க்காமல் மெய்யி யல் கண்ணோட்டத்தில் பார்க்கவும் இட முண்டு. பின்னர் பார்க்கலாம்.

■ ■ ■

**RAVI INCOME TAX SERVICE**

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
**416-262-4176**

- **Residential**
- **Commercial**
- **Invetment Properties**

**Ravi Paramu**
Sales Representative
**416•262•4176**
rparamu@hotmail.com
www.raviparamu.com

**HomeLife GTA Realty Inc.**
Realtor Member
1711 McCowan Rd., Suite 206
Toronto, Ont M1S 3Y3
Tel: 416•321•6969
Fax: 416•321•6963



# கடன் அட்டைகளும் நாமும்



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

கடன் அட்டைகளை (Credit Cards) பெற்று அதன் மூலம் கடனாளிஆகி நொந்து கெட்டவரும் உண்டு. அதனை ஒரு அவசர காலத்திற்கு அடுத்தவரிடம் கை ஏந்தாமல் முறைப்படி அதனை பாவித்து நல்லாய் வந்தவரும் உண்டு. குறிப்பாக மேலைத்தேய நாடுகளில் எப்படி ஒரு கடன் அட்டையை பாவிக்கின்றீர்கள் என்பதை பொறுத்தே உங்கள் நேர்மையை பரிசோதிக்கின்றார்கள்.


கடன்களைப் (Loans) போல, கடன் அட்டைகளும் (Credit Cards) உங்களுக்கான ஓர் சிறப்பான கடன் வரலாறு (Credit History) ஒன்றைக் கட்டியெழுப்ப உங்களுக்கு உதவும். இது உங்களுக்கு ஓர் மோட்டார் வாகனம் வாங்கவோ, கல்விக்கான கடன் பெறவோ, ஓர் வாழிடத்தை வாடகைக்குப் பெறவோ (Rent an apartment), ஓர் தொழிலைப் பெற்றக் கொள்ளவோ, அல்லது வீட்டிற்கான அடமான கடன் வாங்கவோ உதவும். இதனை விட ஓர் கடன் அட்டை வைத்திருப்பதனால் வேறு பல நன்மைகளையும் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

அவசர தேவைகளின் போது (Emergencies) மிகவும் கை கொடுக்கிறது.

பணத்தை அல்லது காசோலையை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதால் ஏற்படும் இடர்களைக் (risks) குறைக்கின்றது.

தனிப்பட்ட பொறுப்புணர்வையும் (responsibility) இன்னொருவரில் தங்கியிராத தன்மையையும் (independence) அதிகமாக்குகின்றது.

பாரம்பரிய கடன்களைப் போலல்லாது,






கடன் அட்டையில் உங்கள் கடன் தொகையின் ஒரு சிறிய பகுதியை மாதாந்தம் செலுத்த முடியும். அதிகுறைந்த கொடுப்பனவானது, (Minimum Monthly Payment) பொதுவாக நீங்கள் செலுத்த வேண்டிய தொகையின் 2 வீதமேயாகும். துரதிஷ்டவசமாக, அதிகுறைந்த தொகையை மட்டும் நீங்கள் செலுத்தும்போது நீங்கள் செலுத்தி முடிக்க வேண்டிய கடன் தொடர்ந்து வளர்ந்து கொண்டே செல்கின்றது.

கடன் அட்டையைப் பெற்றுக் கொள்வது இலகுவான போதிலும் அதனை முகாமை செய்வது (manage) கடினமாகும். ஓர் கடன் அட்டையைப் பெற்றுக் கொள்ள முன்பாக பின்வரும் வினாக்களை சிந்தியுங்கள்.

எனக்கு ஓர் கடன் அட்டை தேவைப்படுமா? ஓர் கடன் அட்டையை வைத்திருந்து என்னால் சமாளிக்க முடியுமா?

ஒவ்வொரு மாதமும் எனது கடனைக் கொடுத்துத் தீர்க்க முடியுமா?

ஓர் கடன் அட்டையைப் பெற விண்ணப்பம் செய்ய நீங்கள் தீர்மானித்தால், பின்வருவனவற்றை வழங்கும் கம்பனியை அணுகுங்கள்.

**குறைந்த வட்டி வீதங்கள்.**

வருடாந்த கட்டணம் அற்ற அல்லது குறைவான கட்டணத்தைக் கொண்டது நிதி கொடுப்பனவுகள் (payment) செலுத்த முன்னரான மன்னிப்புக் காலத்தை (grace period) வழங்கும் கம்பனி. அதாவது இந்த காலத்திற்கு வட்டி அறவிடப்படமாட்டாது.

**கடன் அட்டைகளைப் பயன்படுத்துவது பற்றிய சில சிறிய தகவல்கள் இதோ!**

செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் செலுத்தாது மீதியை (Balances) வைத்திருப்பீர்களானால் அதற்கு, சில அட்டைகள் 18%-24% அல்லது அதற்குக் கூடுதலான வட்டியை அறவிடும். வட்டியானது பொதுவாக நிதிக் கட்டணம் (financial charges) என உங்கள் கடன் கூற்றுக்களில் (Statement) குறிப்பிடப்படும்.

நிலையான வட்டி வீதம் எப்போதும் நிலையானவை அல்ல! ஓர் கடன் அட்டை கம்பனியானது வீதத்தை மாற்றுவதற்கு 15 நாட்களுக்கு முன்பாக உங்களுக்கு அறிவிக்கும்.

உங்கள் கூற்றினை கவனமாக பார்த்து. உங்களுக்கு ஏதாவது வினாக்கள் இருந்தால் கம்பனியை தொலைபேசியில் அழைக்கவும்.

காசு முற்பணமாக (Cash advance) எடுக்கும் போது கட்டணம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை எடுத்த கணமே வட்டி சேர ஆரம்பிக்கும்.

வருடாந்த கட்டணத்தைக் (Annual Fee)

11ம் பக்கம் பார்க்க...

Search Your Dream Home www.brokerofrecord.info

Buying, Selling, Leasing
PROPERTY MAX®
Realty Inc. Brokerage
Residential, Commercial, Investment
Industrial And Rental



Mohan Subramaniyam
Broker Of Record
Office: 416-291-3000

PMCI
PROPERTY
MORTGAGE CANADA
INC
New Mortgage, Re-Financing, New Immigrants,
1st, 2nd Mortgage, Commercial Mortgage,
Solution For Bad Credit, New Home Buyers.

Toronto Area Line : 416-321-2300
Direct: 416-857-1780
Mississauga Brampton Line : 905-625-2121

Please mention PROPERTY/MAX when enquiring about Properties

Insurance Ocean

Product We Serve:
* Accidental Death Insurance
* Affordable Life Insurance
* Critical Illness Insurance
* Disability Income Insurance
* Permanent Life Insurance
* Mortgage Insurance
* Term Life Insurance
* Travel Insurance

Let us help you to give your family the security and Peace of mind they deserve
Get the best rate online @ www.insuranceocean.com

# You Dream It....
# We Make It Happen...


**Ravi Logarajah** B.Sc
**Tharshi Rajenthiram** B.B.A
Sales Representatives

**416.843.7474**

30 Eglinton Ave. W, Suite 200, Mississauga, ON, L5R 3E7
**Bus: 905.568.2121**



***Kennedy/Lawrence***



**$379,900**
Detached Bungalow, 3+4 Bedrooms, 3 Washrooms, 3 Kitchens
3 Fridges, 3 Stoves, Washer, Dryer, All Elf's, All Window Coverings, Central Air Conditioner.

***Mclevin/Neilson***



**$179,900**
Co-Op Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Well Maintained Luxury 2 Bedroom/Bath Apartment, South West Corner Unit. Balcony Over Look The City And Lake. Over 1200 Sqft (Approx)

ROYAL LePAGE
KINGSBURY REALTY BROKERAGE

digi Media



MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள் Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

# MORTGAGE
# MORTGAGE
# MORTGAGE

**ராம் கிருஷ்**
**RAM KRISH**
Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200, Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank™ · FIRST NATIONAL FINANCIAL CORPORATION · TD · cervus FINANCIAL CORP. · BMO

digi Media Creations - 416.467.4952

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

வணக்கம்!

வீடு இதழுக்கு ஆதரவு வழங்கும் வணிகர்களுக்கும் வாசகர்களுக்கும் எமது நன்றி.

குளிர்காலம் கடந்து பிறந்திருக்கின்றது கோடைகாலம். வளர்ச்சி நோக்கிய பல செயற்பாடுகளுக்குக் களமாக அமைந்து விடுகின்ற காலம் இக் கோடைகாலம். பலரும் கோடைகாலத்தைப் பொதுவாக விடுமுறை காலமாகக் கருதி, அவ்வாறு கழிப்பதே பெரிதும் வழக்கமாக இருக்கின்றது. அது உண்மையும் கூட.

ஆனாலும் வணிகர்களும், விற்பனை முகவர்களும் சுறுசுறுப்பாக இருக்கின்ற காலம் இது. பொதுவாக வணிகத்தின் எல்லாத் துறைகளும் இக் காலப்பகுதியில்தான் அதிகமாகப் பொருளீட்டும் வாய்ப்பைப் பெறுகின்றன. மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றப் பெரிதும் தேர்ந்தெடுக்கும் காலம் கோடைகாலமே.

வணிகர்களும் வாடிக்கையாளர்களும் இக் காலத்தைச் சரியாகப் புரிந்த கொண்டு முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நீண்டகால வளர்ச்சியின் விளைவாக நம்மவர் வணிகம் பெரு வளர்ச்சி கண்டுள்ளது. இன்று எல்லாத் துறைகளிலும் நம்மவர் வணிகம் செழித்துள்ளது. நமக்கான தேவைகள் பெரும்பாலானவற்றை நம்மவரிடமே நிறைவேற்றிக் கொள்ளும் காலமாக இக் கோடை காலத்தைக் கருதலாம். நமக்கிடையே நம் வணிகம் வளர்கின்ற வேளை, நம் சமூகமே காத்திரம் கொள்கின்றது என்பதை நாம் உணர வேண்டும்.

வாடிக்கையாளர்களே.. உங்கள் தேவைகளை நிறைவேற்ற முன்பு முதலில் உங்கள் தேவையை நிறைவேற்றவல்ல தமிழ் வணிகர்களை நாடுங்கள். உங்கள் தேவைக்கேற்ற நிறைவான சேவையைக் கேளுங்கள்.

இக் காலப் பகுதியில் வணிகர்களும் நுகர்வோரின் தேவையறிந்து தம் வணிகத்தை முழுமையுற வைத்திருத்தல் அவசியமாகும். நுகர்வோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தெரிவுக்கு பல வணிக நிறுவனங்கள் உள்ளன. ஆனால் நிறுவனங்களுக்கு வருகின்ற வாடிக்கையாளரைத் தக்க வைத்திருப்பதே வணிகத்தின் பலமாகும்.

வருகின்ற இக்கோடைகாலம் கனடியத் தமிழரின் வணிகத்துறைக்கு வளம் சேர்க்கும் காலம் எனலாம்.

இவ்வேளை இதயத்தை வருத்தும் தாயகச் செய்தி ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

'கொழும்பில் விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழர்கள் ஒருநாளைக்கு மேல் கொழும்பில் தங்கியிருக்கக் கூடாது. வந்த அன்றே அலுவல்களை முடித்துக் கொண்டு வெளியேறிவிட வேண்டும்' என்ற இலங்கை அரசின் அறிவிப்பு நம் உறவுகளுக்கு எத்தகைய இடரை ஏற்படுத்தும் என்பதை அனைவரும் உணர்வோம்.

பல்வேறு காரணங்களுக்காக பலநூறு தமிழர்கள் கொழும்பு விடுதிகளில் தங்கியிருக்கின்றனர். திடிரென வெளியாகியிருக்கும் அறிவித்தல், வணிகம் மருத்துவம், வெளிநாட்டுப் பயணம் வேலை என விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழரை பெரும் இடருக்குள் தள்ளியிருக்கின்றது. இச் செயல் பாதுகாப்புப் கெடுபிடி என்பதைவிட ஒருவகையில் மனித உரிமை மீறல் என்றே கருத வேண்டும்.

பல மனித உரிமை மையங்களின் குரல்கள் பலனற்றுப் போயிருக்கும் இவ்வேளையில் இத் தமிழருக்காகக் குரல் தரும் வலிமை யாருக்கு எண்டு என்பது எவருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இவ்வாறு கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்து பாதிக்கப்படும் தமிழரின் வெளிநாட்டு உறவுகள் உடனடியாகத் தொடர்பு கொண்டு ஆவன செய்தால் ஓரளவேனும் அவர்கள் துன்பத்தைக் குறைக்கலாம.

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி

தட்டச்சு : கௌசலா,

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம்

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள்:
For More Info: Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Tel: 416-646-3422, 416.400.6406
Fax: 416.849.0594
Web: www.veedunews.com
e-mail: info@veedunews.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# வன்னியின் செல்வன்...

3ம் பக்கத் தொடர்ச்சி...

தாக்குதல்களையும் தொடுத்து வந்தார்.

இதனாற் பொறுமையிழந்த ஈழ அரசர் தனது மதியூகத்தைப் பாவித்து சிறிய சேனைகளின் மூலம் பாரிய ரோஹண நாட்டுப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த ஈழத்தின் முன்னாட் தலைநகரான யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதலைத் தொடுத்தார். கடல், தரை, ஆகாயமென்று அதிரடியாக ஆரம்பித்த இத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் ரோஹணப் படைகள் சிதறியோடின. யாழ்ப்பாணம் மீண்டும் ஈழப்படைகளிடம் வீழ்ந்தது. ஈழத்தின் கடல், வான், தரைப் பிராந்தியகள் எல்லாவற்றையும் துல்லியமாக அறிந்து வைத்திருந்த ஈழப் படைகள் சரியான கால நிலைகளை இசைவாக்கித் தாக்குதல் தொடுத்திருந்தனர். இதற்கு முன்னரும் ஒரு தடவை அயற் தேசத்தாரின் பல்லாயிரக் கணக்கான சைன்யங்களினால் மேற்கொண்ட படையெடுப்பை வெற்றிகரமாக முறியடித்திருந்த ஈழப் படைகளுக்கு இது ஒரு பொருட்டாக இருக்கவில்லை..

யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டு எஞ்சிய ரோஹணப் படைகளை உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்த அயற் தேசக்கப்பல்கள் ஏற்றித் தம் நாட்டுக்குக் கொண்டு சென்று சிகிச்சையளித்தன. நிலைமையறிந்ததும் தெற்கே ரோஹண தேசத்தில் மக்கள் கொதித்தெழுந்து அங்கு வாழ்ந்து வந்த ஈழ நாட்டவர்கள் மீது பழிவாங்கத் தலைப்பட்டனர். நாடு அல்லோல கல்லோலமாகியது. மக்களின் வெறுப்பைச் சமாளிப்பதற்காக கெமுனு மன்னர் எஞ்சியிருந்த தனது வான் கலங்களின் மூலம் ஈழ நாட்டின் மக்கள் குடியிருப்புகளின் மீது கண்மூடித் தனமான தாக்குதல்களைத் தொடுத்தார். மக்களின் உயிர்களும் உடமைகளும் பெருமளவில் அழிவுற்றதைக் கண்ட ஈழ மன்னர் கெமுனு மன்னருக்கும் அவருக்கு உதவியாக நின்று ஈழ மக்களின் அழிவிற்கு ஒத்துழைப்புக் கொடுத்த பர தேசிகளுக்கும் இறுதி எச்சரிக்கை விடுத்தார்.

ரேரஹண மன்னர் எதையுமே சட்டை செய்வதாயில்லை என்றறிந்ததும் ஈழ மன்னர் தனது விசேட ஊடுருவற் படை-களை ரோஹண நாட்டினுள் அனுப்பி அங்குள்ள பொருளாதார வளங்களையும் துறை முகங்களையும் நாட்டின் பிரதான முகாந்தரங்களையும் அழித்தொழிக்கும்படி ஏவினார். ரோஹண நாட்டில் இனியேற்படப்போகும் பேரழிவுக்கு நாம் பொறுப்பில்லை என்று அவரது முதன் மந்திரி எச்சரித்தார். ரோஹண நாடு என்றுமில்லாதவாறு பேரழிவைக் கண்டது. வெளிநாட்டு மந்திரி பிரதானிகள் அவசரம் அவசரமாக நாட்டை விட்டு வெளியேறினர். அதன் பிறகு ஈழப்படைகளின் தாக்குதல் மும்முரமானது. கெமுனு அரசர் செய்வதறியாது திகைத்தார். மக்களின் வெறுப்பு அரசர் மீது திரும்பியது. அரசரின் கோட்டையே தகர்த்துவிட ரோஹண நாட்டு மக்கள் தயாரானார்கள்.

நிலைமை கட்டுக்கடங்காது போகவே கெமுனு மன்னர் பரதேசத்து மந்திரியொருவரை அழைத்து தான் போரை நிறுத்திக் கொள்ளச் சம்மதிப்பதாகவும் தனது படைகளைத் தனது நாட்டின் ஆரம்ப எல்லைகளுக்கு நகர்த்துவதாகவும் ஈழ மன்னருக்குச் செய்தியனுப்பினார். இச் செய்தி ஈழத்தின் தலைநகரை அடைவதற்குள் கெமுனுவின் அரண்மனையை ஈழ தேசத்தின் விசேட படைகள் முற்றுகையிட்டுத் தகர்ப்பதற்குத் தயாராகவிருந்தன.

ஆனால் ஈழத்து மன்னரோ வேறுவிதமான முடிவொன்றை நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்.

தொடரும்.

பி.கு.: இக்கதையில் வரும் பாத்திரங்கள் இன்ன இன்னாரைக் குறிக்கும் என்று நீங்களே முடிவுகளை எடுத்துக் கொள்ளலாம். தவறான முடிவுகளையெடுப்பின் அதற்கு ஆசிரியர் பொறுப்பேற்க முடியாது.

■ ■ ■

வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின் எல்லைகளை
விரிவாக்குவீர்!
416-400-6406
416-646-3422

inayam
www.inayam.net
ரொரன்ரோவில் நடைபெறும் சகல நிகழ்வுகளையும்
பார்ப்பதற்கும் பதிவு செய்வதற்கும்.
இது முற்றிலும் இலவசமான சேவை!!



# For All Your Real Estate Needs..

## Lucky Draw for New Car Will be on August ,2007




**Buy or Sell through us before August15, 2007 and win a New Car****



**Ravi Raveendran**
Broker
**416.817.8479**




- Beautiful Freehold Town House
- Well Maintained House
- HugeBack Yard
- Close To All Amenities
- Call **Ravi** For Details....

**Grocery Store For Sale**

- Well Established Business
- Fifteen Years At Same Plaza
- Very Good Steady Customers
- Good Profitable Business
- Call **Justin** For Details...



**Justin William**
Broker
**416.803.7344**





- 5Year New 3Bedroom Home
- High Demand Location
- Great Floor Plan W/Open Concept
- Steps To Steeles, Ttc, Schools
- Call **Ravi** For Details....




- Brand New Home
- Excellent Layout
- More Than 2000 Sq.Ft
- Oak Strip Hardwood Floor
- Call **Ravi** For Details....




- Profitable Business To Own
- Good Lotto 6/49 Commission
- Sears Catalog Store Commission
- Surrounded By Lots Of Apartments
- Call **Justin** For Details....





- Well Known Bakery
- 10 Years Established Business
- Price Includes The Daisy Mart
- All Bakery Machineries Included
- Call **Justin** For Details...

## HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated





வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான கடன் உதவி பெற அழையுங்கள்


**CEYLINGO FINANCIAL GROUP.**

# 416.430.0111

2929 Lawrence ave east, suite 203
Scarborough, ON M1P 2S8



**Siva Ratnasingam**
Mortgage Consultant
**416.430.0111**



**Karuna Gobalapillai**
Mortgage Consultant
**416.430.0111**

invis

digi Media Creations - 416.467.4952

# பச்சைக் கொள்கலன்
## Green Bin



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

வீடு பத்திரிகை மூலம் இணைந்து பல தகவல்களை பரிமாறிக் கொள்ளும் வாசகர்களுக்கு வணக்கம். திறமையாகவும் பொறுமையாகவும் தேடிய சொத்துக்களின் அடிப்படை முதலீடாம் வீட்டில், நாம் தெரிந்து கொள்ளவும் அறிந்து கொள்ளவும் பல சுவையான தகவல்களை மாதாந்தம் வழங்கிவரும் வீட்டாருக்கும் நன்றியுடன்.

கோடைகாலக் களியாட்டங்களில் நேரங்கள் செலவாகி, மீதமிருக்கும் பரபரப்பு வாழ்க்கையில், வீட்டுப் பராமரிப்பு என்பது பின்தள்ளப்பட்டுவிடுகின்றது. இருப்பினும் வாராவாரம் குப்பைகள் கழிவுகளை அகற்றுவது எமது கடமையும் அத்தியாவசியமும் கூட. இவை சம்பந்தமாக மாநகர அமைப்புகள் தவறாமல் தகவல்கள் வழங்கினாலும் நாம் கவனக்குறைவாக இருப்பதனால் அதன் பூரண உபயோகங்களை இழப்பதுடன், சமயத்தில் தண்டனைக்கும் உள்ளாகின்றோம். இது பற்றி சற்று விரிவாக ஆராய்வதே இன்றைய இந்தக் கட்டுரையின் நோக்கம்.

2003ஆம் ஆண்டளவில் ரொறன்ரோ மாநகரம் “Green Bin” முறையினை அறிமுகப் படுத்தியது. மார்கழி 2002இல் அரசுக்குச் சொந்தமான “Keel valley landfill” நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து நகருக்குள் சேரும் கழிவுகள் அனைத்தும் அமெரிக்காவில் (மிச்சிக்கன்) தனியார் பகுதி ஒன்றிற்கு எடுத்துச் செல்லப் படுகின்றது. இதனால் கழிவு அகற்றும் பிரிவு முன்னரைவிடவும் 3 மடங்கு செலவீனத்தை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது மட்டுமல்லாது குப்பை கூழங்களை நொதிக்கச் செய்வதன் மூலம் பெறப்படும் இயற்கை வாயுவின் உற்பத்தியையும் நாம் இழக்கவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. இதனைக் கருத்திற்கொண்டு, இயற்கை (Organic) கழிவுகளை தனிமைப் படுத்துவதன் மூலம் மூன்றில் ஒரு மடங்கு கழிவுகளை எடுத்துச் செல்லும் செலவீனத்தினை கட்டுப்படுத்து வதற்காகவும் சுமார் 2010ஆம் ஆண்டளவில் முற்றிலுமாக கழிவுகளை மீள் உபயோகப்படுத்தக்கூடிய வகையில் நடை முறைப்படுத்துவதையும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதே இந்த ‘பச்சைக் கொள்கலன்’ முறை.




தற்போதைய நடைமுறையில் தனிக் குடியிருப்புக்கள் இந்த முறையைக் கையாளத் தொடங்கியுள்ளன. தொடர்மாடிக் கட்டிடங்கள் மற்றும் வணிக-தொழிற்சாலைப் பகுதிகள் தனியார் துறையினரையே சார்ந்திருப்பதால் இம்முறை அவர்களுக்குப் பொருந்தாது. தனிக் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் மாநகரத்தினால் இரண்டு பச்சைநிறக் கொள்கலன்கள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலதிகமாக தேவைப் படுபவர்கள் வாங்கிக் கொள்வதற்கும் வசதிகள் செய்து தரப்பட்டிருந்தது. இவ்வாறு பெறப்பட்ட கொள்கலன்களின் பாவனைமுறையைப் பார்ப்போம்.

இரண்டு வகை பச்சைநிறக் கொள்கலன்களில் சிறியதாக உள்ளதை சமையல் அறையிலும் மற்றையதை வீட்டிற்கு வெளிப்புறத்திலோ அல்லது கார் தரிப்பிடத்திலோ வைக்கலாம். சிறிய கொள்கலனில் கழிவுகள் நிரம்பியவுடன் அதனை மற்றையதிற்கு மாற்றி சேகரிக்கலாம். இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற இயற்கைக் கழிவுப் பொருட்கள் வாரம் ஒருமுறை எடுத்துச் செல்லப்படுகின்றது. ஏனையவை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பெறப்படுகின்றது. கீழேயுள்ள அட்டவணையின் பிரகாரம் எவ்வாறான கழிவுகளைச் சேகரிக்கலாம், எவற்றையெல்லாம் விலக்கலாம் என்று பார்ப்போம்.

இவை மட்டுமல்லாமல் (Recycle Bin) மீள் உபயோகிப்புப் பொருட்களை அதற்கென உரிய நீலநிறக் கொள்கலன்களில் தனியாக சேகரிப்பதன் மூலமும் கழிவுகள் சேரும் தொகையினை கணிசமாகக் குறைக்கலாம்.

கழிவுகளை உரிய முறையில் வகைப் படுத்திச் சேகரிக்காவிட்டால், ரொறன்ரோ, கழிவகற்றும் பிரிவினரால் வழங்கப்படும் தண்டனை, பணமாக அறவிடப்படும். முன் ஏற்பாடாக இருப்பதன் மூலம் பின்விளைவுகளைத் தவிர்க்கலாம். ஒவ்வொரு வருட இறுதியிலும் எதிர்வரும் வருடத்தில் உங்கள் பகுதிகளில் எந்தெந்த திகதிகளில் சேகரிப்புக்கள் இடம்பெறும் என்பதை தெளிவாக “Calendar” முறையில் மாநகரங்கள் வழங்குகின்றன. பாதுகாத்து அதன் அடிப்படையில் குறித்த திகதிகளில் உரிய கழிவுகளை அகற்றிக் கொள்ளுங்கள்.

வீட்டில் பழுதடைந்த அடுப்பு மற்றும் குளிர்சாதனப்பெட்டி போன்ற பொருட்களை அகற்றுவதற்கு முற்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள். பதிவுசெய்யாமல் வைக்கப் படும் பொருட்கள் நீண்ட நாட்கள் தெருவோரத்திலேயே இருக்கவேண்டிய நிலை ஏற்படும்.

வீடு திருத்தல் வேலைகளின் போது ஏற்படும் கழிவுகளை அகற்றுவதற்காக வருடத்தில் இரண்டு தடவைகள் இலவசமாக முற்பதிவு செய்து அதற்கென உரிய இடங்களில் கொண்டு சென்றுபோடலாம். உங்களுடைய மாநகர கலண்டரில் உள்ள தொலைபேசியில் தொடர்பு கொண்டு அருகிலுள்ள பகுதியினை அறிந்து கொள்ளுங்கள்.

மேற்படி தகவல்கள் பயனுள்ளதாக அமையுமென்று எண்ணி மீண்டும்வரும் இதழ்களில் இணைந்து கொள்வோம்.

■ ■ ■




ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER — Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations
Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
| --- | --- | --- |
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| | Roller Shades | And More |
| (We Do Any Colour Of Paint & Stain) | And More | |



Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# Commercial & Residential For Sale



## Chandran Sornalingam
Broker
**Cell: 416-722-1654**
**Bus: 416-284-4751 (24 Hrs.)**

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED


Platinum Award 2006

**Toronto**

**$ 390,000**
Established Chicken Business
Regular Clientele.

**Brampton**

**$ 250,000**
Dry Clean/Laundry
Established Business
Good for owner/Operator

**Mississauga**

**$ 375,000**
Profitable Restaurant
Regular Clientele
Good lease Term

**Toronto**

**$ 280,000**
Beaches Area
Established Pub
Excellent Rent

**Toronto**

**$ 150,000**
Excellent Location
Fine Dining Restaurant
Profitable Business

**Aurora**

**$ 140,000**
Makes Money
Good Location

**Burlington**

**$ 300,000**
Outstanding Bar & Grill
Excellent Location
Makes Money

**Oakville**

**$ 300,000**
English Pub
Location ! Location !
Established Business

**Sold Franchises**

**Fox & Fiddle**
**Toronto, Pickering**
**Waterloo, Uxbridge**
**And New market**

**Finnegan's Wake Oakville**
**Albert's Parlour Toronto**
**Stone house Scarborough**
**Heritage Champions Markham**

**Crown & Anchor Brampton**
**Macleod's Hamilton**
**Gator Ted's Burlington**
**West way Market**



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப்
பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை
நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS**
**UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# கடன் அட்டைகளும் நாமும்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

குறித்து கவனமாக இருங்கள். அநேக சந்தர்ப்பங்களில் நீங்கள் வெறுமனே கடன் அட்டையை வைத்திருந்தாலே $50 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைச் செலுத்த வேண்டியிருக்கும்..

ஆரம்ப சலுகைகளைக் (introductory offers) குறித்து எச்சரிக்கையாக இருங்கள். குறைந்த வீதத்துடன் ஓர் கடன் அட்டை உங்களுக்குத் தபாலில் கிடைக்கப் பெறலாம். ஆனால் இது மூன்றிலிருந்து ஆறு மாதத்திற்குள் காலாவதியாகலாம். 'ஆரம்ப சலுகை' முடிவுற்றதும், வட்டி வீதம் எப்போது எவ்வளவால் அதிகரிக்கின்றது என்பதை கவனியுங்கள். காலாவதியாவதை நீங்கள் நினைவில் வைத்திருக்காவிடினும், கடன் அட்டை கம்பனி நினைவில் வைத்திருக்கும்.

கடன் அட்டை கொடுப்பனவுகளை உங்களால் செலுத்துவது கடினமாக இருந்தால்,

### உங்கள் பொழுது போக்கு செலவுகளைக் குறையுங்கள்

உங்கள் கடன் அட்டை கம்பனியை தொலைபேசியில் அழையுங்கள். உங்களுடன் மீள் செலுத்துகையை ஒழுங்கமைக்க (Repayment Schedule) அவர்கள் விரும்புவார்கள்.

ஓர் வரவுசெலவுத் திட்டத்தை (Budget) உருவாக்கி அதன்படி செலவுகளை ஒழுங்கமையுங்கள். எல்லோரும் தவறிழைப்பதுண்டு. அதனால் கடன் உங்களைத் தொடர்வதுடன், வீட்டிற்கான ஈட்டுக்கடன் (Mortgages) அல்லது கடன்களைப் பெறும் போது உங்களது தகுதியை (eligibility) பாதிக்கும்.

கடன் பிரச்சனைகளால் பாதிக்கப்படும் போது கடன் ஆலோசனை சேவைகளை (Credit counseling services) நாடுங்கள்.

### கடன் அறிக்கையும் (Credit Report) கடன் அறிவிக்கும் நிறுவனங்களும் (Credit Reporting Agency)

ஒரு சிறப்பான கடன் வரலாற்றை (Credit History) தாபித்து பேணிக்கொள்ளுங்கள். நேர்மையானதும் திருத்தமானதுமான கடன் பரிமாற்ற சட்டத்தின் கீழ் (Fair and Accurate Credit Transactions Act (FACT Act)) கடன் அறிவிக்கும் நிறுவனங்கள் ஒவ்வொன்றிடமிருந்தும் 12 மாதங்களுக்கு ஒரு தடவை இலவசமாக கடன் அறிக்கையை (Credit report) கோரி பெற்றுக் கொள்ளலாம்.

கடன் அறிக்கைகளானவை தனிப்பட்டோரின் தகவல், தொழில் தொடர்பான தகவல், சம்பளம் பற்றிய வரலாறு, கடன் வழங்குவோரின் பட்டியல், உங்களது எந்த ஒரு வங்குரோத்து நிலையோ (bankruptcies) அல்லது நீதிமன்ற வழக்குகள் (lawsuits) என்பவற்றுடன் உங்கள் கடன் வரலாறு பற்றிய விசாரணைகள் எதுவும் இருந்தால் அவற்றையும் உள்ளடக்கும். காலத்திற்குக் காலம் நீங்கள் Equifax, Trans Union, Experian ஆகிய பிரதான கடன் அறிவிக்கும் நிறுவனங்களிடமிருந்து உங்கள் கடன் அறிக்கை (credit Report) பற்றிய பிரதியைப் பெற வேண்டும். நீங்கள் பாரிய ஒரு கொள்வனவைச் செய்யப் போகின்றீர்கள், ஒரு கடனுக்கு விண்ணப்பம் செய்யப் போகின்றீர்கள், அல்லது தொழில் மாறப் போகின்றீர்கள் எனும் சந்தர்ப்பங்களில் நீங்கள் பிரதி (Copy) ஒன்றைக் கோரலாம். உங்கள் கடன் அறிக்கை பற்றிய பிரதி ஒன்றை உங்களுக்கு வழங்குவதற்கு கடன் அறிவிக்கும் நிறுவனங்களால் ஒரு நியாயமான கட்டணம் விதிக்கப்படலாம். நீங்கள் ஓர் பிரதியைப் பெற்றுக் கொள்ள தொலைபேசியை அல்லது இணையத்தைப் பயன்படுத்தலாம். இதற்காக நீங்கள் ஓர் கடிதம் எழுத வேண்டுமெனில் ORDER FORM FOR CREDIT REPORT .html என்பதை இவற்றின் இணையத் தளங்களில் அழுத்துவதன் மூலம் நீங்கள் பயன்படுத்தத் தேவையான கடிதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

### கடன் அறிவிக்கும் நிறுவனங்களின் விலாசங்களும் தொலைபேசி இலக்கங்களும்:

Equifax.
Equifax Canada Inc.
Consumer Relations Department
Box 190 Jean Talon Station
Montreal, Quebe
H1S 2Z2

தொலைபேசி இலக்கம்: 514-493-2314
அல்லது 1 800 465 7166
இணையத்தள முகவரி: www.Equifax.com

Trans Union.
TransUnion Canada
Consumer Relations Center
PO Box 338, LCD 1
Hamilton, Ontario
L8L 7W2
தொலைபேசி இலக்கம்:
1-800-663-998அல்லது (905) 525-0262
இணையத் தள முகவரி:
www.Transunion.com

குவிபெக்கில்(Quebecஉள்ளவர்களுக்கான
Trans Union முகவரி
Trans Union (Echo Group)
1600 Henri Bourassa Boul Ouest
Suite 200
Montreal, PQ
H3M 3E2
தொலைபேசி இலக்கம்: 1-877-713-3393
அல்லது (514) 335-0374

### கடன் கோப்பு (Credit file) என்றால் என்ன?

நீங்கள் முதன்முதலில் பணத்தைக் கடனாகப் பெறும் போது அலலது கடனுக்கு விண்ணப்பம் செய்யும் போது, உங்கள் கடன் கோப்பானது உருவாக்கப்படுகின்றது. ஒழுங்கான அடிப்படையில், பணத்தைக் கடனாக வழங்கும் அல்லது கடன் அட்டைகளை வழங்கும் கம்பனிகள் - வங்கிகள், நிதிக் கம்பனிகள், கடன் ஒன்றியம் (Credit unions),சில்லறை வியாபாரிகள் (Retailers) - ஆகியோர் கடன் அறிவிக்கும் நிறுவனங்கட்கு (Credit reporting agencies) நீங்கள் அவர்களுடன் கொண்டுள்ள நிதிபரிமாற்றங்களுடன் தொடர்பான குறிப்பிட்ட உண்மையான தகவல்களை வழங்குவார்கள். உதாரணமாக, இது உங்கள் கடன் அட்டைகளை அல்லது வெவ்வேறு கடன் முறைகளை (lines of credit) நீங்கள் அவற்றைக் கட்டினீர்களா? இல்லையா என்ற தகவலை உள்ளடக்கும். நீங்கள் வங்குரோத்து (Bankrupcy) நிலைக்கு சென்றிருந்தால் இதுவும் இதனுள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

நுகர்வோர் கடன் அறிக்கை எத்தகைய தகவலைக் கொண்டிருக்கும்?

### நுகர்வோர் கடன் அறிக்கை வெவவேறு தகவல்களைக் கொண்டிருக்கும். அவற்றை மேலோட்டமாக நோக்குவோம்.

தனிப்பட்ட இனங்காணல் (Personal identification): உங்கள் பெயர், விலாசம், பிறந்த திகதி, சமூக காப்புறுதி இலக்கம் (Social Insurance Number (SIN) போன்ற அடிப்படை இனங்காணும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

கடன் அறிக்கை கோரப்பட்டமை: கடந்த 3 வருடங்களில் உங்கள் கடன் கோப்பின் பிரதியைக் கோரிய எல்லா தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்களின் பெயர்களும் பட்டியல்படுத்தப்படும்.

பொது பதிவு தகவல்கள் (Public Reord Information) – அடைமானக் கடன்கள் (secured loans), வங்குரோத்துக்கள் அல்லது வழக்குத் தீர்ப்புகள் பற்றிய தகவல்களைக் கொண்டிருக்கும்.

கடனைச் சேகரிக்கும் மூன்றாம் தரப்பு நிறுவனம்:(Third - Party Collection Agency) ஓர் கடனைத் தீர்ப்தற்கு முயலும் சேகரிக்கும் நிறுவனத்துடன் கொண்டிருக்கும் தொடர்பு பற்றிய தகவலை உள்ளடக்கும்.

கொடுக்கல் வாங்கல் பற்றிய தகவல்: உங்கள் கடன் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகவல்களை வழங்குவதுடன், பணக்கொடுப்பனவுகள் (Payments) குறித்த நேரத்தில் செய்யப்பட்டதா என்பதைக் காட்டும். இந்த விடயங்கள் ஒவ்வொன்றும் ஓர் கடன் வழங்குனரால் மதிப்பீடு (evaluate) செய்யப்படும் இந்த மதிப்பீடுகள், தொழிற்சாலை நியம அளவீட்டினை (Industry standard rating ) அடிப்படையாகக் கொண்டவை. இதன் அளவீடுகளை R0 இலிருந்து R9 வரை ஒப்பிடுவார்கள்.

R0 ஆனது நீங்கள் முதன் முதலில் கடன் அட்டையைப் பெற்றவராகவோ அல்லது பெற்றும் அதனைப் பயன்படுத்தாதவராகவோ இருப்பீர்கள்.

R1 எனும் போது நீங்கள் கொடுக்கப்பட்ட கால இடைவெளிக்குள் கடனை முறைப்படி செலுத்தியவராகவோ இருப்பீர்கள். இதுவே சிறந்த அளவீடாகக் கணிக்கப்படும். R9 ஆனது ஓர் முறையற்ற கடன் செலுத்துபவராக (bad debt) அல்லது வங்குரோத்து (bankruptcy) நிலைக்குச் சென்றவராக கணிக்கப்படும்.

### நுகர்வோர் கூற்று

### (Consumer statement)

உங்கள் கோப்பில் உள்ள எந்த தகவலையும் பற்றிய சுருக்கமான குறிப்பை நீங்கள் சேர்க்க முடியும் இடம் இதுவாகும். உதாரணமாக உங்களிடம் R9 அளவீடு இருந்தால், நீங்கள் நோய், தற்காலிக வேலையின்மை அல்லது வேறு தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களால் பாதிக்கப்பட்டிருந்தால், அதனை கடித மூலம் விபரித்து, கடன் அளவீட்டினை (Credit rating) நல்ல நிலைக்குக் கொண்டு வர முடியும்.

### எவ்வாறு இந்த தகவல் சேகரிக்கப்படுகின்றது? யார் இதை வைத்திருக்கிறார்கள்? (How is this information gathered and who keeps it?)

கடன் தகவல்கள் கடன் அறிவுறுத்தும் நிறுவனங்களால் சேகரிக்கப்படுகின்றது. சில சமயம் கடன் அலுவலகங்களால்

29ம் பக்கம் பார்க்க...

## இம் மாத முக்கிய குறிப்புக்கள்

- இம் மாதம் 17ஆம் திகதி தந்தையர் தினத்தை (Father's Day) கொண்டாட ஆயத்தமாகுங்கள்.
- வெப்பமேற்றும் கருவிகளை (furnance) பரிசோதித்து, தேவையெனில் திருத்தம் செய்யுங்கள் (service).
- தீயணைப்புக் கருவியின் (fire extinguishers) குழாயின் வாயில்கள் அடைபடாமல் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- உங்கள் வீட்டு யன்னல்களை உட்புறமும் வெளிப்புறமும் கழுவி துப்பரவு செய்யுங்கள்.
- HVAC( Heat, Ventilation, and Air Condition Filter) இன் வளி வடிகட்டியினூடாக (air filter) வளிமண்டல மாசுகள் வீட்டினுள் சுற்றோட்டத்திற்குட்படாதவாறு உற்பத்தியாளரால் விதந்துரைக்கப்பட்டபடி, சுத்திகரியுங்கள்.
- வீட்டிற்கு வெளியே பயன்படுத்தும் பொழுதுபோக்கு உபகரணங்கள் அனைத்தும் வேலை செய்யக் கூடிய நன்னிலையில் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, கராஜை தன்னிச்சையாகத் திறக்கக் கூடிய கருவியை (Garage Door Opener) பரிசோதிக்குக.
- வெப்பத்தை விரும்பும் பூக்கும் தாவரங்களான செவ்வந்தி, லில்லி, மணிவாழை, ரோஜா, கோழிக் கொண்டை, கோலியாஸ் ஆகியவற்றை நாட்டுங்கள்.
- இலையுதிர் காலத்திற்குரிய பூக்கும் தாவரங்களான ரியூலிப்ஸ் (tulips), டபொடில்ஸ் (daffodils), ஆகியவற்றின் கிழங்குகளை பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.
- ரோஜாச் செடிகளுக்கும் புற்தரைகளுக்கும் பசளை இடுங்கள்.
- அளவுக்கு அதிகமான நீர் விடாதீர்கள். அதிகமாக நீர் விடுவதால் நீர் தேங்கி நிற்க வழிவகுக்கும்.
- அதிகாலையில் நீர் விடுவதால், உங்கள் தாவரங்கள் நீரை உறிஞ்சுவதற்கு போதுமான காலம் இருப்பதால், இருட்டுவதற்கு முன்னர் நிலம் வரண்டு விட வழி ஏற்படுகின்றது.
- உங்கள் தோட்டத் தரைகளில் களைகள் (Weeds) காணப்படுகின்றதா என்பதை பரிசோதித்து, உடனடியாக அவற்றை அகற்றுவதற்குரிய நடவடிக்கை எடுங்கள்.



RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES
PAKEER
PAKERATHAN SAHADEVAN
Licensed Insurance Agent

வீடு வாங்க விற்க
Life Insurance (All kinds),
RESP/RRSP

Direct : 416.908.6003

Century 21
AFFILIATE REALTY INC.
BROKERAGE*
208-80 Corporate Drive,
Toronto, ON. M1H 3G5
Office : 416.290.1200

PAKEER
தொழில் இடத்தின் குத்தகை விலை வழக் கமாக, குறுகிய அளவில் சராசரி டொலர் 5.72 SFN விலையைவிட ஒரு வீதம் குறை வாகும். வர்த்தக இடம் சராசரி டொலர் 15.00 SFN ஆக அதே காலப்பகுதியில் வந்தது, வர்த்தக இடம் சராசரி டொலர் 15.03SFN ஆகச் சென்ற ஆண்டு இதே காலப்பகுதியில் இருந்த விலையைவிட 43SFN வீதம் அதிகமாகும்.

### விற்பனைச் சந்தையின் சிறப்பு

மார்ச் மாதம் 66 இடங்கள் விற்பனையான-தாக TREB அங்கத்தவர்கள் அறிவித்தனர். இத்தொகையில் சகலஅளவிலான தொழில் இடங்கள் 35. இவை சராசரி டொலர் 98.60 சதுர அடியாக விற்கப்பட்டன. இது ஏறக் குறைய ஒரு சதுர அடிக்கு டொலர் 99.59க் குச் சமமாக இருந்தது.

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL

வீடுகள்
தொடர்மாடி வீடுகள்
தொழிற்சாலைகள்
வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416•291•3997


LOKAN SUNDARAM
Broker
416-450-3984

Win.Church/Tradwind

$374,900
- 4 Bedrooms
- 3 Washrooms
- Deck w/gazebo
- 4-6 person Spa
- Finished Basement

Midland/Lawrence

$173,000
- 2 Bedrooms
- 2 Washrooms
- Steps to TTC & LRT
- New Broadloom (2006)
- New Washrooms

Meadowvale/Sheppard

$234,000
- 3 Bedrooms
- 2 Washrooms
- Beautiful Condo Townhouse
- Finished Basement
- Fantastic for Young Family

CALL US FOR DETAILS!


ELAN KANDASAMY
Sales Rep.
416-562-5736

Midland/Lawrence

$176,900
- 2+1 Bedrooms
- 2 Washrooms
- Corner Unit
- Large Kitchen
- Steps to TTC

Steeles/Stains


$475,900
- 4 Bedrooms
- 4 Washrooms
- 2700 Sq.F, 3 1/2 yrs.old
- Exterior Potlights
- Close to all Amenities

Kennedy/401

$166,900
- 3 Bedrooms
- 2 Washrooms
- Very Demanding Location
- Open Balcony
- Well Maintained


KATHIR KANDIAH
B.A ,Math Spec.Trai.
Sales Rep.
416-230-6462

HOMELIFE FUTURE REALTY
Office: 416-264-0101
Fax: 416-261-1519
262 Markham Road
Toronto, Ontario
M1J 3C5

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

# மங்காத கடன் என்று சங்கே முழங்கு



பெரி முத்துராமன்
- Senior Prsonal Banking Officer -

சென்ற இதழைப் படிக்காமல் விட்டவர்களுக்காக சில தகவல்களை மீண்டும் கூறி, கட்டுரையை மேலே தொடர்வோம். 'இன்று வாங்குங்கள், நாளைக்குப் பணம் கொடுங்கள்' என்ற வாய்ப்பை எப்போதாவது பயன்படுத்தியிருந்தால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திய நாளிலிருந்து உங்கள் கடன் சரிதம் கனடாவில் ஆரம்பமாகின்றது. உங்கள் கடந்தகால கடன் கட்டிய தன்மைகளின் சுருக்கமே கடன் சரிதம் என்று சொல்லலாம். கடன் சரித்திரத்தைப் பராமரிக்கும் நிறுவனங்கள் உங்கள் மொத்த நடவடிக்கைகளுக்கும் என ஒரு மதிப்பெண்ணைக் கொடுக்கின்றன. அதுதான் கிரடிட் ஸ்கோர் அல்லது கடன் மதிப்பெண் ஆகும். மொத்த கிரடிட் ஸ்கோர் தவிர, ஒவ்வொரு கடனையும் எவ்வாறு கட்டி வந்துள்ளீர்கள் என்பதை ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் ஆன எண்ணின் மூலம் தெரியப்படுத்துவார்கள். இந்த எண்களுக்கு முன்னால் ஆங்கில எழுத்தான R அல்லது O அல்லது I ஐ உபயோகப்படுத்துவார்கள். R என்றால் Revaluing -திரும்பத் திரும்பப் பெறக்கூடிய கடன்- என்று அர்த்தம். O என்றால் Open அதாவது திறந்த கடன் என்று அர்த்தம். I என்றால் Installment அல்லது தவணைக் கடன் என்று அர்த்தம். உதாரணத்திற்கு R0 விலிருந்து R9 வரை குறியீடுகள் இருந்தால் என்ன அர்த்தம் என்று பார்ப்போம்.

R0- மிகப்புதிய கணக்கு - மதிப்பிடப்படவில்லை

R1- தவணைத் தேதிக்குள் பணத்தைக் கட்டிவருகிறார். அல்லது தவணைக்குக் கட்டுதல் உரிய தேதியிருந்து 30 தினங்களைத் தாண்டவில்லை.

R2- தவணைப் பணம் உரிய தேதியிலிருந்து 30க்கு மேல் 60 தினங்களுக்குள் கட்டப்பட்டிருக்கிறது.

R3- தவணைப் பணம் உரிய தேதியிலிருந்து 60க்கு மேல் 90 தினங்களுக்குள் கட்டப்பட்டிருக்கிறது.

R4- தவணைப் பணம் உரிய தேதியிலிருந்து 90க்கு மேல் 120 தினங்களுக்குள் கட்டப்பட்டிருக்கிறது.

R5- தவணைப் பணம் 120 தினங்கள்வரை கட்டப்படவில்லை. இன்னும் R9க்கு மாற்றப்படவில்லை.

R6- கிடையாது.

R7- கடனைத் திருப்பிச் செலுத்தும் ஒப்பந்தத்தின் கீழ் கடனைச் செலுத்தி வருகிறார்.

R8- தாமாகவோ, வலுக்கட்டாயமாகவோ கடன் கொடுக்கப்பட்ட பொருள், கடன் கொடுக்கப்பட்டவரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டது.

R9 - மோசமான கடனாளி, வசூலிப்புக்கு (கலெக்சனுக்கு) கொடுக்கப்பட்டுள்ளது, வங்குரோத்து, புதிய விலாசம் தெரிவிக்கவில்லை. கடன் வசூலிக்கப்பவில்லை.

**அடுத்தபடியாக கடன் மதிப்பெண்ணைப் பற்றிப் பார்ப்போம்.**

கடன் மதிப்பெண் என்பது உங்கள் நிதிநிலைமையைப் பற்றிய தீர்ப்பாகும். இது ஒரு காலகட்டத்தில் உள்ள உங்கள் நிதி ஆரோக்கியம் பற்றியது. இது நிலையானது அல்ல. உங்கள் நிதி ஆரோக்கியம் அல்லது நிலைமை மாற மாற இந்த மதிப்பெண்ணும் மாறும். இது முன்பைவிட கூடவும் செய்யலாம். குறையவும் செய்யலாம். இந்த மதிப்பெண்ணை வைத்தே நீங்கள் எத்தகையவர் என்று கடன் கொடுப்பவர் தீர்மானிக்க முயல்கின்றார். இந்த மதிப்பெண்கள் கனடாவில் 300 லிருந்து 900க்குள் இருக்கும். மதிப்பெண் கூடக் கூட நீங்கள் கடன் பெறத் தரமான தகுதியான நபர் என்று தீர்மானிக்கப் படுகின்றீர்கள். கடன்மதிப்பெண் குறையக் குறைய உங்களின் தரமும், நம்பகத் தன்மையும் கடன் கொடுப்பவரால் குறைத்து மதிப்பிட வாய்ப்பு அதிகம் உள்ளது. எதன் அடிப்படையில் இந்தக் கடன் மதிப்பெண் தீர்மானிக்கப்படுகின்றது என்று நீங்கள் அறிய விரும்பலாம்.

**அவற்றில் சிலவற்றை இங்கே பார்ப்போம்.**

கடனை எவ்வாறு கடந்த காலத்தில் கட்டிவந்துள்ளீர்கள்? தவணையை எப்போதாவது தவற விட்டுவிட்டிருக்கிறீர்களா? ஒரு மாதத்திலிருந்து மற்றொரு மாதத்துக்குக் குறைந்த அளவு பணத்தைக் கட்டுவதன் மூலம் கடன் அட்டைகளில் இருப்பு அல்லது மீதம் வைத்திருக்கிறீர்களா?

கடனை ஒழுங்காகக் கட்டி வருதல், தவணைத் தேதிக்கு முன்னர் கட்டல், கடன் அட்டைக்கு மாதா மாதம் முழுத் தொகையையும் தவணைத் தேதிக்கு முன்னர் கட்டிவிடல் போன்றவை உங்கள் கடன் மதிப்பெண்ணை அதிகரிக்கச் செய்யும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு எதிராக ஏதேனும் வசூலிப்பு அல்லது வங்குரோத்து விபரங்கள் உள்ளனவா? அப்படி இருந்தால் கடன் மதிப்பெண் குறையும் என்று சொல்லவும் வேண்டுமா? உங்கள் கடன்களின் இருப்பு எவ்வளவு? எப்போதுமே உங்கள் கடன் விளிம்பைத் தொட்டுக் கொண்டு இருக்கின்றதா? ஒரு வருக்கு வங்கியில் லைன் ஆப் கடன் பத்தாயிரம் டொலர்களுக்கு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவருடைய இருப்பு எப்படி இருந்தால் கடன் மதிப்பெண் கூடும் அல்லது சராசரியாக இருக்கும் அல்லது குறையும் என்று விளக்குவோம்.

இருப்பு எப்போதுமே 6,500 அல்லது 7000க்குக் குறைவாக இருக்கும் பட்சத்தில் அவருடைய கடன் மதிப்பெண் கூடும். பத்தாயிரத்துக்குக் குறைவாக எப்போதுமே இருக்கிறது. ஆனால் அடிக்கடி பத்தாயித்தைத் தொடுகின்றது. ஆனால் பத்தாயிரத்தைத் தாண்டவில்லை. கடன் மதிப்பெண் சராசரியாக அல்லது மத்திமமாக இருக்கும். வட்டியின் காரணமாக பத்தாயிரத்தைவிட இருப்பு அதிகம் வந்துவிட்டது. உதாரணத்திற்கு 10,100 என்று வைத்துக் கொள்வோமே. இவருக்குக் கட்டாயம் கடன் மதிப்பெண் குறையும்.

நீங்கள் எவ்வளவு காலமாக கடன்களைப் பராமரித்து வருகிறீர்கள்? உங்கள் கடன் சரிதம் எவ்வளவு புதியது? அல்லது பழையது? நீண்ட காலமாக கடன் சரிதத்தை நல்லமுறையில் பராமரித்து வருகிறவர்களுக்கு கடன் மதிப்பெண் கூடும் என்று சொல்லவும் வேண்டுமா?

சமீபகாலத்தில் எத்தனை நிறுவனங்கள் உங்கள் கடன் சரிதத்தைப் பார்த்தன? இதற்குத்தான் அடிக்கடி கடன் மற்றும் கடன் அட்டைகளுக்கு விண்ணப்பிக்கக் கூடாது என்பது. ஒரு உதாரணத்திற்குச் சொல்கின்றேன். ஒரு வருடத்தில் 3 நிறுவனங்கள் உங்கள் கடன் சரிதத்தைப் பார்த்தன என்றால் உங்கள் மதிப்பெண் ஒன்றும் பாதிக்கப்பட மாட்டாது. அப்படி இல்லாமல் பல நிறுவனங்கள் பார்த்திருந்தால் கடன் மதிப்பெண் நிச்சயம் பாதிக்கப்படும்.

நீங்கள் எத்தகைய கடன்களை உபயோகிக்கிறீர்கள்? உங்கள் கடன்களின் தன்மை என்ன? சாதாரணமாக ஒருவர் உபயோகிக்கக் கூடிய கடன்கள், கடன் அட்டைகள் அல்லது தவணைக் கடன்கள் மற்றும் லைன் ஆப் கடன் சில சமயங்களில் கார் போன்றவற்றை குத்தகைக்கு எடுத்திருந்தால் அதுவும் கடனில்வரும். இவற்றில் வட்டி குறைந்த கடன்கள் உங்கள் மதிப்பெண்ணை உயர்த்தும், வட்டி கூடிய கடன்கள் மதிப்பெண்ணைக் குறைக்கும் என்பதையும் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

இன்னும் பயன் உள்ள விபரங்களை அடுத்த மாதம் பார்ப்போம் (தொடரும்)

VJ'S
RENOVATION & CARPET CLEANING



• HARDWOOD FLOORING
• PLUMBING
• BASEMENT WORKS
• ELECTRICAL WIRING
• CARPET CLEANING (RESIDENTIAL/COMMERCIAL)
• TOTAL RENOVATION

CONTACT: VJ. KUMAR
647.588.2880

பெரி. முத்துராமன்
நிதித்துறை ஆலோசனைகளுடன் கூடிய சேவை
Scotiabank™
Perrii Muthuraman
MBA, M.Comm, PFP
Senior Personal Banking Officer
Direct Line: 416.439-3040 x:2008

## உலகத்தமிழர் சமூகநூலகம் விடுக்கும் அறிவித்தல்

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கான பகிரங்க வேண்டுகோள்

அன்புடையீர்!

நூலகத்தினைப் பயன்படுத்துதல்

ஆசிரியர்களும், கல்விகற்கும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் எமது நூலகத்தில் 13,500க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நீங்கள் ஒவ்வொருவரும் நூலகத்துக்கு வருகைதந்து நூல்களை எடுத்துப் படித்துப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இது விடயத்தில் ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் ஊக்குவிப்பு முக்கியமானதெனக் கருதுகிறோம்.

1. சிறுவர்களுக்கான நூல்கள் 1,000க்கும் மேல் உள்ளன.

2. திறமைச் சித்திபெறும் நோக்குடன் தமிழ்மொழி வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு 6,000க்கு மேற்பட்ட தமிழ்மொழி சம்பந்தமான நூல்கள் உள்ளன.

3. ஆசிரியர்கள் மற்றும் இளங்கலைத் தமிழியல் (B.A. Tamil) வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கென 7,500க்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன.

புலம்பெயர்ந்த எம் மக்கள் பயன் கருதியே இந்நூலகம் உருவாக்கப்பட்டது. அதனை முழு அளவில் பயன்படுத்தி அறிவைப் பெருக்கிக்கொள்வது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமை என்றே கருதுகின்றோம். காலம் கடந்தபின் யோசிப்பதில் பயன் இல்லை.

நிறைந்த பயன்பெற வாரீர்!

தொடர்புகளுக்கு: 416-335-0622
நூலகர், உலகத்தமிழர் சமூக நூலகம்

# உலகில் அருகிவரும் நன்னீர்....

57ம் பக்கத் தொடர்ச்சி...

அதனை தனிப்பட்ட கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து எல்லா மாநிலங்களும் பயன் பெற செய்ய எடுத்த முயற்சி கூட வெற்றிபெறவில்லை. விவசாயம், தொழிற்சாலைகளின் இயக்கம், மக்கள் பாவிப்பு போன்றவைக்கு தண்ணீர் பாவிக்கப்படுவதினால் விரயம் கட்டுக்கடங்காது போகிறது.

## நன்னீர் விரையம்

பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளில் தண்ணீரின் விரையம் பின்தங்கிய நாடுகளை விட அதிகம். உலகத்தில் இருக்கும் தண்ணீரின் அளவை மாற்றி கூடுதலாக்க முடியாது. அதன் அளவு நிரந்தரமானதொன்று. விரையத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், கிடைக்கும் நீரினை அசுத்தப்படுத்தாமல் பாதுகாப்பதன் மூலமும் தண்ணீர் பஞ்சம் ஏற்படாமல் செய்யலாம். உலகில் வாழும் 40 விகித மக்கள் தண்ணீர்ப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி, நன்னீர் கிடயாததால் பல நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகில், எட்டு செக்கண்டுக்கு ஒரு குழந்தை அசுத்த நீரினால் தோன்றும் நோய்களால் மரணமடைகிறது. சில வருடங்களுக்கு முன் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள வோக்கதொடை என்ற கிராமத்தில் கிருமிகள் நிறைந்த நீர் அருந்தி பொது மக்கள் பலர் இறந்தது பலர் அறிந்ததே. அது ஒரு அரசியல் புயலையே உருவாக்கியது. பொருளாதாரத்திலும், தொழில்நுட்பத்திலும் முன்னேறிய நாடுகளில் இது நடக்கக் கூடியதாக இருப்பின் சனத்தொகை கூடிய பின்தங்கிய நாடுகளான இந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ், சிறீலங்கா போன்ற நாடுகளின் நிலை என்ன?.வெள்ளத்தினால், காலரா போன்ற தொற்று வியாதிகள் பரவி, பலரைப் பலி-கொண்டுள்ளது என்பதை பலர் அறிவர். இந்தியாவில் பெரும்பாலும் பொதுமக்கள் மலசலம் கழித்தபின்னர், சுத்தம் செய்வதற்கு குளங்களைப் பாவிப்பது வழக்கம். கங்கை நதி ஓரத்தில் பிணங்களை எரித்தபின்னர் இறந்த ஆத்மா மோட்சம் எய்துவதற்காக கங்கை நதியில் மிதக்க விடுவர். அதே கங்கை நதியின் நீர் குளிப்பதிற்கும் பாவிக்கப்படுகிறது. இது போன்றே அசுத்தப்படுத்தப்பட்ட குளத்து நீர் பாவனைக்கு எடுக்கப்படுகிறது. இந்த நிலை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அறியாமையும் நன்னீர் தட்டுப்பாடுமே முக்கிய காரணங்களாகும். பருவகாலத்தின் மாற்றம் எவ்வளவுக்கு நீர் தட்டுப்பாட்டுக்கு காரணமாகிறது என்பதைக் கணிப்பது கடினம்.

## நன்னீரைத் தேக்கும் ஏரிகளும் அணைக்கட்டுகளும்

உலகத்தில் உள்ள சுமார் 45,000 அணைக்கட்டுகளில் பெரும்பகுதி சீனாவில் உள்ளது. அமெரிக்காவில் சுமார் 6000 அணைக்கட்டுகள் உண்டு. மேலும் மின்சார உற்பத்திக்காக அணைக்கட்டுகளை தோற்றுவிப்பது குறைந்தள்ளது. அண்மையில் சீனாவில் மிகப்பிரமாண்டமான அணைக்கட்டொன்று பதின்மூன்று வருடங்களாக கட்டப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது பல கிராமங்களுக்கான மின்சார வசதிகளை வழங்க உதவும்.

1.4 பில்லியன் லிட்டர் நன்னீர் இவ்வுலகில் மக்கள் பாவனைக்கு இருப்பினும் 0.1 விகிதமே நன்னீராக வாவிகளிலும், நதிகளிலும் இருந்து பெறக்கூடியதாகயிருக்கிறது. மற்ற நன்னீர் நிலத்துக்கடியிலும், உறைந்த பனி நிலையிலும் உள்ளது.அணைக்கட்டுகளை உருவாக்கி நதிகளை வழிமறித்து, நீரைத் தேக்கி, பின்னர் மின்சாரத்தை உருவாக்குகிறார்கள். தேக்கப்பட்ட நீரில் 19 விகிதம் மின்சார உற்பத்திக்கும். 30 முதல் 40 விகிதம் விவசாயத்துக்கும் பாவிக்கப்படுகிறது. ஏரிகளில் தேங்கி நிற்கும் நீரானது ஆவியாகி திரும்பவும் மழையாகி பூமியை வந்தடைகிறது. இந்தியாவில் அணைக்கட்டுகளை உருவாக்கும் போது பல கிராமங்கள் அழிகின்றன. சூழல் பாதிக்கப்படுகிறது. அதனால் பல அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. மக்கள் தமது வீடுகளையும் விவசாயம் செய்த நிலங்களையும் புதிய ஏரிக்குப் பலிகொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள் என்பதும், பூமி அதிர்ச்சி, பயங்கரவாதம் போன்றவையினால் அணைக்கட்டுகளுக்கு ஆபத்து ஏற்பட்டு பெருவெள்ளம் தோன்றலாம் என்பது சில அரசியல்வாதிகளின் வாதம். ஊழலினால் அணைக்கட்டு பலம்வாய்ந்ததாக அமைக்கப்படாமல் போனால் தண்ணீரின் தாக்கத்தால் உடையக்கூடிய வாய்ப்புண்டு என்பதும் ஒரு வாதம். எது எவ்வாறாயினும் கடலுக்குள் போய் விரயமாகும் நீரானது தேக்கப்பட்டு பிரயோசனமான முறையில் பாவிக்கப்படுகிறது என்பது உண்மை.

## விவசாயத்தில் நீர் விரையமாவதை கட்டுப்படுத்தல்

சரியான முறைகளைப் பாவித்து விவசாயத்திற்குத் தண்ணீர் பாய்ச்சினால் விரயத்தை தடுக்கலாம். வாய்க்கால் வழியே தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்யும் பழைய முறையினால், தண்ணீர் பெருமளவு விரயமாகிறது. செலுத்தப்படும் தண்ணிரின் அளவை கட்டுப்படுத்தமுடியாது. தாவரங்களுக்கு கொடுக்கப்படும் போசனமான நீரை ஒரேயடியாக கொடுக்காமல், தேவைக்கேற்ப சிறிது சிறிதாக, குறைந்த அழுத்தமுள்ள நீர்தெளிக்கும் கருவிகளைப் பாவிப்பதினால் விரயத்தை தடுக்கலாம். இதே போன்று நீரைப்பாவிக்கும் தொழிற்சாலைகள் Recycling முறைகளைப் பாவித்து விரயத்தைக் குறைக்கலாம். வெளியேற்றப்படும் இரசாயனப் பொருட்கள் கலந்த கழிவு நீர், நதிகளுடன் கலப்பதினால், மேலும் தொடர்ந்து நன்னீர் தட்டுப்பாட்டை அதிகரிக்கிறது. அமிலம் கலந்த மழை பொழிவதற்கும் காரணமாகிறது.

## தனியார் மயமாகும் நீர் விநியோகம்.

மக்கள் தண்ணீரைக் கட்டுப்பாடின்றி விரயமாக்குவதை தடைசெய்வதற்கு பாவிக்கும் மின்சாரத்துக்குப் பணம் அறவிடுவது போல் தண்ணீருக்கும் பணம் அறவிட பல நாடுகள் ஆரம்பித்துள்ளன. தனியார் ஸ்தாபனங்கள் இந்த பரிபாலனத்தைச் செய்வதினால், இதனை முதலாளித்துவப் போக்கென பல நாட்டு மக்களும் கண்டித்துள்ளனர். தென் ஆபிரிக்காவில் நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு, தினம் ஒரு ஆளுக்கு 50 லிட்டர் தண்ணீர் போதுமானது எனக் கணித்து, மாதம் 6000 லிட்டருக்கு அதிகமாக தண்ணீர் பாவித்தால் பணம் கட்ட வேண்டி வரும் என்ற சட்டம் வந்தது. இதை மக்கள் ஆட்சேபித்தனர். குழந்தைகள் இல்லாத இருவரைக் கொண்ட குடும்பத்தினர் இந்தச் சட்டத்தால் பயன் பெறுகிறார்கள் என்பதும், நீரானது இயற்கையின் சொத்து ஆகவே எல்லோருக்கும் பொதுவானது என்பதும் அவர்கள் வாதம். இந்த முறைப்படி தண்ணீர் விரயமாவதை தடுப்பது மட்டுமன்றி பாவனைக்கு சுத்தமான நீரை வழங்கவும் பரிபாலனம் செய்யும் ஸ்தாபனங்களின் கடமையாகும். மழை குறைந்த காலங்களில் குறிப்பிட்ட நேரங்களுக்கு மட்டுமே தண்ணீர் வழங்கிக் கட்டுப்படுத்தலாம். இதற்கான மீட்டர்கள் இல்லங்களில் பொருத்தப்பட்டு, தண்ணீர் பாவனையின் அளவு எடுக்கப்படும். 2002ம் ஆண்டு யப்பானில் நடந்த தண்ணீர் கட்டுப்பாட்டு கலந்துரையாடல் - முக்கியமாக அணைகள் கட்டுவது, குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்வது போன்ற பொறியியல் தொடர்பான விடயங்களைப் பற்றியே இருந்தது. தவிர காடுகள், நதிகள், வாவிகள், பூமிக்கடியில் உள்ள நீர் வளம் போன்றவற்றை எவ்வாறு நன்னீர் பெற பாவிக்கலாம் என்பதைப்பற்றியதாக அமையவில்லை.

## உலகம் சூடாகிறதா?

மனிதன் தனது வருங்காலத்தைப்பற்றியும் இயற்கையின் பாதிப்பைப் பற்றிச் சிந்திக்காது வாழ்கிறான். ஓசூன் துளை வான்வெளியில் தோன்றுவதற்கு அவனே காரணம். இத்துளை வரிவடையும் போது உலகம் சூடாகிறது. தொழிற்சாலைகள், வாகனங்கள் போன்றவை வெளியேற்றும் வாயுக்களே ஓசூன் துளை பெரிதாக காரணமாகிறது. பொருளாதாரம் வளர, தொழிற்சாலைகள் அவசியம். ஆனால் அதே நேரம் அவை ஓசூன் துளை பெரிதாகி, உலகின் வெப்ப நிலை கூடி, பாலைவனங்கள் விரிவடைய வழிவகுக்கிறது. மத்திய ஆபிரிக்கா, பிரேசில் போன்ற நாடுகளில் வரட்சியைத் தூண்டி விடுகிறது.

நன்னீரைப் பாதுகாக்க ஐ.நா சபையின் ஈடுபாடு முக்கியம். எல்லா நாடுகளும் தண்ணீர் விரயமாவதை தடுக்க சில பொது விதிமுறைகளை நடைமுறைக்குக் கொண்டுவரல் வேண்டும். அதில், சூழல் அசுத்தம் அடையாமல் பாதுகாப்பது, பாலைவனங்கள் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பது, காடுகள் அழியாமல் பாதுகாப்பது, பூமிக்கு அடியில் உள்ள நீர் பற்றி ஆராய்ச்சி செய்து, அதனைப் பெறும் வழிகளைக் காண்பது, அமில மழை பொழியாது தடுப்பது, நாடுகளுக்கிடையே நதிப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் நடுவர் மன்றம் ஒன்றை அமைப்பது போன்றவை அவசியமாகும்.

## நீரும் தேகநலமும்.

மனிதன் பிறந்து வளரத் தொடங்கியவுடன் நீரை மறந்துவிடுகிறான். தாகமாய் இருக்கும்போது மட்டுமே நீரை நாடுகிறான். காலையில் எழுந்தவுடன் 1 லிட்டர் நீரை (6கிளாஸ்)அருந்தும் பழக்கத்தை வைத்துக் கொண்டால், குடல் சம்பந்தப்பட்ட வியாதிகளை, பெரும்பாலும் புற்று நோய் குடலில் வராமல் தடுக்கலாம். மல சலம் இலகுவாக கழிக்க ஏதுவாகிறது. பல விதமான மருந்துகளை உட்கொள்ளும் நமது தேகம், ஒரு மருந்துத் தொழிற்சாலையாக மாறாமல் தவிர்க்கலாம். தலையிடி, இரத்த அழுத்தும், சிறுநீர் சம்பந்தப்பட்ட வியாதிகள், குருதிச் சோகை, வயிற்றில் வாயுப் பிரச்சனை, நீரிழிவு, பாரிசவாதம். வயிற்றுப்போக்கு, மலம் போகாத்தன்மை, இருமல், மாதவிடாய் பிரச்சனை, ஆஸ்த்துமா, இரத்தப் புற்று நோய், கருப்பை புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், மார்பு புற்று நோய், மூச்சுக் குழல் அலர்ச்சி, காச நோய் போன்ற பல வியாதிகளுக்கு நீர் அருமருந்தாகிறது.

■ ■ ■



# CELL TEL MOBILITY

**For all your cellphone and accessory needs...**

We sell new & used cellphones, Pagers and accessories for:

**ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY**



## VIDEO CALLING


**Talk face to face with your friends and family in real time with video calling.**



**BLACKBERRY 8800**



**NOKIA N95**



**SAMSUNG i600**

Prepaid **$40/Month** UNLIMITED LOCAL CALLING !!! (Incoming & Outgoing)

Call Toll free:- 1.877.312.5123 SHOP ONLINE @ www.celltelmobility.com

CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER

NOKIA, MOTOROLA, PANASONIC SONY ERICSSON, SAMSUNG.

Display, Antenna replacement and all other repairs........

## PHONE RENTALS

Planning a vacation ? You can rent a world wide GSM phone

**We also** UNLOCK (GSM) phones

2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818

220 - 5990 16th Avenue
16th Avenue/ Markham Rd
905.201.4859

5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**McCowan & Sheppard**
Basement for Rent from June
Call: 416 332 0594

**Nelson & McLeiven**
2/B Room Basement for Rent
Call: 416 286 8753

**Woodbine & Dun forth (East York)**
Room for Rent
$550
Call: 416 421 3960

**Midland & Eglin ton**
1 /B Room Basement for Rent
Call: 416 265 556 1

**McCowan & McNicole**
1/ B Room Basement for Rent (Women)
$325
Call: 416 491 9364

**Town for Markham**
1 B/Room Home for Rent
Call: 416 414 5562

**Mavis & Eglinton (Mississauga)**
(Near Annapoorana)
3 B/Room + Den.
Semi House for Sale
Call: 905 369 0068

**Neilson & Finch**
Basement for Rent
(Free Internet_
Call: 416 560 5739

**Tap Scott & Finch**
1/ B Room for Rent
(Up stair House)
Call: 416 335 0136

**Markham & Steel**
1 B/Room Basement for Rent
(Near Schools, TTC)
Call: 416 917 8336

**Sc.Golf & Lawrence**
1/B Room Basement for Rent
Call: 647 284 8494

**Mavis & Eglinton**
(Mississauga)
1/B Room Basement for Rent from June 1
$750
Call: 416 878 2083

**Markham & Ellesmere**
3 /B Room Bungalow House for Rent
Call: 416 876 0827

**Markham & Elson**
3 B/Room House for Sale
Call: 416 515 6680

**Kennedy & Ellesmere**
4/B Room Home for Sale
Call: 905 917 1177
Telemarketing – 647 438 0965

**Kennedy & McNicoll**
2/B Room Basement for Rent
(Separate Entrance)
Call: 516 998 4752


ELROD Renovation

- Kitchen
- Washroom
- Hardwood Flooring
- Laminate Flooring
- Tiling
- Electrical
- Plumbing
- Separate entrance
- Full basement

Over 12 years of experience

For free estimate and consultation contact
Prem @ 416-712-1016


**Markham & Steel**
1/B Room Basement for Rent
Call: 416 917 8336

**Scar. Golf & Lawrence**
3B Room + 2/B Room Full House for Rent
Call: 416 724 0532

**Morningside & Sheppard**
3/B Room, 2/W Room
2/B Room House for Rent
Call: 416 283 5530

**Woodbine & Dun forth**
1/B Room Basement for Rent
&600.00
Call: 416 421 3960

**Brimley & Steel**
2 /B Room Basement for Rent
All facilities with Cable, & Park
Call: 416 421 3960

**McCown & Lawrence**
2/B Room Basement for Rent.
All facilities with Separate Entrance
Call: 416 431 7570

**Kennedy & Eglinton**
1/B Room Basement for Rent
(for Single Person)
Call: 416 285 7116

**Midland & Lawrence**
2/B Room Basement for Rent
(Separate Entrance)
(School, TTC + All facilities)
Call: 416 417 9027/416 751 5584

**Front of York University**
3/B Room for Rent for Student
416 546 1475 or 416 627 1956

**Morningside & Lawrence**
2/B Room Basement for Rent
Separate Entrance
416 287 9832 or 416 567 5043

**Neilson & McLeven**
2/B Room Basement for Rent
Separate Entrance
Call: 416 292 1953

**McCowan & Steel**
2/ Room Basement
Separate Entrance
Call: 905 294 9735 or 416 509 1260

## HOUSE / CONDO FOR SALE

**Markham & 16th Ave.**
4/B Room + 3/W Room
4 Years Old House for Sale.
Call: 416 564 3009

**Markham & Eglinto**
3/B Room town house for sale
1700 sq.feet. 2 Years Old.
Call: 416 459 0417

**Morningside & Passmore**
4/B Room New(3 Yrs.) House for sale
2700 Sq.feet
Closing August
Call: 416 291 3997

**Keel & Finch**
2/B Room condo for Sale
$10.000.00
Call: 416 456 8895

## AUTO FOR SALE

**91 Toyota Camry CE for Sale**
Call: 416 496 1283

**93 Mazda**
190 km for Sale
Call: 905 673 0870

CTR
கனடியத் தமிழ் வானொலி
416.264.8798

**83 Toyota Corolla**
200km
$600.00
Call: 905 472 1413

**1995 Nissan Van for Sale**
Call: 647 994 7267 or 416 741 1410

**1992 Toyota Camry LE Fully**
290 km
1992 Toyota Corolla – 287 for Sale
Call: 905 471 7373 / 416 402 1124

**96 Honda civic EX**
216 km for Sale
Cell: 647 402 4980

**Covey Cargo Van 2002 for Sale**
Call: 416 888 3524

**98 Toyota Siena for Sale**
7 Passengers – 150 km
Call: 416 806 2847

**2005 Dodge Caravan New for Sale**
Blue
Call: 416 291 3997

## OTHERS

**Kuthu Vilakku**
5 feet Kuthu Vilakku & Nirai Kudam for Sale
Call - 416 615 5555


**Truck Driver Wanted**
DZ License
Call – 416 717 3680
416 854 7307

**Wheel Chair**
Wheel Chair and other items for Sale
Call – 416 724 6311


தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

உங்கள்
சிறு
விளம்பரங்களும்
வீடு
பத்திரிகையில்
விளம்பரமாவதற்கு
416-646-3422


PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE...............
One Stop for
TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS
2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த
தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள்
(PROMOTIONAL PRODUCTS)
கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும்
சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.
புதிய அறிமுகம்
On high with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PROMAR
Awards & Promotions Ltd
www.promarawards.com
416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5
மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக
சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்
The Big choice
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு
சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும்
இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL
80 Nasdane Rd Unit C-59
416-898 4846


மார்க்கம் மாநகரில்...
UCMAS
For 4 - 12 years old Children
உங்கள் குழந்தைகளிடத்தில் மறைந்துள்ள நினைவாற்றல், மனஒருமைப்பாடு மற்றும் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கிறது.
UCMAS மனக்கணிதம் கற்பதன் மூலம்
உங்கள் குழந்தை கணிதப்பாடத்தில்
ஒரு வல்லவராக திகழ அழையுங்கள்
Contact: Suren
UCMAS Markham South Centre
8 Shadlock St., Unit 5
Markham, ON L35 3K9
416.821.2011
• Whole brain development program for children
• Confluence of ancient art and modern science of calculation that bring about speedy and accurate calculation
• Help to remove the 'fear' of Mathematics in school
• Attainment of life long skills that is concentration, creativity attentiveness and self confidence
digi Media Creations

## வளர்ப்புப் பெற்றோர்...

31ம் பக்கத் தொடர்ச்சி...

**cant's home and involving all household members. Individual and joint interviews will be conducted. All members of the household over the age of 6 will be involved in the interviewing process.**

- **A complete home inspection to determine suitability of the home for placement of a child. This inspection will include the completion of the Fire and Safety Standards List.**
- **3 references will be contacted by phone.**
- **A written statement from a physician regarding the health of the applicants and their family will be received.**
- **A criminal record check of the applicants and all individuals 18 yrs of age and over will be obtained**
- **Participation in CSA's orientation and training sessions will be required (9 Wks or 27 hrs)**
- **Previous foster care providers with whom the applicants have been involved in the past 10 years will be contacted.**
- **The local CAS will be contacted to request a database search for the purpose of collecting information regarding suspected child abuse.**

**The screening process is a mutual assessment. Significant areas of information that will be gathered in order for CSA to understand the applicants and their families include:**

- **Family history and relationships**
- **Communication skills**
- **Motivation**
- **Family interests, values and priorities**
- **Experience, skills and abilities**
- **Nature of the environment (degree of structure, control, nurturance, orderliness etc)**
- **Willingness to learn new skills**
- **Abilities to work cooperatively**

*Toronto Agencies*

- **Catholic Children's Aid Society of Toronto * | La Société catholique de l'aide à l'enfance ville de Toronto**
26 Maitland St,
Toronto, ON
M4Y1C6
Bus: (416) 395-1500 Fax: (416) 395-1581

- **Children's Aid Society of Toronto***
30 Isabella Street,
Toronto, Ontario
M4Y 1N1
Bus: (416) 924-4646 2000

- **Jewish Family & Child Service of Toronto**
4600 Bathurst St. 6th Flr.
North York, ON
M2R 3V3
Bus: (416) 638-7800 Fax: (416) 638-7943

- **Native Child and Family Services of Toronto**
295 College, Toronto, ON M5T 1S2
Bus: (416) 969-8510 Fax: (416) 928-0706

- **York Region Children's Aid Society**
85 Eagle St. W. (P.O. Box 358 )
New market, ON
L3Y 4X7
Bus: (905) 895-2318 Toll free: (800) 718-3850 Fax: (905) 895-8379

- **Peel Children's Aid Society***
6860 Century Avenue
West Tower
Mississauga, ON
L5N 2W5
Bus: 905-363-6131 Toll free: (888) 700-0996 Fax: 905-363-6133

- **Durham Children's Aid Society**
555 Ross land Road West Oshawa, ON
L1J 3H3


Location ! Location! Location
BRAND NEW HOUSE FOR SALE



McCowan & Dennison சந்திப்பிற்கருகில் சகல வசதிகளும் (TTC, School, Go Train, Community Center, Mall, Grocery shops போன்றன) அருகாமையில் உள்ள குடிபுகாத புதிதாக கட்டப்படுகின்ற 5 அறைகளையும் 4 குளியளறைகளையும் கொண்ட அழகான புதிய வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

விலை $474,900.00

தொடர்புகளுக்கு: HARAN (416) 522-3314



LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS
"Dedicated and determined to provide the best results for your personal injury claims"

30 மில்லியன் டொலர்கள்
2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்



- வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
- விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
- உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
- காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
- இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?

MOTOR VEHICLE ACCIDENT
Serious Injuries

Rocky Lofranco
Senior Partner

இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
LOFRANCO CHAGPAR
Personal Injury Lawyers
வாகன விபத்து கோரிக்கைகளில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்

தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு
இலங்கதாஸ் பத்மநாதன்

TORONTO OFFICE
Yonge / Norton Centre
5255 Yonge Street,
Suite1300 North York
416 223-8333

MISSISSAUGA OFFICE
Dundas / Hurontario
257 Dundas St. East,
Unit 1
905 275-8806

FREEE CONSULTATION
LANKATHAS PATHMANATHAN
416 774-8122
DIRECT LINE
TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER

# சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு...



வீடு வாங்க விற்க அல்லது
அது சம்பந்தமான விபரங்களுக்கும்
குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ்
செய்யவும் நட்புடன் அழையுங்கள்....

**Tel: 416-843-8585**
**Bus: 416-290-1200**



KUGA RAVEENDRARAJAH
Broker

Century 21

**Affiliate Realty inc. 80 Corporate Drive, Suite 208, Toronto Ont.**



# Looking out for your best interest™

**Looking** for a
## Mortgage?
call 416.548.8000 now...



**Myuran Ramachandran**
Mortgage Consultant

CENTUM™
One Financial Group Inc.

**Bus: 416.548.8000 • Fax: 416.548.8001**

*Each Office is Independently Owned And Operated*

# நாடகர்கள் ஒதுக்கப்பட்டவர்களல்ல

## - திரு.தாசீசியஸ் -

"புரட்சிகரமான கருத்துக்களை, பழைய கலை மரபுகளின் துணையுடன், புதிய பாணியில் மக்கள்முன் வைத்து, சிரிப்பையும், சிந்தனையையும்மட்டுமன்றி, நமது நாளங்களையும், நரம்புகளையும் முறுக்கேற்றும் 'கந்தன் கருணை' பல மேடைகளைக் காணுதல் அவசியம்" என 'கந்தன் கருணை' நாடகம்பற்றி அப்போது தினகரனில் எச்.எம்.பி.முகமது எழுதியிருந்தார்

**இத்தகைய பல நாடகங்களின் நெறியாளர், பிறமொழி நாடக மரபை முறையாகக் கற்று, தமது தமிழ் மொழியின் மரபு நாடத்தின் மூல வேரைத் தேடி அலைந்து, ஆய்வுசெய்து, இலைமறை காயாக இருந்த தமிழ் மரபு நாடகங்களையும், நாடகக் கலைஞர்களையும் வெளிக்கொணர்ந்த வித்தகர் திரு.தாசீசியஸ் அவர்கள். வீடு பத்திரிகைக்கு பிரத்தியோகமாக வழங்கிய செவ்வியை இது. இலண்டனில் வாழ்ந்துவரும் திரு.தாசீசியஸ் அவர்கள் இலக்கியத்தோட்டம் வழங்கும் வாழ்நாள் விருதிற்காக கனடாவிற்கு வருகைதந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.**

**• எமது தமிழ் நாடகங்கள், எமது மரபு நாடகங்களிலிருந்து வந்த தாகக் கூறப்படுகிறது. இக் கூத்துக்கள் நாடகமாகிய போது, தமிழ் மக்களி டையே நிலவிய பண்பாடு, அரசியல் தாக்கங்கள் எப்படியாக நாடக வளர்ச்சிக்கு உதவின?**

எந்த விடயமும் தன்னுடைய வேரிலிருந்துதான் முளைக்கலாம். தன்னுடைய மண்ணிலிருந்துதான் அது செழுமையாக வளரலாம். அப்படிப் பார்க்கின்ற போது, எங்களுடைய மகிழ்வூட்டும் கலைகளும் கூட எங்களுடைய மண்ணிலிருந்து வரும்போதுதான் செழுமையாக அது மக்களிடம் போய்ச்சேரும். வெளியிலே யிருந்து நாங்கள் எதைப் பார்த்தாலும், அது ஒரு கண்காட்சியாகத்தான் இருக்கும். அது உள்ளிருந்து வந்ததாக, மனதைச் சந்தோஷப்படுத்துவதாக மனதுக்குள்ளே சேர்வதாக இருக்காது. அப்படிப்பார்த்தால் எங்களுடைய நாடகங்கள் சரி, எங்களுடைய எந்தவொரு வளர்ச்சியை எடுத்துக்கொண்டாலும், அது எங்களுடைய தேவையையொட்டி, எங்களுடைய மண்ணிலிருந்து, எங்களுடைய வேரிலிருந்து வந்ததாக இருக்க வேண்டும். அதுதான் ஊட்டம் தருவது. எங்களுடைய நாடகங்களும், புது நாடகங்கள் வடிவெடுக்கிற நேரத்தில் எங்களுடைய பழைய கலைகள், கதைகள், அது கரகாட்டமாக இருந்தாலென்ன, கும்மியாக இருந்தாலென்ன, காவடியாக இருந்தாலென்ன, அல்லது ஒரு சாதாரணமான ஆடல் பாடலாக இருந்தாலென்ன எல்லாமே ஒரு புதிய வடிவத்திற்குள் இருந்தால்தான் அந்தச் சாயலை நாங்கள் காணலாம். அந்தச் சாயலைக் கண்டவுடனே எங்களுக்கு அந்த ஆழம் விளங்கும். அந்த ஆழத்தைப் புரிந்துகொண்டிருக்கிற நேரத்தில் நாங்கள் என்ன கருத்தைக் கொடுத்தாலும் அது ஒரு சாதாரண கருத்தாகக்கூட இருந்தாலும் அது ஒரு ஆழமான கருத்தாக மாறிவிடும். ஒரு பிரிக்கமுடியாத தேவையும் ஒரு பிரிக்கமுடியாத நிகழ்வும் கூட. பழைய கலைகள் புதிய வடிவங்களுக்காக மாறுகிற நேரத்தில் பழைய கதைகளும் அதற்கு ஊடாக வந்து உயிர்பெறுவது பிரிக்க முடியாததொன்று. ஒரு மரத்தைக் காட்டுகிறோம். அல்லது ஒரு விதையை விதைக்கிறோம். அது விதையாகவே முளைப்பதில்லை. மரமாகத்தான் முளைக்கிறது. இன்னொரு துளிர் விடுகிறது; செடியாகிறது; மரமாகிறது. மூலம் மூலம்தான். அதுபோலத்தான் என்ன கலையாக வளர்ந்துகொண்டு வந்தாலும் எங்களுடைய பழைய பாரம்பரியக் கலைகள் அதற்குள்ளே அடையாளமாக இருக்கும்.

**• பேராசிரியர்களான கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன், சிவத்தம்பி ஆகியோர் பேராசிரியர்களாக இருந்தபோதும், தமிழ் நாடக உலகில் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். அப்பொழுது இப்படியான மாற்றங்கள் எந்த அளவிற்கு இன்றைய நாடக உலகிற்கு உதவின என்று சொல்ல முடியுமா?**

பேராசிரியர் கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணத் தமிழிலே நாடகங்களை எழுதினார். யாழ்ப்பாணத் தமிழிலே பேசுவதை ஒரு குறைபாடாகக் கருதுகிற நிலையிலேயே இன்றைக்கும் எங்கள் சமூகம் இருக்கிறது. நாங்கள் 'ஓம்' சொல்லுவதில்லை 'ஆம்' தான் சொல்லுவோம். அதுவும் ஒரு பேட்டி என்று வந்துவிட்டால், உடனே 'ஆம்' தான் சொல்லுவோம். முழுமையான இலக்கணத் தமிழிலே பேசுவதை நாங்கள் வழக்கமாகக் கொண்டுவிட்டோம். ஒரு பேட்டி என்று வாற நேரத்தில், எப்படி இலக்கணத் தமிழ் வந்து சேருமோ எனக்குத் தெரியாது. சாதாரணமாக நாங்கள் பேசுகிற வழக்குமுறைதான் வந்துசேரும். ஏனென்றால், பேட்டி என்றால் பேசுவதுதானே. அப்ப, 'ஆம்' என்று சொல்லுவதை 'ஓம்' என்ற சொல்லி மாற்றி அமைப்பதில் கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ஒரு பெரிய பங்கு இருந்தது. அவருடைய எந்த நாடகத்தைப் படித்தாலும் அதில் யாழ்ப்பாண வாசனை ஒன்றிருக்கும். மண்வாசனையிருக்கும். அந்த மண் வாசனையை ஒரு பல்கலைக்கழக மட்டத்தில் எங்களுக்குச் செய்துதந்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளைதான். பேராசிரியர் கணபதிப்பிள்ளையுடைய தாக்கம் மிக முக்கியம். பேராசிரியர் வித்தியானந்தன் வந்தவுடனே கிராமிய நாடகங்களைக் கொண்டுவந்து, உயர்மட்டத்திலே உள்ளவர்கள் பார்க்கக்கூடியதாகச் செய்தார். அதாவது, படித்தவர்கள் கிராமங்களுக்குள்ளே போய் குந்தியிருந்து, நிலத்திலிருந்து பார்க்கப்போறதில்லை. அவர்கள் மண்டபத்தில, கதிரையில அமர்ந்துதான் பார்க்கலாம். அவையளுக்கு அந்த பழைய வடிவங்களைக் கொண்டுவந்து தாறது ஒரு பெரிய கண்ணாடிப் பேழையில தந்த மாதிரியான ஒரு செயல் அது. அதேபோலத்தான் பேராசிரியர் வித்தியானந்தன் செய்துகொண்டிருந்தவர். மற்றவை யாரும் குறிப்பாகச் சொல்வதற்கில்லை. மொழி வளர்த்தவர்கள் என்ற விடயத்தில் இருவரும் மிக முக்கியமானவர்கள். கிராமிய வழக்கு, இலக்கண வழக்கு, உயர்மட்ட வழக்கு, இவற்றைக் கொண்டு உயர் பேச்சு வழக்குகளையும் கொண்டு வாறதற்கு இவர்களுடைய பங்கு முக்கியமானது. பிறகு சானா, வானொலியில் சீ.எம்.வாசகர், இவர்களின் செயற்பாடு காரணமாக மேடையில எங்களுடைய பேச்சு வழக்குத் தமிழ் அங்கு வந்தது. பிறகு மகாகவி எழுதினார் கோடை நாடகம். அது முழுக்க முழுக்க யாழ்ப்பாணப் பேச்சுவழக்கு. அதே நேரம் அதை அகவலில் முழுதாக எழுதியிருந்தார். எங்களுடைய பேச்சுவழக்கே அகவல் ஒன்றுதான். யாழ்ப்பாணத்திலேயும் சரி, மட்டக்களப்பிலேயும் சரி, மன்னாரிலேயும் சரி, வன்னியிலேயும் சரி குறிப்பாக மட்டக்களப்பிலே பேசுகிற தன்மை – 'வாரிங்கோ, இரிங்கோ....' அது இனிமைப்படுத்தி மக்களை மகிழ்விப்பதற்காக. தமிழ் தெரியாதென்றல்ல; அவர்களுக்கு தமிழ் நல்லாகத் தெரியும். மிகச் சிறந்த தமிழ் அறிஞர்கள் மட்டக்களப்பிலிருந்து வந்திருக்கிறார்கள். விபுலானந்த அடிகள் உட்பட. அப்படியான பேச்சுவழக்கு தமிழகத்திலே செட்டிநாடு, தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை என்று ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு பேச்சுவழக்கு இருப்பதுபோல, மட்டக்களப்புக்கும் ஒரு பேச்சுவழக்கு இருக்கிறது. 'வாரிங்கோ, இரிங்கோ' என்றதெல்லாம் எவ்வளவு இனிமையாக இருக்கிறது. அது வலு அன்பாகப் பேசுவதற்காக அவர்கள் செய்துகொண்ட ஒரு மரபுத் தன்மை. மருவிப்போதல். இந்த வழக்குகளுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்தார்கள். எங்களுடைய பேராசிரியர்கள் செய்த முக்கிய மாற்றம் இது. அதற்குப் பிறகு எல்லாம் வளர்கின்ற நேரத்தில் அவர்களை மறந்துவிடுகிறம். அதுதான் நான் தொடக்கத்திலே சொன்னேனே. ஒரு விதையும் அதன் மூடியும். அதுதான் முதல் மறக்கப்படுகிறது. பனங்கொட்டையில்கூட முதல் ஊமல்தான் மறக்கப்படுகிறது. கிழங்காகி, பிறகு மரமாகியிருக்கும். அந்த மூடி, கோது – அதுதான் எங்களுடைய பேராசிரியர்மார் மிகச் சிறப்பாக எங்களுக்கு இதைத் தந்தது. திரும்பிப் பார்க்கிற நேரம் நன்றியோடு நினைவுகூருவோம்.



> "எந்த விடயமும் தன்னுடைய வேரிலிருந்துதான் முளைக்கலாம். தன்னுடைய மண்ணிலிருந்துதான் அது செழுமையாகவளரலாம் அப்படிப்பார்க்கின்ற போது, எங்களுடைய மகிழ்வூட்டும் கலைகளும்கூட எங்களுடைய மண்ணிலிருந்து வரும்போதுதான் செழுமையாக அது மக்களிடம் போய்ச்சேரும்."

**• நாடகர்கள், கூத்தாடிகளென்று ஒதுக்கப்பட்ட காலங்களில்தான் நீங்கள் நாடக உலகுக்குள் தீவிரமாகப் பிரவேசித்திருக்கிறீர்கள். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இருந்த போதும், கொழும்பு சட்டக் கல்லூரியில் இருந்தபோதும், நீங்கள் ஆங்கில, தமிழ் நாடகங்களில் தீவிரம் பெறுவதற்கு என்ன உந்துதலாயிருந்தது என்று சொல்லமுடியுமா?**

நாடகர்கள் ஒதுக்கப்பட்டவர்களல்ல. ஒரு மேல்மட்டத்தால் நடுத்தர வர்க்கத்தால் ஒதுக்கப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால், கிராமிய மக்களுக்குள்ளே அவர்கள் மிகவும் வரவேற்கப்பட்டவர்கள். அவர்களுக்குத்தான் கூடிய மரியாதை. ஒரு நாடகக்காரன் அல்லது ஒருவர் வாறபோது, ஒரு பாத்திரத்தை வைத்துக் கொண்டு அந்தப் பாத்திரத்தாலேதான் கூப்பிடுவார்கள். 'காத்தவராயன் இன்னார் வாறாராம்' 'அல்லது மங்களராசா வாறாராம்' இப்படிச் சொல்லுற ஒரு வழக்கம் தான் இருந்தது. அவ்வளவு மரியாதை இருந்தது. எனக்கும் அந்த 'ஈழக்கூத்தன்' கூட எனக்குத் தந்த பட்டம் அல்ல. நான் கூத்துகளைத் தேடிக்கொண்டு போகிற நேரத்தில் - சில்லையூர் செல்வராசன், பேராசிரியர் வித்தியானந்தன் கூட நான்

46ம் பக்கம் பார்க்க...

# நாடகர்கள்...

45ம் பக்கத் தொடர்ச்சி...


கருத்தரங்குகளுக்குப் போவதற்குத் தாமதித்து விட்டால், 'அந்தக் கூத்தனை இன்னும் காணவில்லை' என்று சொல்லுவார். ஏனென்றால் நான் கூத்துகளோடு அலைந்து திரிகிறபடியால். சில்லையூர் செல்வராசன் சொல்லுவார்: "நானுமொரு கூத்தன்தான். நாட்டுக்கூத்தன். இவர் என்ன கூத்தன்?'' என்று. நான் எல்லா நாடகங்களையும் தேடிக்கொண்டிருந்தனான். யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, வன்னி என்று... .அந்த நேரத்திலே பகிடிபகிடியாகச் சொல்லி, பிறகு மரியாதையாகவே எனக்கு அது அமைக்கப்பட்டுவிட்டது. நான் ஏன் அந்தப் பயிற்சிக்குப் போனேனென்றால், நான் கல்வி பயின்ற பள்ளிக்கூடங்கள் ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள். கூத்து என்ற மரபு ஒன்று இருக்கவில்லை. நாடக மரபு ஒன்றிருந்தது. அது ஆங்கில நாடக மரபு. கூடுதலாக ஷேக்ஸ்பியர் செய்த நாடகங்களுக்காக நாங்கள் ஆங்கிலம் கற்கவேணும். என்னைப் பொறுத்தவரையில் ஒரு தனிப்பட்ட காரணம் இருந்தது நான் ஆங்கில நாடகங்களில் ஈடுபடுகிறதற்கு. என்னுடைய குடும்பம், என்னுடைய பெற்றார் காரணம் அவர்கள் தமிழ் மட்டும் தெரிந்த பெற்றார் ; ஆங்கிலம் தெரியாது. என்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியபோது, நான் ஆங்கிலம் படிக்க வேணும் ; பேசவேணும் ; ஆங்கிலத்தில் வேலைசெய்ய வேணுமென்ற ஆசை அவர்களுக்கிருந்தது. ஏனென்றால், அந்தக் காலத்தில் தங்களுடைய பிள்ளைகள் ஆங்கிலம் பேசவேணுமென்ற ஆசை எல்லாப் பெற்றோருக்கும் இருந்தது. நான் பள்ளிக்கூடத்திற்குப் போனபோது, என்னுடைய அறிவு ஆங்கில வாக்கியங்களை வாய்விட்டுப் பேசுவதுதான். அப்போது வெறும் வாக்கியத்தைப் பேசுவதைவிட, ஒரு கதையை வாசிக்கிற நேரம். மேற்கோள்களுக்குள் உள்ள வாக்கியங்களைப் பாடமாக்கி, அதாவது 'நான் எப்படி அங்கே போனேன்?'' என்று காகம் கேட்டது. என்றால் 'என்று காகம் கேட்டது' என்ற பகுதியை விட்டுவிட்டு, 'நான் எப்படி அங்கே போனேன்' என்ற பகுதியைப் பாடமாக்குவேன். அதைவிட, நாடகங்களை எடுத்துப் படிக்கிறதும், நாடகங்களைப் பாடமாக்கி அந்த வசனங்களைச் சொல்லுவதும் நல்ல வசதியாக இருந்தது. அதுதான் எனக்குத் தேவையாகவுமிருந்தது. அதே நாடகங்களிலே ஈடுபாடும் இருந்தபடியால் எனக்கு அந்தத் தேவையும், அதை நிறைவேற்றுதலும் ஆங்கில நாடகங்களூடாக நிறைய வந்தது. அப்போது ஆங்கில நாடகப் பயிற்சியும் எனக்கு நிறையத் தேவைப்பட்டது. அது ஒரு சின்ன அடிப்படையாக இருந்தாலும், ஆங்கில நாடகங்களுக்கான வாய்ப்பு அங்கு அதிகமாக இருந்தபடியால் அந்த நாடகங்களில் நான் நல்லாக வந்துகொண்டிருந்தேன். அதே நேரத்தில் நான் தமிழுக்கும் போகாமலிருக்கவில்லை. எப்போ போனேன் என்றால்... அதுவும் ஒரு பொம்பிளைதான் அதுக்குக் காரணம். நான் ஆங்கில நாடகங்களை நிறையச் செய்துகொண்டு வீட்டுக்குப் போற நேரத்தில, குசினிக்குள்ளே இருந்து கொண்டு அந்தப் பொம்பிளைக்குத்தான் - அதாவது என்னுடைய அம்மாவுக்குத்தான் என்னுடைய நாடக வண்டவாளங்களை அவிட்டு விட்டுக்கொண்டிருப்பேன். ஷேக்ஸ்பியர் செய்தேன், பிறெக்ற் செய்தேன், இப்ஸன் என்பவருடைய நாடகத்தைச் செய்துகொண்டு, அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிற போதுதான் அம்மா ஒருநாள் கேட்டா, 'எல்லாஞ் சரி, எல்லாம் ஆங்கிலம் தெரிந்த ஆட்களுக்கு விளங்கக்கூடியதாக நீ உந்த நாடகங்களை நல்லாய்ச் செய்யிறாய். என்னைப் போல, தமிழ் தான் தெரிந்த ஆட்களுக்கு எப்ப நாடகம் செய்யப் போகிறாய்?'' என்று. கிறிஸ்மஸ் லீவுக்குப் போன நேரத்தில்தான் அம்மா அதைக் கேட்டது. கொழும்புக்கு வந்து, உடனடியாக நான் என்னுடைய நாடக ஆசான் மக்கின்ரயரிடம் சொன்னன் என்னுடைய அம்மா இப்படியொரு கேள்வி என்னைக் கேட்டா என்று. அப்ப அவர் உடனே சொன்னார்: "நீ தமிழ் நாடகத்திற்குப் போறது நல்லது. துணிவாகச் செய்யலாம். ஏனென்றால், நிறையப் பயிற்சி செய்துவிட்டாய்'' என்று. அதுவே நான் தமிழ் நாடகங்களில் தீவிரமாய் ஈடுபடக் காரணமாயிற்று. அங்கே கற்றதுகளை திரும்பக் கொண்டுவந்து தமிழ் நாடகங்களுக்குள்ளே நான் புகுத்த வெளிக்கிட்டேன். தமிழ் நாடகத்துக்குள்ளே போகிற நேரம் உடடினயாக தமிழ் நாடகத்தைப் பற்றி இன்னும் கூடக் கற்கவேண்டும் என்றதற்காகத்தான் நான் கிராமம் கிராமமாகப் போனேன். நான் ஆங்கில நாடகத்துக்குள்ளே இருக்கிற நேரம் 'லயனல்வென்ற்' இலே எனக்கு நல்ல பெயர் இருந்தது. ஆங்கில நாடகம் நல்லாகச் செய்துகொண்டிருக்கிறதென்ற பெயர் இருந்தது. அந்தப் பெயரோட நான் தமிழ் நாடகத்துக்குள்ள வாற நேரம் அந்தப் பெயர் ஒட்டிக்கொண்டு வந்தது. ஏனென்றால், ஆங்கில நாடகத்தில நல்லாகச் செய்தவனை தமிழ் நாடகத்திலயும் வரவேற்பினம். அந்த நேரம் - உதாரணமாக இலங்கை வானொலியில் ராஜசுந்தரம் என்று ஒரு பெரிய டிறெக்ரர் இருந்தார். அவர் தமிழ் நாடகர்களை மதிக்கிறதில்லை. ஆனால் ஒரு தடவை லயனல்வென்ற் தியட்டரில் இலங்கை வானொலிக் கலைஞர்களுக்கு உச்சரிப்புப் பயிற்சி, குரல் பயிற்சிக்காக அனுப்பியிருந்தார்கள். நான் அங்கே போய், தமிழ் உச்சரிப்புப்பற்றி பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்தேன். அது சிங்களத்துக்கும் தமிழுக்கும் பொதுவான பயிற்சி. ஆனால், நான் சிங்களத்திலேயும் எழுதிவிட்டு தமிழில்தான் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தேன். அது குரல் பயிற்சி. அந்நேரம் ராஜசுந்தரம் - அதால வந்தவர் - எட்டிப் பார்த்துவிட்டு, 'இவர் ஆர்' என்று கேட்டிருக்கிறார். ஒராள் சொன்னார் 'லயனல்வென்றிலிருந்து ஒரு ஆங்கிலப் பயிற்சிக்காரன் பயிற்சி கொடுக்க வந்திருக்கிறார்' என்று. அவர் அன்று பின்னேரமே எனக்கு ஒரு விருந்து தந்து, இருவரும் நல்ல நண்பர்களானோம். அப்ப ஆங்கில தியேட்டரிலிருந்து வாறார் என்ற நேரத்தில, முந்தி அதுவும் கொலனித்துவ ஆட்சிக்குப் பிற்பட்ட இலங்கையில் எங்களுக்கு ஒரு மதிப்பு இருந்தது. தமிழ் நாடகத்துக்குள்ளே இருந்தே தமிழ் நாடகத்தை செய்திருப்பேன். ஆனால், இவ்வளவு பெயர் வந்திருக்குமோ தெரியாது. ஆனால், அது கெதியாக வந்திட்டுது. ஆங்கில நாடகத்திலயிருந்து போனதால அதைவிட மொழியென்றது எதையும் பார்க்கயில்லை. நாடகம் என்றது ஒரு தனி மொழி. ஆனபடியால்தான் நான் சிங்கள நாடகத்துக்குள்ளும் நல்லாகப் போகக் கூடியதாக இருந்தது. வேறொரு மொழி எங்கட நாட்டில இருந்திருந்தால், நான் நினைக்கிறேன் அதிலும் நாடக விடயமாக நல்லாய்ச் செய்திருப்பேன் என்று.

**• ஆங்கில நாடகப் பயிற்சி என்று நீங்கள் சொன்னீர்கள் ஆங்கில நாடகங்கள் மாத்திரமல்ல, பிற மொழி நாடகங்கள் எனறு சொல்லுவதுதான் பொருத்தமென்று நான் நினைக்கிறேன். பிறமொழி நாடகங்களை ஆங்கில மொழியூடாக நீங்கள் உள்வாங்கி, பிறமொழி நாடகர்களிடமிருந்து பயிற்சியைப் பெற்று, நீங்கள் தமிழ் நாடகத்துக்கு வந்ததென்று சொல்லுகிறீர்கள். அதே வேளையிலே மொழி பெயர்ப்பு நாடகங்கள் எங்கள் தமிழ் நாடகங்களுக்குத் தேவையில்லை என்ற கருத்தும் இப்போது முன்வைக்கப்படுகின்றது. ஆகையினால், மொழி பெயர்ப்பு நாடகங்கள் மூலமாக நீங்கள் பெற்ற பயிற்சிகளும், எந்த அளவுக்கு தமிழ் நாடகங்கள் வளரக் காரணமாயிருந்ததென்று சொல்ல முடியுமா?**

அது ஒரு முக்கியமான பயமொன்று எங்களுக்கு அந்தக் காலத்திலே இருந்தது. ஏனென்றால், சிங்கள நாடகம் முழுக்க முழுக்க தழுவல் நாடகங்களையும் மொழிபெயர்ப்பு நாடகங்களையும் செய்துகொண்டிருந்தது. சிங்கள நாடகத்தின்ர அடையாளம் 60ம் ஆண்டுகளில் என்னென்றால், அது தழுவலும் மொழி பெயர்ப்புமாகத்தான் இருக்கும். ஆனால் தமிழ் நாடகத்தில் மொழிபெயர்ப்பையும் தழுவலையும் ஒருவரும் கிட்ட வரவிட வில்லை. சிங்கள நாடகத்தில மேடை நேர்த்தி (stage craft) மிகச் சிறப்பாயிருந்தது. தமிழில் உள்ளடக்கம் மிகச் சிறப்பாயிருக்கும். அந்த இரண்டையும் பொருத்தக்கூடிய நிலையொன்று வேணும். அந்தத் துணிச்சல் எனக்கு இருந்தது. மொழி பெயர்ப்பு நாடகங்கள், தழுவல் நாடகங்கள் என்பவற்றைப் போடக்கூடாது என்று இவை சொல்லுற நேரத்தில், என்னால அப்படிப் பார்க்க முடியேல்லை. எனக்கு நாடகத்தைத்தான் பார்க்க முடிந்தது. அந்த நாடகத்தை எப்படியும் தமிழில் புகுக்க வேணும் என்று எனக்குத் துணிச்சல் இருந்தது – ஆளுமை இருந்தது – தன்னம்பிக்கை இருந்தது. ஆனபடியால், எந்தப் பகுதிக்குள்ள போனாலும் எனக்கு நல்லாகச் செய்ய முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. மகாகவியின்ர நாடகம் முழுக்க முழுக்க தமிழ் நாடகம். அதே நேரத்தில் நல்லொரு ரஷ்யன் நாடகத்தை ஆங்கிலத்திலிருந்து ஞானம் லம்பேட் மொழி பெயர்த்துத் தந்தார். அதை எப்படி தமிழ் வடிவத்தில் கொடுக்கலாமென்ற பிரச்சினை இருந்தது. அப்படியே ரஷ்ய வடிவத்திலே ஒரு மேற்கத்தைய வடிவத்திலே கொடுத்திருந்தால் அது எங்களுடைய மக்களுக்கு ஒட்டியிருக்குமா? என்றொரு கேள்வியிருந்தது. கோதுமை மாவை எடுத்துக்கொள்வோம். கோதுமை மாவை எங்களுடைய நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது பாணும் கேக்கும் செய்தபிறகுதான். ஆனால், நாங்கள் அந்த மாவைக்கொண்டு எங்கட இடியப்பம், புட்டு, கொழுக்கட்டை எல்லாம் செய்யத் தொடங்கினோம். மேற்கு நாட்டில் இருந்துவந்த ஒரு மூலப்பொருள் எங்களுடைய வடிவத்திற்கு எங்களுடைய சுவைக்கு ஏற்றமாதிரி மாறியது. அதே போலத்தான் மொழி பெயர்ப்பு நாடகங்கள் என்றாலென்ன, தழுவல் நாடகங்கள் என்றால் என்ன. எங்களுடைய மக்களிடம் ஒரு அச்சம் இருந்ததுதான். என்னென்றால், நாங்களும் சிங்கள நாடகங்கள் மாதிரி எங்களுடைய சின்னத்தை இழந்து விடுவோமோ என்று. ஒரு பெலமில்லாதவன்தான் அப்படிப் பயப்பட வேண்டும். தான் என்ன செய்யவேணுமென்று தெரியாதவன்தான் அப்படிப் பயப்பட வேணும். நல்லாகக் கற்றுக்கொண்டுவந்த ஒருவனுக்கு, எந்த இடத்திலே எந்த மாத்திரையைப் பயன்படுத்த வேணுமென்ற அளவுகோல் தெரியும். அப்படியான ஒரு நேரத்திலதான் நாங்கள் பிறமொழி நாடகங்கள் செய்தோம். விக்கிரமசிங்கவுடைய நாடகம் மொழி பெயர்க்கப்பட்டது. அது சச்சிதானந்தன், சிவபாலன் எல்லாம் செய்தார்கள். வேறு வேறு நாடகங்களையும் மொழி பெயர்த்து மேடையேற்றினோம். அது தமிழை, தமிழ் நாடகத்தைப் பாதிக்கவில்லை. பாதிக்கக் கூடாத அளவுக்கு மோகங்கொண்டு ஒரு மாயையால இறுக்கப்படாத அளவுக்கு மாத்திரை தெரிந்து, நாங்கள் பயன்படுத்தினபடியால்தான், நாங்கள் வெற்றி கண்டிருக்கிறோம். பிச்சை வேண்டாம் வந்த உடனடியாக இப்படியொரு நாடகம். ரஷ்யன் தூதரகத்திலிருந்து பார்க்க வந்தவர்கள் சொன்னார்கள்: 'நாங்கள் பல இலட்சம் செலவழித்து செய்த பெரிய நாடகத்திற்கு நீங்கள் சில சாக்குத் தட்டிகளோடும் சில தடிகளோடும் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறீர்கள். இது ஏற்படுத்திய பாதிப்பு மிக அதிகமானதாயிருக்கிறது. ஒரு பிரமாண்டமான சோடினைகளைக் கொண்டு ஒரு மயக்கமில்லாமல் நல்லதாக இருக்கிறது' என்று சொன்னார்கள். நாடகமென்றால், சிங்களமென்றால் என்ன, தமிழ் என்றாலென்ன நாடகமென்பது ஒரு தனியான மொழி. தனியான ஒரு கருத்துப் பரிமாற்றம். அதைப் புரிந்துகொண்டால் நாங்கள் நாடகங்களைச் செய்யலாம். அதைத்தான் நாங்கள் அப்போது செய்தோம் என்று நினைக்கிறேன்.

**• நாடகர்களுக்கு அல்லது நடிகர்களுக்கு, நாடகப் பயிற்சியின்போது கிடைக்கும் பயிற்சி போதும் என்ற நிலை இருந்த காலங்களிலே அது மட்டும் போதாது, நாடகர்களுக்கு நாடகப் பயிற்சி தனியாகத் தேவை என்று உணர்வு, அறிவு ரீதியாகவும், உடல் ரீதியாகவும் நீங்கள் புகுத்திய பொழுது எப்படியான அனுபவங்கள் நாடகர்களிடமிருந்து உங்களுக்குக் கிடைத்தது?**

இதை ஒருவரும் நம்பவில்லை.... ஏன் மூச்சுவிட வேணும், என் சத்தம் போட வேணும், ஏன் வாயை – உடம்பை நெளிக்க வேணும் என்று சொல்லிக் கொண்டிருந்தினம். உடல்மொழி என்றால் அதென்ன? வாயால் ஓம் என்று சொன்னால், மற்ற உடம்பெல்லாம் என்ன செத்துப் போச்சுதா? ஏன், அதுகள் மட்டும் பங்களிக்கக்கூடாது? அந்தப் பங்களிப்புக்கு நாங்கள் எல்லாத்தையும் பயன்படுத்த வேணுமென்றால், அதற்கான பயிற்சிகள், முயற்சிகளை அதுகளில் முழுசாகப் பயன்படுத்த வேணுமென்ற தேவையொன்றை நான் வலியுறுத்தத் துவங்கினேன். ஏனென்றால் அப்படித்தான் கற்றிருந்தேன். ஸ்ரனிஸ்லோவாக்கியை எடுத்துக்கொண்டால்,அவர் தருகிறது ஒரு முறை அது. எங்களுடைய கூத்துக்களை எடுத்துக்கொண்டால், உடம்பில் லயம் வரவேணும். தாளம் வரவேணும். குரலிலல்ல – உடலிலும் இருக்கவேணும் என்ற சொல்லுவார்கள். ஆனபடியால் தான் அந்தஆட்டம். கூத்துக்கான தாளம்



> **“தமிழ் நாடகத்தில் மொழிபெயர்ப்பையும் தழுவலையும் ஒருவரும் கிட்டவர விடவில்லை. சிங்கள நாடகத்தில மேடை நேர்த்தி (stage craft) மிகச் சிறப்பாயிருந்தது. தமிழில் உள்ளடக்கம் மிகச்சிறப்பாயிருக்கும். அந்த இரண்டையும் பொருத்தக்கூடிய நிலையொன்று வேணும். அந்தத் துணிச்சல் எனக்கு இருந்தது. மொழி பெயர்ப்பு நாடகங்கள், தழுவல் நாடகங்கள் என்பவற்றைப் போடக்கூடாது என்று இவை சொல்லுற நேரத்தில், என்னால அப்படிப் பார்க்க முடியேல்லை.”**

எங்கே, எங்களுடைய காலில், கையில், உடம்பில். அதுகளெல்லாத்தையும் எங்களுடைய கூத்திலே ஒழுங்காகப் படித்த நாங்கள், நாடகமென்று வாற நேரத்தில அதுகளை விடுகிறதால என்ன, லாபம் அநியாயமாய்ப் போய்விடும். அந்த நாட்களில, வாயைத் திறந்து உரத்துப் பாடுகிற நேரம். ஒரு அரை மைலுக்குக் கேட்கும். அந்தக் குரல் எப்படி வந்தது? குரல் பயிற்சியால. எங்களை நிலத்திலிருந்து பாடச் சொல்லுவினம். எழும்பி நின்று பாடச் சொல்லுவினம். ஓடிப் பாடச் சொல்லிச்சினம். அப்படித்தான் கூத்துக்களில் பழக்கிச்சினம். சுத்திச்சுத்தி ஓடிக் கொண்டு பாடுவம். ஓடிவந்துவிட்டுப் பாடுவம். அப்ப மூச்சை இழுக்க இழுக்க அந்தத் தாளமும், வருகிறது. கூத்துக்கென்று நாங்கள் காலாகாலமாக ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பழகிவந்த ஒரு முறையை நாங்கள் விடக்கூடாது. அப்படியென்றால்தான், அந்தக் கூத்து வடிவங்களும் இருக்கும். நாங்கள் புதிதாக நடிக்கிற நாடகங்களும் நல்லாக வரும். அதில எனக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. அப்ப மேடையில காண்கிற நேரம் முதலில விளையாட்டாக நினைத்தவை, பிறகு அதைச் செய்யத் தொடங்கிச்சினம். காதில வைக்கேல்லை, வாயில வைக்கேல்லை, உடம்பு சிரிக்கயில்லையே, சிரிக்குமென்று பின்னுக்கிருந்து பார்த்தன் - எனக்கொன்றும் தெரியேல்லையே என்கிற நேரம் கவனம் எடுக்கத் துவங்கினோம். அதன்பிறகு 'நல்லாகச் செய்தான். நல்லாகச் செய்தோம்' என்ற உணர்வு வரத் தொடங்கியது. முதல் அறியாமையால ஒன்றை எதிர்க்கலாம். ஆனால் அறிந்தவுடனே நாங்கள் அதை வரவேற்பம். அப்ப பயிற்சி கொடுக்கிற ஒவ்வொரு இடத்திலேயும் இரண்டுநாள் மூன்று நாள் பயிற்சி முடிய, அதற்கேற்ற மாதிரி திட்டமிட்டு பயிற்சியைக் கொடுக்க, அதற்குப் பிறகு அப்படியான பயிற்சிகளைத் தாங்களே செய்தினம். அப்ப அது அடுத்த கட்டத்துக்கு உயர்த்திக்கொண்டு போனது. அப்ப, தனிய ஒருவனல்ல; அவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்ததை இனங்காண வைத்ததுதான் நான் செய்த பங்கு. அப்படியான ஒரு வகையிலதான் நான் வெற்றி கண்டனான் என்று சொல்லுவன்.

- **நீங்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்திலேயும் அக்குவைனாஸ் கல்லூரியிலும் பெற்ற நாடகப் பயிற்சியின்போது சுவாசப் பயிற்சியும் பெற்றிருக்கிறீர்கள். அதே வேளை, நீங்களாகத் தேடி சித்தர்களிடம் பெற்ற சுவாசப் பயிற்சியை எவ்வாறு நீங்கள் நாடகத்துக்குள் பயன்படுத்தினீர்கள்என்று சொல்ல முடியுமா?**

சித்தர்கள் என்கிற நேரத்தில எல்லாரையுமே சித்தர்களாகத்தான் பார்க்கிறனான். எனக்கு முன்னால வாற ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒரு அளவு சித்து இருக்கும். மாத்திரை அளவு, சிறிய அளவு, பெரிய அளவிலே – ஒவ்வொருவரும் சித்தர்கள் தான். சிலசில காரியங்களால அந்தந்தத் துறைகளில் பெரிய சித்தர்களாயிருப்பார்கள். நான் பார்த்த ஒவ்வொரு நாடகரும் ஒவ்வொரு நடிகரும் ஒரு சித்தன்தான். குறிப்பாக ஒரு மூன்று நாலு சித்தர்கள்... ஏரம்பூர்ச் சித்தர் - புளியம்பொக்கணையில, சுபசிங்க சித்தர் - ஈரப்பெரியகுளத்தில, மொத்தம் போல் சித்தர் - மன்னார் நறுவிலிக்குளத்தில..... வேறு வேறு சித்தர்களையும் நான் சந்தித்திருக்கிறன். இவர்கள், சிறப்பு அம்சங்கள் கொண்டவர்கள். அவர்கள் என்னுடைய ஆளுமைக்குள்ளே, என்னுடைய மனிதத்துக்குள்ளே உறங்கிக் கிடக்கிற ஒரு பூதத்தை வெளியிலே கொண்டு வாறதற்கு உதவினார்கள். நான் உறங்கிக் கிடக்கிற ஒரு பெரிய சக்தியை நான் வெளியிலே கொண்டுவர முடியுமென்றால், அதை ஏன் மற்றவர்களும் கொண்டுவரக்கூடாது. அப்படி அவர்கள் செய்கிறபோது, நாடகங்கள், வளரும் இன்னும் கூட நாடகங்கள் செய்யலாம். கூடப் பயிற்சிகளைக் கொடுக்கலாம். இன்னும்கூட ஆட்களைக் கொண்டுவந்து செய்யலாம். ஏனென்றால், நானொரு நாடகன். என்னால் புரிந்து கொள்ளக்கூடியது இன்னு மொரு நாடகனை. நாடகன் நல்லவன். அவன் மற்றவனுக்கு உதவிசெய்ய வேணுமென்று விரும்புவான். மற்றவனுக்காக இரங்குவான். ஏனென்றால், பாத்திரங்களாக அவன் மாறவேண்டும். பாத்திரங்களை அவன் உள்வாங்க வேணும் ; நேசிப்பான் ; மற்றவர்களுடைய துன்பங்களை உணர்ந்துகொள்ளுவான் ; அவர்களோடு சேர்ந்து அழுவான் ; சேர்ந்து சந்தோஷப்படுவான். அவன் பிரபஞ்சத்துக்குள்ளே கலக்கிறான். உதாரணத்துக்கு இன்றைக்குக்கூட எடுத்துக்கொண்டால், நான் யாழ்.சீலனை ஒரு சித்தராகத்தான் பார்க்கிறேன். ஒரு இசைச் சித்தன். காற் சட்டை போட்டுக்கொண்டு, அவர் உடமெல்லாம் உலாத்திக்கொண்டுதான் திரிகிறார். ஆனல், எல்லாத்தையும் துறந்துவிட்டு மூடவும் அவர் தயாராயிருக்கிற மனுசன். திடீரென்று வெறுமையாக நிற்பார். திடீரென்று தாங்கக்கூடாத ஒரு நிறைவோட நிற்பார். அது எங்கள் எல்லாரிடமும் இருக்கிறது. "என்ன செய்கிறதென்று தெரியவில்லை; ஒரே வெறுமையாயிருக்கிறதென்போம்; ஒரே களைப்பாயிருக்கிறது. சில வேளை தலை வெடிக்கும்போல இருக்கிறது; இது நடக்கிற நேரத்தில, என்னுடைய சக்தியை என் இடத்தில நான் அளவாகப் பிரயோகிக்கவேணும் என்ற பயிற்சி எனக்கு இல்லாதது. நீர் வெள்ளமாகவும் ஓடுது. உடைப்பு எடுத்துக்கொண்டும் ஓடுது. சாதாரணமாகவும் ஓடுது. அது ஒரு அளவாக ஓட வைக்கிறதற்கு அதற்கான வழி முறைகளைக் கண்டு கொண்டால் நாங்கள் வெல்லுவோம். அப்ப எவனெவன் தனக்குத் தெரிந்ததை மற்றவனுக்குக் கற்றுக்கொடுக்கிறானோ அவன் ஒரு வகைச் சித்தன்தான். அவன் அதே துறையில் கூர்மையாக செயல்படுவானென்றால் அவன் பலருக்கு மனதால கவரப்படுவான். பலர் அவனைப் பார்ப்பார்கள். பலர் அவனிடமிருந்து கற்றுக் கொள்வார்கள். அப்ப, அவன் பெரும் சித்தனாக ஏற்றுக்கொள்ளப் படுகிறான்.

எமது சித்தர்களால் எனக்குத்தரப்பட்ட குரல், மூச்சுப் பயிற்சிகளைத் தான் ஐராங்கனி சேரசிங்க, ஏனஸ்ரர் மெக்கின்ரயர், டாக்டர் ஹல்பே போன்றவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட, மெருகூட்டப்பட்ட சுவாசப் பயிற்சிகளை எனக்குத் தந்தார்கள். ஆனால், இவையெல்லாம் எமக்குப் புதியதல்ல. கீழைத்தேசத்தில ஒரு இலக்கண வரம்பிற்குள் இல்லாத ஒன்றை மேல் தேசத்துக்குக் கொண்டு போய் மெருகூட்டி, இலக்கணவயப்படுத்தித் தருகிறபோது அது ஒரு சாஸ்திரமாகிறது. இதை எங்களுடைய சித்தர்கள் கொஞ்சம் கொஞ்சமாக கஸ்டப்பட்டு எமக்கு ஊட்டினார்கள். மேற்கத்தைய சுவாசப்பயிற்சி, மேலைத்தேய வைத்தியம் போல உடனடியாக நிவாரணம் தரும். சித்தர்களுடைய பயிற்சி சித்தவைத்தியம் போல, மெதுவாக நிவாரணம் தரும்.

எனவே, மிக அவசரமாக உடனடியாக நாடகம் தேவையென்றால், அதற்கான உடனடியான பயிற்சிகளைத் திட்டமிட்டுக் கொடுத்தேன். நீண்ட காலப் பயிற்சியோடு நாடகம் தயாரிப்பதாயின், நீண்ட காலப் பயிற்சிகளைத் திட்டமிட்டு அதற்கான பயிற்சிகளைச் செய்துவந்தேன்.

எனவே, இதற்கான பயிற்சிகள் சித்தர்களிடமிருந்தும், மேலைநாட்டு முறைகளிலிருந்து கற்றவர்களிடமிருந்தும் எனக்கு வந்துசேர்ந்தது.



"பல நாடகங்களின் நெறியாளர், பிறமொழி நாடகமரபை முறையாகக் கற்று, தமது தமிழ்மொழியின், மரபு நாடத்தின் மூலவேரைத் தேடி அலைந்து, ஆய்வுசெய்து, இலைமறை காயாக இருந்த தமிழ் மரபு நாடகங்களையும், நாடகக் கலைஞர்களையும் வெளிக்கொணர்ந்த வித்தகர் திரு.தாசீசியஸ் அவர்கள்."

- **70களிலும் 80களிலும் நீங்கள் பெற்ற பயிற்சியும் நீங்கள் தயாரித்து உருவாக்கிய நாடகங்களும் அதன் பயனாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியும், நாடகக் கலையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே ஒரு பயின்துறையாகப் புகுத்தியதற்கு ஒரு காரணமாயிருந்ததென்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

அப்படிச் சொல்லுவதைப்போல முட்டாள்தனம் வேறெதுவும் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. உள்ள ஒன்றை இரண்டாக்குவதற்கும் அதனுடைய அழகை சிறப்பிப்பதற்கும்தான் நாங்கள் இடையில் கருவிகளாக வந்திருப்போம். காலம்காலமாக உள்ளதுதான் இந்த இயல்கள். நாடகம் என்றது கூத்துக்களிலிருந்து வருகிறது. கூத்து என்பது

48ம் பக்கம் பார்க்க...


## கூத்தாடிகள் வழங்கும் நாடகப் பட்டறை

நாடக மேதையும், நவீன நாடக முன்னோடியும், தமிழ் மரபு நாடக வடிவத்தை மீள் பதிவு செய்தவரும், லண்டன், சூரிச், பாரிஸ், ரொரண்ரோ போன்ற இடங்களில் நாடகப் பட்டறை பலவற்றை நடாத்தியவருமான தாசீயஸ் பயிற்சிகளை நடாத்துவார்.

தயவு செய்து முன் கூட்டியே பதிவு செய்யவும். காலம் June 10, 2006 from 10a.m to 7p.m

உங்கள் வருகையை உறுதி செய்யவும்
416-674-0397, 416-857-6406

# நாடகர்கள்...

47ம் பக்கத் தொடர்ச்சி...

கர்ணங்களிலேயிருந்து வருகிறது. கர்ணங்கள் அச்சத்திலேயிருந்து வருகிறது. பக்தியும் அச்சமும் எந்தவொரு இனத்தோடும் கலந்துகொண்டு வருகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை, நாங்கள் வாழ்க்கையோடு, நிலங்களோடு, காலங்களோடு, எங்களுடைய இலட்சியங்களை, அச்சங்களை எல்லாம் வளர்த்துக்கொண்டு வந்த நாங்கள், காலங்களோடு எங்களுடைய கூத்துக்களையும் சேர்த்துக்கொண்டு வந்த நாங்கள் எங்களைப் பற்றிய ஒரு முழுமையான அறிவைப் பெறுவதற்கு எங்களுடைய இலக்கியங்கள் பற்றிய அறிவு வேணும். எங்களுக்கான ஒரு கல்விக்கூடமோ, பல்கலைக்கழகமோ உருவாகிற நேரத்தில், இவற்றை உள்ளடக்கியதாக இல்லாவிட்டால் அது ஒரு வெறும் காட்சிப்பொருளாக, ஒரு செயற்கையான பொருளாக இருக்கும். அது ஒரு இலக்கியத் தன்மையான பொருளாக இருக்கமுடியாது. சில வேளைகளில் நாடகக் கலை விரைவாக வளர்வதற்கு மக்களால் மதிக்கப்படுவதற்கு நாங்கள் காலாய் இருந்திருப்போம். ஒரு விழிப்புணர்வைக் கொண்டுவந்திருப்போம். இது ஒரு வாழ்க்கை. வாழ்க்கை ஒரு சங்கிலித் தொடர் போன்றது. அந்தச் சங்கிலியில் நான் ஒரு வளையம். அந்த வளையம் முடியவில்லை. அது தொடர்ந்துகொண்டேயிருக்கும். அந்த வளையம் தன்னுடைய கடமையைச் செய்துள்ளது. அந்த வளையம்தான் முக்கியமென்றால், அது அந்த வளையத்தோடு முடிவடைந்துள்ளது. எனவே, அது அப்படி இல்லை. பழையவற்றையும் இனி வரவேண்டியவற்றையும் இணைத்துக்கொண்டிருக்கிறன்.

• **கொழும்பு கல்வித் திணைக்களத்திலே நீங்கள் பணிபுரிந்தபோது தான், யாழ்ப்பாண நாடகக் கல்லூரியில் பயிற்சி கொடுப்பதற்காக வார இறுதியில் ஒவ்வொரு வாரமும் போய்வந்துள்ளீர்கள். இப்படியாக உங்களுடைய செலவில் ஒவ்வொரு வாரமும் போய் பயிற்சியளித்து வந்ததற்கான பின்புலம் என்னவென்று சொல்ல முடியுமா?**

எல்லாமே என்னுடைய மனைவிதான். எனக்கு காசினுடைய அருமை தெரியாது. என்னுடைய மனைவிக்கு நட்பு என்று வருகிறபோது அது எல்லாவற்றையும் விட பெரிது. காசு நட்புக்கு இணையாகாது. எனவே, காசுபற்றிய பிரச்சினைக்கு இடம் அங்கு இருக்கவில்லை. அதோடு நான் கல்வித் திணைக்களத்தில் வேலை செய்தபடியால் எனக்கு பயணச்சீட்டுகள் இலவசமாகக் கிடைத்தன. அதையும் இதற்குப் பயன்படுத்தினேன். அதே காலகட்டங்களில் நான் நாடு பூராகவும் போய், நாட்டுக்கூத்துக்களை ஆராய்ந்து திரிந்தபோது, அவற்றைப் பதிவுசெய்து றேடியோவில் ஒலிபரப்புவதற்கு அதன் பொறுப்பாளராயிருந்த கே.எம்.வாசகர் எனக்கு பயணச் சீட்டுகள் தருவார். இப்படியாக நாட்டுக்கூத்துப் பதிவுகளுக்குப் போகும்போதும் பயிற்சிகள் கொடுக்கக்கூடியதாய் இருந்தது. ஆனால், நாங்கள் பயணம்செய்வதுதான் பெரும் கஸ்டமாய் இருந்தது. ஆனால், நெடுந்தீவிலிருந்தும் திருகோணமலையிலிருந்தும் பயிற்சிக்காக வந்தவர்கள் பட்ட கஸ்டங்களைப் பார்க்கிறபோது எனது கஸ்டம் பெரிதாகத் தெரியவில்லை.

• **தற்போது நாடக உலகில் மரபு நாடகங்கள், நவீன நாடகங்கள் என்ற பதங்கள் பாவிக்கப்படுகின்றன. நவீன நாடகங்கள் என்பது காலம் சார்ந்ததா? அணுகுமுறை சார்ந்ததா அல்லது அரசியல் சார்ந்ததா?**

நீங்கள் கேட்கும் கேள்விகள் எல்லாமே பெரிய துறைகள். நவீனம் என்பது புதுமை. புதுமை எதில... இல்லாத ஒன்றிலா அல்லது உள்ளதில் புதுமையா? உள்ளதில் புதுமை என்றால், பாரம்பரியத்தில்தான் புதுமை வரும். எங்கு புதுப்பிக்கிறோமோ அங்கு பாரம்பரியம் வரும். விதையிலிருந்து மரம் வரும்போது அது புதுமையாகுது. இலை வரும்போது புதுமையாகுது. காய்வரும்போது புதுமையாகுது. எனவே, பிரித்துப் பிரித்துப் பார்க்காமல் அதை அதை அப்படியே பார்க்க வேண்டும்.

• **இந்தியாவிலே பாதல்சர்க்காருடைய மூன்றாவது நாடகம் அதாவது மூன்றாவது Theatre அல்லது Poor Theatre என்பது எவ்வாறு தமிழ் நாடகங்களில் பயன்பட்டுள்ளது, அதே வேளையில் நீங்கள் தொடக்கிய Instant Theatre என்ற முறையை நாங்கள் எவ்வாறு தமிழ் நாடகங்களில் புகுத்தலாமென்று சொல்லுவீர்களா?**

பாதல் சர்க்காருடைய மூன்றாவது நாடக முறை என்பது எமக்குப் புதியதல்ல. கலைவடிவங்கள் சாதாரண மக்களிடையே எப்படி வளர்ந்து வருகின்றதென்பதை அடிப்படையாக வைத்துத்தான் பாதல் சர்க்கார் தன்னுடைய நாடக வடிவை உருவாக்கினார். பிரளயனுடைய வீதி நாடகங்களைப் பார்த்தால் அந்தத் தன்மை தெரியும். ஒரு துணித்துண்டுதான் ஆயுதம். அது ஒரு இருக்கை; ஒரு படுக்கை; அதுதான் வரவேற்பு; துணி போன்ற பலவற்றைப் பயன்படுத்தி அங்கு வீதி நாடகங்களை நடத்துகிறார்கள். இதற்கும் பாதல் சர்க்காருடைய நாடகங்களுக்கும் சொந்தம், உறவு உண்டு. மாமன், மச்சான், அண்ணன், தம்பி போன்ற உறவு. பேராசிரியர் ராமானுஜம் அவர்களுடைய நாடகங்கள், கண்ணப்ப தம்பிரானுடைய கூத்து வடிவங்கள் கூட ஒன்றுகூடிக் கதைத்து திட்டமிட்டுச் செய்யும் கலை வடிவங்கள். இவைகள் எல்லாம் பாதல் சர்க்காருடைய தியேட்டருக்குள் உள்ளன. இதற்கான வேர் எங்கு என்று தேடினால் அது எங்களுடைய கிராமியக் கலைக்குள் தான் இருக்கும். இனி முருகபூபதியின் நாடகங்களைப் பார்த்தால் அதுவும் கிராமியக் கலைக்குள் இருந்துதான் வரும்.

Instant தியேட்டரைப் பார்த்தால் அங்கு கூத்திலுள்ள சில வடிவங்களை அங்கு பயன்படுத்துகிறோம். நாடக முறையைச் சூழலுக்கு ஏற்ற மாதிரி கூடிக் கதைத்து அதைச் செய்யும்போது, இந்த நாடக முறைகள் உருவாகின்றன. எனவே, உத்திகளை இனங்கண்டு உருவாக்க வேண்டும். எனவே, இங்கு ராமனுஜம் வருவார்; இளைய பத்மநாதன் வருவார்; ஞானம் லெம்பட் வருவார்; பிரளயன் வருவார்; அன்ரன் பொன்ராஜா வருவார்; சில வேளையில் தாசீசியசும் வருவார். இப்படிச் சொல்லும்போது, இப்பெயர்கள் அல்ல வருவது. ஆனால், அவர்களுடைய சிந்தனைகளும், உத்திமுறைகளும் தான் வரும். இவையே, எங்களுக்கு முக்கியமானவை.

• புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் நாடகங்கள் தமிழ் வளர்வதற்கு எவ்வாறு உதவுகின்றன என்று சொல்ல முடியுமா?

நான் தமிழ் மட்டுமே தெரிந்த பெற்றோரிடையேயும், தமிழே பேசிய கிராமத்திலிருந்தும் ஆங்கிலம் படிப்பதற்காக இளவாலை ஹென்றிக் கல்லூரிக்குப் போய் ஆங்கிலம் படிப்பதற்காக ஆங்கில நாடகங்களிலேயே முழுக் கவனமும் செலுத்தினேன். ஆங்கில நாடகங்களே எனக்கு ஆங்கிலம் படிக்க உதவியது. சிந்தனையிலிருந்துதான் மொழி வருகிறது. எனவே, தமிழில் சிந்திப்பதற்கு பிள்ளைகளுக்கு உதவினால் தமிழ்மொழி தானாக வரும். வீட்டுக்கான சூழலை ஏற்படுத்தி அதைத் தமிழில் கொண்டுவந்து தமிழ் மொழியை வளர்க்கலாம். தமிழ் நாடகங்களில் எமது பெற்றோர் கூடிய கவனம் செலுத்த, தமது பிள்ளைகளை தமிழ் நாடகங்களில் பங்கேற்கச் செய்து தமிழில் சிந்தித்து, தமிழில் எழுதி, தமிழில் பேசி, முறையான பயிற்சி பெற்றால் எம் பிள்ளைகளிடையே நாடகத்தின் மூலம் தமிழ் தானாக வளரும்.

■ ■ ■




உங்கள் மத்தியில்
ஊர் அறிந்த
பிரகாஷ்ராஜ்
UTHAYAN
உதயன் 2007
உங்கள் அபிமான உதயன் பத்திரிகையின் 11வது
ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும்
பல்சுவைக் கலைவிழாவை
சிறப்பிக்க வருகிறார்
பிரபல தென்னிந்திய
திரைப்படமுன்னணி
நடிகர் பிரகாஷ்ராஜ்
02-06-2007 சனிக்கிழமை:
ஸ்காபரோ வின்சன்ட் சேர்ச்சில்
உயர் கல்லூரி மண்டபத்தில்
03-06-2007 ஞாயிற்றுக்கிழமை:
ஸ்காபரோ கென்னடி பிஞ்ச்
சந்திப்பிற்கு அருகாமையில் உள்ள
Metropolitan Centre
மண்டபத்தில்
பாரதி ஆர்ட்ஸ் குழுவினரின் இனிய இசை, அக்னி இசைக் குழுவினரின் அசத்தல் இசை நிகழ்ச்சி மற்றும் நாடகம், நடனங்கள் அத்துடன்
பிரபல தென்னிந்திய திரைப்பட முன்னணி நடிகர் பிரகாஷ்ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக.
JUNE
SATURDAY SUNDAY
02 03
agni
Bharradhi Arts
பாரதி
கலைக் கோயில்
இரண்டு நாள் விழாக்கள் பற்றிய விபரங்களுக்கும்
அனுமதிச் சீட்டுகளுக்கும்:
416-752-1524, 416-732-1608, 647-409-8966

# M and M CONSULTANTS

**Serving 21years in Canada**
www.mandmconsultants.net



- Advice on Bankruptcy
- Credit Counselling
- Arrangement with Creditors
- Corporate Taxation
- Interview with CCRA and Ministry of Finance on Audit issues
- Settlement without Bankruptcy / Consumer Proposals




2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876


3645 Bathurst Street #212
(Bathrust & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550

# SERANDIBTRAVEL.COM

## SPECIAL TOURS AVAILABLE NOW!

**KAILASH MANSAROVAR YATRA**
THE SPRITUAL TOUR TO THE ROOF TOP OF THE WORLD
>17 days / 18 nights
>Departures:
April 30th - September 3rd, 2007
(Every Monday)
>Cost: $4,980.00 CAD

serandibtravel.com





**ALL INDIA PILGRIMAGE TOUR**

**MALAYSIA -THAILAND -CAMBODIA TOUR**

**GUIDED TOUR TO CUBA**

**AUSTRALIA & NEW ZEALAND TOURS**

**EUROPEAN TOURS**

Serandib Travel1

For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691

Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com

USA

| | | | |
|---|---|---|---|
| New York: | 716-408-0342 | Detroit: | 313-263-0610 |
| Washington DC: | 202-517-0139 | Chicago: | 312-625-1420 |
| Los Angeles: | 213-254-0119 | Miami: | 305-625-4102 |
| New Jersey: | 732-783-1513 | Honolulu: | 808-457-1730 |

# கோடை விடுமுறை



## திரு மகேசன்

கடந்த இரண்டு தொடர்களிலும், கனடிய மண்ணில் நாம் கண்டு களிக்கக்கூடிய உல்லாசப் பயணத்துறை சார்ந்த இடங்களையும் அமெரிக்காவின் புளோறிடா மாநிலத்தின் உல்லாசப் பயணிகளைக் கொள்ளை கொள்ளும் வசீகரமான இடங்களையும் உங்களுக்கு வழங்கினோம்.

கோடை விடுமுறைக்கான மூட்டைகட்டும் பணியில் நம்மவரில் பலர் இறங்கி விட்டார்கள். பிரயாணச் சீட்டுகளுக்கு விலை கேட்கும் படலத்தை தொலைபேசியூடாகவும் நேரடியாகவும் நம்மில் பலர் ஆரம்பித்து விட்டார்கள். நாட்டு நிலைமையோ நல்லாயில்லை- எங்கே போகலாம் என வரைபடைத்தை எடுத்து விரித்து வைத்து விலாவாரியாக விமர்சனம் செய்யும் படலம் தொடங்கிவிட்டது. கூட்டமாகப் போவதா? தனித்துப் போவதா? அல்லது வேறு என்ன வழி என்று பிரயாண முகவர்களைத் துளைத்தெடுக்கத் தொடங்கி விட்டார்கள். எனவே எமது பயணக் கட்டுரையின் சூடுபிடிக்கும் காலகட்டம் ஆரம்பமாகிவிட்டது.

உலகெங்கும் பயணம் மேற்கொள்ளும் எந்த ஒரு உல்லாசப் பிரயாணியாவது 'உலகின் மிகப்பெரிய சூதாட்ட நகரம்' எது என்று கேட்டால் அவர்கள் வாயிலிருந்து வரும் பதில் "லஸ்வாகஸ்" என்பதே. சூதாட்டமும், களியாட்டமும் சேர்ந்து விட்டால் கொண்டாட்டமே. அப்படிப்பட்ட வண்ணமயமான "லஸ்வாகஸ்" பற்றிய கட்டுரையே இதுவாகும்.

நெவாடா மாநிலத்தின் முக்கிய நகரமே இந்த லஸ்வாகஸ் நகரமாகும். சர்வதேச அளவில் விடுமுறை, களியாட்டம், கடை வீதி, சூதாட்டம் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் அனுபவிக்கக்கூடிய இடமாகக் கருதப்படுவதால் இங்கு இரவிலும் பகல்




போன்று மக்கள் நிரம்பி வழிவதைக் காணலாம். 1905ம் ஆண்டில் இந்த இடம் நிறுவப்பட்டாலும் 1911ம் ஆண்டிலேயே இது அமெரிக்க அரசால் ஒரு நகரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 20ம் நூற்றாண்டில் அமெரிக்காவால் நிறுவப்பட்ட பெரிய நகரங்களில் இதுவும் ஒன்றாகும். அத்துடன் 'உலகத்தின் களியாட்டத் தலைநகரம்' என்ற பெருமைக்கும் உரியது. இங்கே காணப்படும் கசினோ கொட்டகைகள் சின் நகரம் எனவும் அழைக்கப்படுகிறது. இன்றைய ஹொலிவூட் திரைப்படங்களினதும் தொலைக்காட்சி தொடர்களினதும் தயாரிப்புக்களில் பெரும்பாலானவை லஸ்வாகஸைத் தளமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டைவையாகும். இந்நகரத்தை திரைப்படங்களில் கண்டு களித்த பல வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இங்கு படையெடுப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

ரொறன்ரோவிலிருந்து மக்கறான் சர்வதேச விமானநிலையத்திற்கு பலதரப்பட்ட விமான சேவை நிறுவனங்கள் தமது சேவையை திறம்பட நடத்துகின்றன. எனவே ரொறன்ரோவிலிருந்து மிகக் குறைந்த கட்டணத்தில் லஸ்வாகஸ் இல் தங்கி ஒரு வார காலம் உங்கள் விடுமுறையைக் களிக்க பல விடுதிகள் உள்ளன. தனியாக விமானச் சீட்டை மட்டும் பெற்றுக் கொண்டு அங்கே சென்று விடுதியில் இடம் பிடிப்பது என்பது இயலாத காரியமாகும். எனவே புறப்படமுன் பிரயாணத்தை பொதிமுறையில் அனைத்தையும் இங்கேயே பதிவுசெய்து கொண்டு புறப்படுவதே சாலச்சிறந்தது.

இங்கே காணப்படும் பெரும்பாலான கசினோக்கள் 1989 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டவையாகும். தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் அமெரிக்க கோடீஸ்வரர்களில் ஒருவருமான டொனால் ற்ரம் இன் புகழ்பெற்ற ற்ரம் கோபுரத்தில் தங்கி, தமது திருமணத்தையோ முதலிரவையோ இங்கே நிறைவேற்ற விரும்புவர்களே அதிகம். உலகின் பெரும்பாலான கோடீஸ்வரப் பணக்காரர்களின் திருமணங்கள் இங்கே தான் நடைபெற்றன. இத்துடன் உலகின் பல கின்னஸ் சாதனைகளும் இங்கேதான் நிகழ்த்தப்பட்டன. சி என் என் தொலைக்காட்சி சேவையானது, தமது இரவு நேர (10:00PM)செய்திச் சேவையை பல தடவைகள் இங்கிருந்துதான் நேரடி ஒளிபரப்புச் செய்வது வழக்கம். அந்த வகையில் இரவு நேரங்களில் லஸ்வாகஸ் நகரம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, ஒளிமயமாகக் காட்சியளிக்கும் அழகை உலகில் வேறெங்கும் காணமுடியாது.

இந்நகரம் அமைந்திருக்கும் நெவேடா பிரதேசமானது மலைத்தொடர்களால் சூழப்பட்ட இடமாகும். இம்மலைத் தொடரின் அதிகாலை அழகைக்காணவே பல நூற்றுக் கணக்கான உல்லாசப்பயணிகள் பஸ்களில் வந்திறங்குவார்கள். இதன் அழகானது றோசாப்பூ நிறமும் சாம்பல் நிறமும் கலந்த ஒரு அழகோடு காட்சியளிப்பது இயற்கையின் வரமாகும். பாலைவனச் சூழலை ஒத்த இயற்கை எழில் காணப்படுவதால் பச்சைத் தாவரங்களை இங்கே காண்பது அரிது. வருடம் முழுவதும் சூரிய ஒளிக் கதிர்கள் வெப்பத்தைக் கொடுப்பதால் மோஜவ் பாலைவனத்தை ஒத்த காலநிலையே இங்கு காணப்படுகிறது. மே, யூன், யூலை மாதங்களில் வெப்பநிலை 90$^{O}$F ஆகும். யூலை, ஒகஸ்ட் மாதங்களில் இது 100$^{O}$F ஐ தொட்டுவிடுகிறது. குளிர்காலப் பனியானது மலைப்பகுதியில் மட்டுமே பெய்வதால் நகருக்குள் பனியைக் காண்பது அரிது.

2006ம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்நகரின் சனத்தொகை 1.7 மில்லியன் ஆகும். ஹவாய் தீவைச் சேர்ந்தவர்கள் இங்கே அதிகம் வாழ்வதாகக் கணக்கெடுப்புச் சொல்கிறது. உல்லாசப் பயணத்துறையே இந்நகரின் வருமானத்திற்கு முக்கிய காரணியாகும். பல நிறுவனங்கள் இங்கே காணப்படுகின்ற போதும் இவை அனைத்தும் மின்னியல் விளையாட்டு இயந்திரங்களைத் தயாரிப்பதில் ஈடுபடுகின்றன. மிகச் சிறந்த சூதாட்டத்திற்குப் பயன்படுத்தும் ஸ்லொட் இயந்திரங்களை இங்கே வந்து பார்க்கலாம்.



மிகப் பெயர் பெற்ற கசினோக்கள் லஸ்வாகஸ் பொலவாறி தெற்கில் அமைந்திருப்பதால் இப்பகுதி லஸ்வாகஸ் ஸ்ரிப் என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் கோல்டன் நக்கற், போர் குயின்ஸ், பிறீமொன்ற் கசினோ, பிளாஸா கொட்டேல் கசினோ, லஸ்வாகஸ் கிளப், கோல்டன் கேற், கொட்டேல் கசினோ போன்றவை மிகப் பெயர் பெற்ற சூதாட்ட நிலையங்களாகும். இவை அனைத்தும் 24 மணி நேரமும் திறந்திருப்பதோடு பெரும்பாலும் இரவு நேரங்களில் கேளிக்கை நிகழ்ச்சிகள் நிறைந்த இடமாகவும் இருக்கின்றன. இங்கே புகுந்தவுடன் கையிலிருக்கும் பணத்துடன் ஸ்லொட் இயந்திரத்திற்கு முன்னால் உட்கார்ந்து தம் சட்டைப் பைகளை பணத்துடன் நிறைத்து கனடா திரும்பும் பலர் இருக்கின்றார்கள். இங்கே உள்ள சூதாட்ட நிலையங்களுக்கு நீங்கள் உங்கள் சிறு பிள்ளைகளை அழைத்துச் செல்லாது அவர்களைப் பாதுகாக்க கசினோ நிர்வாகமே சிறுவர் பராமரிப்பு நிலையங்களை இதனுள்ளே அமைத்துள்ளனர். இதற்காக அவர்கள் பணம் ஏதும் அறவிடுவதில்லை.

தனியாக உங்கள் நேரத்தை வீணடிக்காது கசினோவில் பணத்தைக் கொட்டிவிடாது வெளியிடங்களைப் பார்வையிடும் பயணத்தையும் நீங்கள் நடத்தலாம். Grand Canyon, Hoover Dam பகுதிக்கு உங்களை சொகுசு வண்டியில் அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளையும் நீங்கள் ரொறன்ரோவிலேயே செய்து கொள்ளலாம். மொஜேவ் பாலைவனத்திலிருந்து Hualapai Nations Grand Canyon வரையான பயணத்தின்போது அவர்களே உங்களுக்கு விருப்பமான உணவு வகைகளை இலவசமான ஒழுங்கு செய்வார்கள். செந்தணல் போன்ற அழகு நிறைந்த இவ்விடம் வாழ்நாளில் நாம் ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய அதிசயமாகும். உலக அதிசயமளவுக்கு பேசப்படும் Grand Canyon பயணமானது பல அதிசயங்களை உண்மையிலேயே உள்ளடக்கியது. இந்த பஸ் பயணத்தின்போது நாம் முதலில் நவீன உலகின் பொறியியல் அமைப்பில் கட்டப்பட்ட ஹூவர் டாம் எம்மைப் பிரமிக்க வைக்கிறது. எப்படி இது சாத்தியமானது என்று மூக்கில் விரலை வைக்கலாம்.

இதனை முடித்துக்கொண்டு நாம் நுழைவது அமெரிக்காவின் Man Made Lake என்று புகழப்படும் Lake Mead ஆகும். இது மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய ஏரி ஆகும். இதனைத் தொடர்ந்து நமது பயணமானது 900 வருடம் வயதை ஒத்த மரங்கள் நிறைந்த யொ'ஷுவா மரக்காடுகள் ஊடாக பயணமாகிறது. சுகந்த மணமும் பசுமையும் நிறைந்த இந்தப் பயணம் ஏக்கர் கணக்கான பிரதேசத்தினூடாகச் செல்லும். இவ்வேளையில் பஸ்ஸின் குளிர்சாதன வசதி நிறுத்தப்படும். காரணம் நாம் பழமை வாய்ந்த மரங்களின் குளிர்மையை அனுபவித்து வரவேண்டும் என்பதே. இந்தப் பயணத்தின் முடிவில் Hualapai Indian Nation எனப்படும் பழங்குடிகளின் வாழ்விடத்தினுள் பிரவேசிப்போம். Guano Point இல் பழங்குடிகளின் வாழ்க்கை முறைகளைக் கண்டு களிப்பதோடு பல வாழ்க்கைமுறைகள் எமது ஈழத்து வாழ்க்கைமுறையோடு ஒத்து வருவதைக் கண்கூடாகக் காணலாம். இங்கிருந்து புறப்பட்டு Grand Canyon Edge அடையும் நாம் சற்று ஆறி அமர்ந்து எமது உணவை முடித்துக் கொள்ளலாம்.Canyon Rim இலிருந்து 5மைல் தூரத்திற்கு கொலறாடோ ஆற்றின் அழகைக் கண்டு களிக்கலாம். லஸ்வாகஸ் லிருந்து 3.5 மணிநேரப் பயணம் இதுவாகும். ஆனாலும் நெடிதுயர்ந்த அந்த 900 வருட வயதுடைய மரக்காட்டினூடே பயணம் செய்வதும் உச்சியிலிருந்து கொலறாடோ ஆற்றை ஒரு ஊசிக் கோடுபோல் பார்ப்பதும் நாம் வேறு ஒரு கிரகத்தில் வசிக்கிறோமா என்ற உணர்வையே ஏற்படுத்தும். குதிரை வண்டிலில் Hualapai Ranch இனூடாகப் பயணம் செய்து, அவர்களின் வாழ்க்கை முறையை இரசிப்பது வாழ்க்கையில் ஒருஅதிசய வரம் பெற்றதற்குச் சமம்.

தமது பயணத்தில் சற்று விறுவிறுப்பைக் கூட்டவிரும்புபவர்கள் தமது பயணத்தை உலங்கு வானூர்தியில் சென்று அனுபவிப்பர். இதற்காக உலங்கு வானூர்தி ஒழுங்கு செய்யப்படுகிறது. ஜொ'ஷுவா மரக்காட்டைக் கடந்தவுடன் எமக்காக உலங்கு வானூர்தி காத்திருக்கும். அதில் நாம் 4000 அடி உயரத்தில் பறந்து Grand Canyon னின் அழகை இரசிப்பதோடு இதன் சுவர் அமைப்புக்களையும் மிக அண்மையில் பார்த்து மகிழலாம். இவ்வேளையில் உலங்கு வானூர்தி தரையைத் தொட்டு எம்மை கொலறாடோ ஆற்றின் Boat Rideக்கு அழைத்துச் செல்லும். சாகசம் புரிபவர்களுக்கு இது திகிலை ஏற்படுத்துவது நிச்சயம்.

மொத்தத்தில் லஸ்வாகஸ் செல்லும் பயணமானது பலரின் மனதில் சூதாட்டம் மட்டும்தான் என்ற எண்ணத்தை உருவாக்கி இருக்கின்ற காரணத்தினால்தான் நாம் இதனை சற்று விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லவேண்டி ஏற்பட்டது. உலகின் கண்களுக்கு லஸ்வாகஸ் ஒரு கசினோ உலகமாக இருந்தாலும் நாம் கூறிய Grand Canyon திகில் பயணமானது நிச்சயம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். விடுதியில் படுத்திருந்து, சாப்பிட்டுவிட்டு கடற்கரையில் கும்மாளமடிப்பது ஒரு வகைப் பயணம் என்றால் இந்நகரத்திற்குச் செல்வது ஒரு சாகசப் பயணமே. ஒளி நிறைந்த இந்நகரில் திகில் நிறைந்த அனுபவத்தோடு நாடு திரும்பலாம். அனைத்துப் பதிவுகளையும் பிரயாண முகவரூடாக செய்த பின்பே புறப்படவும்.


■ ■ ■

RAHALAYAM Music Academy
இராகலயம்
SINCE 1989

# இராகலயம் இசைக் கல்லூரியின்
## திரை இசை நிகழ்ச்சி

# இன்னிசை வார்ப்புகள் 2007

ரொரோண்டோ இசை மேடைகளில் 2ஆவது முறையாக மேல் நாட்டு இசை வாத்தியங்களுடன் கர்நாடக இசை வாத்தியங்களும் (கீபோர்ட், வீணை, வயலின், மிருதங்கம், தப்லா, கிட்டார், பேஸ், டிரம்ஸ்) இணைந்து வழங்கும் ஓர் புதுமையான திரை இசை நிகழ்ச்சி



சங்கீதவித்துவான்/இசைத்திலகம்/பல்கலை வேந்தன்/
முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசை நிகழ்ச்சித் தயாரிப்பாளரும்,
இசையமைப்பாளருமான

K.S. இரவீந்திரனின்

*இசை மேற்பார்வையில் கல்லூரி மாணவ, மாணவிகளுடன் பல்லினக் கலைஞர்களும் பங்கேற்கும் பழைய/இடைக்கால/புதிய திரை இசைப்பாடல் தெரிவுகளுடன், சிறியோர் முதல் பெரியோர் வரை பங்கு கொள்ளும் மாபெரும் சிறப்பு இன்னிசை நிகழ்ச்சி*

- திரை இசைப்பாடல்கள்
- வாத்திய விருந்து
- கர்நாடக இசைப்பாடல்கள்
- தாளவாத்தியக் கச்சேரி
- மெல்லிசைப் பாடல்கள்
- சிறப்பு நடனம்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன் காணத் தவறாதீர்கள்!!!

Mr.Creations 416-548-7444



கலைமாமணி
K.S. இராஜ்குமார்
(ஜேர்மனிய இசைக்கலைஞர்)
சிறப்பு நிகழ்ச்சியாக
தாளவாத்தியக்கச்சேரி இடம்பெறும்

காலம்: **Sunday, July 22, 2007**
நேரம்: மாலை 5 மணி
இடம்: **Sts. Peter & Paul Banquet Hall**
**231 Milner Avenue, Scarborough ON**

**தொடர்புகளுக்கு: 416-335-7157, 416-788-3785**

**இன்னிசை வார்ப்புகள் வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.**

KARU'S ROYAL TEAM
Top 10 TEAM in CANADA

# KARU'S ROYAL TEAM

ROYAL LePAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

THE CHAIRMAN'S CLUB
NATIONAL
Award Winner
2003 to 2006
Top 1% in Canada

வீடு வாங்கவும், விற்கவும்
**Tel: 416-284-5555**
880 Ellesmere Road. Suite 203(Kennedy & Ellesmere), Scarborough, ON.



Karu Kandiah FRI, CRES
Broker
19 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்...

# நல்லவீட்டில் குடிபுகுவோம்




வரதராஜா கந்தசாமி
- வீடு விற்பனைப் பிரதிநிதி -


## தொடர் 1-23

தவறு 69: நாங்கள் ஒருபோதும் வீட்டு உரிமையாளரைச் சந்திக்கவில்லை அவர்களைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது.

பாடம்: நீங்கள் ஒரு வீட்டை வாங்குமுன்பு அதன் உரிமையாளரைப்பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

வீடு விற்பனை முகவர்கள் வீட்டை வாங்குபவர்களையும், வீட்டை விற்பனை செய்பவர்களையும் பிரதிநிதப்படுத்துபவர்களாக இருப்பார்கள். இப்பிரதிநிதிகளிடம் பலவிதமான ஒப்பந்தங்கள் வந்துபோய், இறுதி நேரத்தில் அது கைகூடாமல் போகும். இங்கே அவர்களுடைய தனிப்பட்ட திறமையும் முக்கிய பங்கு வகிக்கின்றது. பின்பு ஏதோ ஒரு விதத்தில் அவ்வீட்டை வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ இறுதி நேரத்தில் கைகொடுக்கும் சந்தர்ப்பம் வரலாம். ஏன் வீட்டை விற்கிறீர்கள்? இது வீட்டை வாங்குபவரின் கேள்வி. எங்களுக்கு அமெரிக்காவில் வேலை கிடைத்துவிட்டது. நாங்கள் அங்கு அடுத்த மாதம் செல்கிறோம் அதற்கிடையில் இவ்வீட்டை விற்கவேண்டும். இது வீட்டை விற்கும் ராதாவின் பதில். சில நேரங்களில் வீடு வாங்க - விற்க விற்பனைத் தத்துவங்களின் அடிப்படையில் இப்பதிலானது வீட்டை விற்பவருக்கு சாதகமாக அமையும். வீட்டை வாங்குபவருக்கு நன்மை தராது. ஆனால் நீங்கள் வீட்டை வாங்கும்போது கொடுக்கும் முதல் முறையான முன்வழங்கலைக் கொடுக்கும்போது, வீட்டை விற்பனை செய்பவரை முழுமையாக அறிந்து கொள்வது என்பது எப்படி என்பதை கீழ்க்கண்ட கேள்விகளின் அடிப்படையில் தெரிந்து கொள்வோம்.

- வீட்டை விற்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
- அவர்கள் திறந்த மனதுள்ளவர்களா? அல்லது கடுமையான போக்குடன் கூடிய வாதிடும் மனப்பான்மையுள்ளவர்களா?
- அவர்கள் தங்கள் வீட்டிற்கு நல்லவிலை கிடைக்கும்வரை பொறுமையாக இருப்பார்களா? அல்லது ஓரளவு நியாயமான விலைக்கு அவ்வீட்டை விற்க முயற்சிப்பவர்களா?
- அவர்கள் இன்னொரு வீட்டை முதலே வாங்கி விட்டார்களா?
- ஏன் அவர்கள் அவ்வீட்டை விற்கிறார்கள்?
- அவர்களுடைய முக்கிய தேவைகள் என்ன? அதாவது உணர்வுரீதியான, தனிப்பட்ட, நிதிநிலமைகள் என்பன.



- அவர்கள் அவ்வீட்டை விற்கும்போது கவலைதரக்கூடிய காரணங்கள் என்ன?

போன்ற கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வது மிக உதவியாக இருக்கும்.

இயற்கையாகவே வீட்டை விற்பவர், தனது முகவர் மூலமாக இந்தக் குறிப்பிட்ட இடத்தில் அவ்வீடானது என்ன விலைக்கு விற்பனை செய்திருக்கின்றார்கள், அந்த இடத்தில் கடந்த காலங்களில் விற்கப்பட்ட வீடுகளின் பட்டியல்களின் அடிப்படையில் - ஒரு நிலையான நிர்ணய விலையின் அடிப்படையில் செயற்படுவார்கள். முன் வழங்கலை வழங்க முன்வரும் போது அவர்களுக்கு சகல வழிகளிலும் அது திருப்திகரமாக அமையும் பட்சத்தில் வீடு விற்கும் சந்தர்ப்பம் உறுதியாக்கப்படு கின்றது. உதாரணமாக வீட்டை விற்பவருக்கு இரண்டு முன் வழங்கல்கள் வந்தது. ஆனால் இரண்டுமே நிராகரிக்கப்பட்டது. காரணம் இருவரும் நிதி நிலைமையடிப் படையில் நிராகரிக்கப்பட்டார்கள். வீட்டை விற்பவருக்கும் சற்று தடுமாற்றம். மீண்டும் இப்படியான நிலை வராமல்த் தவிர்க்க வேண்டும். வீட்டை வாங்கவிருக்கும் நபர்களிடம் முக்கிய நிதி நிலவரம் (சேமிப்புப் பணம், கடன் சரித்திரம், வங்கியின் வரவு-செலவிற்கான துண்டறிக்கை, நம்பிக்கையான வேலைக்கான உத்தரவாதம், (lender Pre approval) சரியாக அமையுமிடத்து வீடு வாங்கும் சந்தர்ப்பம் உறுதியாக்கப்படுகிறது. இங்கே வீட்டை விற்பவர் அதிகூடிய விலைக்குத்தான் விற்கவேண்டும் என்கிறார். வீட்டை வாங்குபவர் அதி குறைந்த விலைக்கு வாங்கவேண்டும் என்கிறார். இப்படியான இக்கட்டான சந்தர்ப்பங்களில் எவ்வாறான அணுகுமுறைகளைக் கையாளலாம் என்பதை விரிவாக ஆராய்வோம்.

வீட்டை விற்பனைசெய்பவரை உங்கள் வீடு விற்பனைப் பிரதிநிதி மூலமாக ஒருமுறை அணுகுங்கள். அணுகுவதற்கு முன்பதாக அவ்வீட்டை ஒருமுறை பார்வையிடுவீர்கள். அதே நேரம் வீட்டை விற்பவரும் முடிந்தவரை ஒளிவுமறைவின்றி வீட்டைப்பற்றி பல விடயங்களைத் தெரிவுபடுத்துவார். நீங்களும் உங்களுக்குப் பிடித்த விடயங்களைக் குறித்துக் கொள்ளல் வேண்டும். உங்கள் சந்தேகங்களையும் அவர்களிடம் கேட்கலாம். உங்கள் விருப்பங்களை அவர்களிடம் தெரிவிக்கும் அதேவேளை இவ் வீட்டை வாங்க விருப்பப்பட்ட நபர்கள், அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொள்வது உங்களது பேரம் பேசுதலின் முக்கிய அம்சம். அதன்பின்பு நீங்கள் முன்வழங்கலைத் தயார் செய்யலாம்.

பேரம் பேசமுன்பு பல விடயங்களை அறிந்து வைத்திருப்பீர்கள். உங்கள் முன்வழங்கலானது டொலர் 325,000 முன் வழங்கலை உங்கள் முகவருடாக அனுப்புகிறீர்கள். அத்துடன் அவ்வீடு விற்கப்படும் பத்திரத்தில் எவை எவை உள்ளடக்கப் பட்டுள்ளன என்பதையும் தெரிந்து கொள்க. உள்ளடக்கப்படாத விடயங்கள், வீட்டின் குறைபாடுகள், சந்தை நிலவரம், வீட்டைப் பற்றிய மதிப்பீடு அதாவது அவ்வீட்டிற்குச் செய்யப்பட்ட மேலதிக வேலைப்பாடுகள் என்பன பேரம் பேசுதலை வெற்றிகரமாக அமைக்க வாய்ப்புள்ளது. ஆனால் பலர் விபரமறியாமல் முதல் முன்வழங்கலே வீட்டை விற்பவருக்குச் சாதகமான வாய்ப்பு வழங்கலைக் கொடுக்க அமையும் என்பதையும் தெரிந்து கொள்க.

நீங்கள் பேரம்பேசுதலில் ஈடுபடும்போது கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்ப்பது நல்லது. இலகுவாகவும், அறிவுரைகளையும் அவர்களுக்கு விளங்கக் கூடியமுறையில் தெளிவுபடுத்தல் அவசியம். பொதுவான விடயங்களைக் கதைப்பது நல்லது. உதாரணமாக காலநிலை, கலாச்சாரம், விளையாட்டு, அவ்வீட்டை வாங்குவது பற்றிய தகவல்கள், உதாரணமாக அவ்வீட்டில் காணப்பட்ட Grand father clock அது சம்பந்தமான விடயங்கள், பூந்தோட்டம், வீட்டின் அலங்காரங்கள் போன்றன.

வீட்டை வாங்கும்போது நீங்கள் முன்வழங்கலைக் கொடுக்கும்போது அதாவது அடிமட்ட விலையைக் (Low ball offer) குறைத்துக் கேட்கும் போது உங்களுக்கு அவ்வீடு வாங்கும் சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடும் வாய்ப்புள்ளது. வீட்டை வாங்கும் முகவருடாக வீட்டை விற்கும் முகவருடனும், வீட்டை விற்பனை செய்பவருடனும், நல்ல இணக்கப்பாட்டை அமைத்துக் கொள்வதன் மூலமும் பல நன்மைகளைப் பெறலாம்.

தவறு 70: மிகவும் மோசமான நிலைமையாக அவர்கள் இல்லை என்று கூறலாம்.

பாடம்: வீட்டை விற்பவருக்கு அவர்கேட்கும் விலையைவிட மிகமிகக் குறைவான விலையைக் குறைத்து (Low ball offer) முன் வழங்க முன்வரும்போது அது அவரை அவமரியாதைப்படுத்துவதாக அமையும். வீடு வாங்க-விற்க வியாபாரத் தத்துவத்தின் அடிப்படையில் இம் முன்வழங்கலானது, வீட்டை வாங்குபவருக்குத் தோல்வியாகவே அமையும் என்பதையும் கருத்திற் கொள்க. ராஜன் தனது வீட்டை டொலர் 290,000 ற்கு விற்கப்போட்டுள்ளார். ஆனால் சந்தை நிலவர அடிப்படையில் அவ்வீடானது டொலர் 280,000 – டொலர் 290,000 க்கு இடைப்பட்ட விலைகளில் அப்பகுதியில் அண்மைக் காலமாக பல வீடுகள் விற்கப் பட்டுள்ளன. ஆனால் அடிமட்டவிலையில் பேரம்பேசும் தேர்ச்சி பெற்ற விற்பனை முகவர் தனது வாடிக்கையாளருக்காக அவ் வீட்டிற்கு டொலர் 240,000 முன்வழங்கலைக் கொடுத்திருந்தார். ஆனால் ராஜனோ உடனடியாகவே இம்முன்வழங்கலை நிராகரித்துவிட்டார். டொலர் 280,000 என்று கூறி விட்டார். இப்படியான சந்தர்ப்பங்கள் வரும்போது நீங்கள் கருத்தில் எடுக்கவேண்டிய சில அம்சங்கள்.

- வீட்டை வாங்குபவருக்கு வீட்டின் சந்தை நிலவரம் பற்றிய விளக்கமின்மை.
- வீட்டை வாங்குபவருக்கும் இவ்விலையைக் கேட்டுப்பார்ப்போம் கிடைத்தால் வாங்கலாம் அல்லது விட்டுவிடலாம் என்கின்ற மனப்பான்மை.
- வீட்டை வாங்குபவர் உண்மையாகவே வீட்டை வாங்கும் மனப்பான்மை இல்லாதவர்.

61ம் பக்கம் பார்க்க...


நல்ல வீட்டில் குடிபுகுவோம்!

• வீடு வாங்குதல் • வீடு விற்றல் • வீட்டிற்கான ஈட்டுக்கடன்


முதலீட்டாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

காணி வாங்கி வீடு கட்டுதல்!
ஒன்ராறியோ Building Code ற்னமைய
காணி வேண்டி வீடு கட்டுதல்
-ரெரரன்டோ அல்லது அதன் புறநகர்ப்பகுதிகள்-

Cottage கட்டுதல்!
உங்கள் விடுமுறையை
உல்லாசமாகக் களித்திட
காணி வாங்கி Cottage
கட்டுதல்

தோட்டக்காணி வாங்குதல்!
Farm Land Opportunities
Custom Built Homes
காணிகள் விற்பனைக்கு உண்டு

- B.Eng (Hons) London UK
- Environmental Management Post Graduate Diploma - Construction- Niagara College
- Project Management - George Brown College
- Ontario Building Code - Part 9
- C.E.T - Road Construction Senior Inspector - MTO Designation



Varatharajah Kandasamy
Sales Representative
Dir: 647•898•2991
Off: 416•759•6000

VEEDU REALTY INC.
BROKERAGE
1345 Morningside Ave. Suite 8
Toronto Ont. M1B 5K3
Tel: 416.759.6000


UNITED TAMILS ASSOCIATION PRESENTS
தமிழ்மக்களுக்கான ஒரு குதூகலத் திருவிழா
தமிழ்
காணிவல்
MARKHAM FAIR
GROUNDS
10801 McCowan Road
TAMIL CARNIVAL
2007
1st 50
REGULAR BOOTHS
$400.00
(10X10)
1st 10 RESTAURANT
REGULAR BOOTHS
$800.00
(10x20)
www.tamilsevent.com
AUG 11 SAT
AUG 12 SUN
Venders, Food Venders and
Ice Cream Truck & Hot Dog Vehicle Info
416.564.9642






ஒரே நேரத்தில் இரண்டு கலைவிழாக்கள் ஒழுங்கு செய்யப்படுவதைத் தவிர்க்க உங்கள் கலை விழாக்களை முன்கூட்டியே ‘இணையம்’ இணையத் தளத்தில் பதிவு செய்து விடுங்கள். உங்கள் விழாவின் திகதியைத் தீர்மானிப்பதற்கு முன்பு இணையத்தைப் பார்த்து அந்தத் திகதியில் வேறு நிகழ்ச்சிகள் ஏதும் உள்ளதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் செல்லவிருக்கும் விழா, நிகழ்வுகள் சம்பந்தமான தகவல்களை இணையத்தைப் பார்த்து அறிவதுடன், நிகழ்வு நடைபெறும் இடத்தின் வரைபடத்தையும் இணையத்தில் பார்க்கமுடியும். இது முற்றிலும் இலவசமான சேவை.

inayam.net

T. 416 400 6 406 • F. 416 849 0594

www.inayam.net, info@inayam.net

PO Box: 63581, Woodside Square, 1571 Sandhurst Circle, Toronto, ON, M1V 1V0

# Buy & Sell Residential and Commercial Properties



**Raj. A. Rasaratnam** B.Com.
*Sales Representative*

**416-726-8055**
**416-299-8570**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/ GTA Realty Inc.**
Real Estate Brokerage*
*Independently own and operated

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3


**Bus: (416) 321-6969**
**Fax: (416) 321-6963**

**$208,000**



**McCowan/401**
2 B.Rooms, 2 Washrooms
Luxury Tridel,
Close To Scrb.Town Center

**$229,900**



**Kennedy/Ellesmere**
Condo Town, 3 B.Rooms
2 Washrooms
W/O Finished Basement
Close to TTC, 401, School

**$439,000**



**Markham/14th Ave.**
Detached, 4 B.Rooms
3 Washrooms
Sep. Ent. Basement

**$419,900**



**Markham/14th Ave.**
Detached, 4 B.Rooms
3 Washrooms
Finished Basement

**$329,000**



**Markham/Steele.**
Link, 3+1 B.Rooms
4 Washrooms:
Finished Basement

**$439,000**



**Brampton**
Excellent Location
Corner Property
4 B.Rooms
3 Washrooms

Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation

**416-726-8055**




# S.P. IMPORTERS FURNITURE INC.

*Importers & Distributors of High Quality Furniture & Mattresses*

now with expanded
NEW SHOWROOM
and more collections
of FURNITURE

NO PAYMENT
INTEREST
for 1 YEAR

on spot FINANCING
now AVAILABLE *OAC









2861 Lawrence Ave. East
*(Lawrence & Brimley)* Scarborough
416•266•3077

Special Sale on Solidwood Bedroom Sets and Lether Sofas
QUALITY | RELIABILITY | FREE DELIVERY **
*(**Over $500 in City Limits)*

# உலகில் அருகிவரும் நன்னீர்

சூழல் - 3

- பொன் குலேந்திரன் -

## மத்திய கிழக்கு நாடுகளில் தண்ணீர் தட்டுப்பாடு

மத்திய கிழக்கு நாடுகளில் பெரும்பகுதி பாலைவனங்கள். வெப்பநிலை சுமார் 50 பாகையை அடைந்து வரட்சியை உருவாக்கிகிறது. வருடாந்தம் பெய்யும் மழையின் விகிதம் மிகக் குறைவு. நதிகளும் வாவிகளும் அருமை. இதனால் அங்கு வேண்டியளவு எண்ணெய் நிலத்துக்கடியிலிருப்பினும் நீருக்குத் தட்டுப்பாடு அதிகம். ஆகவே அந்நாடுகளில் வருங்காலத்தில் எண்ணைக்காக அல்ல, நீருக்காக யுத்தங்கள் உருவாகலாம். எந்த நாடுகளில் கூடியளவு நீர் இருக்கிறதோ அந்த நாட்டின் மீது ஆக்கிரமிப்புகள் நடக்கலாம். 1991ல் இராக், குவைத் நாட்டை ஆக்கிரமித்தது எண்ணெய்க்காக. இன்னும் சில நூற்றாண்டுகளில் சௌதிஅரேபியா, கத்தார், போன்ற நாடுகள் இராக்கை நன்னீருக்காக ஆக்கிரமிக்கும் வாய்ப்புண்டு. ஏனெனில் அங்கு நீர்வளம் மற்றைய மத்திய கிழக்கு நாடுகளை விட அதிகம். யூப்பிரட்டிஸ் நதியானது அதன் ஜீவனாடி. இதே போன்று எகிப்து தேசத்து மக்கள் நைல் நதியை நம்பி வாழ்கிறார்கள். தற்போது பல மத்திய கிழக்கு நாடுகளில் தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக கடல் நீரில் உள்ள உப்பை நீக்கி, பரிசுத்தப்படுத்தி மக்கள் பாவனைக்கு எடுக்கிறார்கள். உலகில் உள்ள 11,000 உப்பு நீரை நன்னீராக்கும் இயந்திரங்களில் 60 விகிதம் மத்திய கிழக்கு நாடுகளில் உண்டு. இதனைச் செய்வதற்கு பணம் விரையமாகிறது. சுனைகளில் இருந்து பெறப்பட்டு சுத்தப்படுத்தப் பட்டு, போத்தல்களில் அடைத்த நன்னீரினை பணம் கொடுத்து மக்கள் வாங்குகிறார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் பாலைவனங்கள் விரிவடைந்துகொண்டு வருகின்றன. நதிகள் மறைந்து விடுகின்றன. இந்து நதிப் பள்ளத்தாக்கில் வேதகாலத்தில்இருந்த சரஸ்வதி நதி இதற்கு ஒரு உதாரணம். பூமி அதிர்வு, பருவநிலை மாற்றத்தால் வரட்சி, பாலைவனங்களின் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களால் நதிகள் சுருங்குகின்றன, அல்லது சிறிது சிறிதாக மறைகின்றன. செய்மதியிலிருந்து எடுத்த படங்களிலிருந்து சில தேசங்களில், பூமிக்கடியில் நதிகள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இதில் அடைபட்டிருக்கும் நீரை எவ்வாறு மேலே கொண்டுவரலாம் என்பது தீர்க்கப்பட வேண்டிய ஒரு விடயம். மலைப்பிரதேசமான ஓமானில், வாடி எனப்படும் நதிகளில், மழை பெய்யும் காலங்களில், மலைகளில் இருந்து வேகமாக வரும் மழை நீரானது தீடீர் வெள்ளத்தை உருவாக்கும். இந்நீர் சில மணித்தியாலங்களில் கடலுக்குள் ஓடி மறைந்து விடும். கோடை காலத்தில் மக்கள், கற்கள் நிறைந்துள்ள நதியில் நீர் இல்லாத காரணத்தால் அதனைப் போக்குவரத்துப் பாதையாகப் பாவிப்பார்கள். சில பகுதிகளில் நன்னீர்ச் சுனைகளுண்டு. இப்பகுதிகளில் விவசாயம் செய்வதையே தொழிலாகச் செய்து மக்கள் வாழ்கிறார்கள். வீணாக விரையமாகும் மழை நீரினைச் சேகரித்து வைக்க நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன.

## நீருக்காகத் தவிக்கும் பாலஸ்தீனும் இஸ்ரேயிலும்

இஸ்ரேயில் பாலஸ்தீன் நாடுகளுக்கிடையே நீரைப் பகிர்வதில் பிரச்னை உருவாகிவருகிறது. சர்வதேச சட்டத்தின் படி இஸ்ரேயில், பாலஸ்தீனர்களுக்கு நீர் வழங்கியாகவேண்டும். ஆனால் இஸ்ரேயில் ஒரு வரண்ட பிரதேசம். பாலைவனத்தால் சூழப்பட்டது. வருடத்தில் சில மாதங்களே மழை அங்கு பெய்கிறது. அதனால் அந்நாடு ஜோர்டான் நதியையும், கலிலீ கடலையும் பூமிக்கு அடியில் உள்ள நீரையும் நம்பி வாழவேண்டியுள்ளது. கியாட்டோ மகாநாட்டில் ருஷ்ய தலைவர், மூன்றாம் உலக நாடுகளுக்கிடையே தண்ணீருக்காக நடந்த போர்கள் 21 எனவும், அதில் 18 இஸ்ரேயில் சம்பந்தப்பட்ட போர்கள் எனவும் சுட்டிக் காட்டினார்.பாலஸ்தீனர்களுக்கு ஜோர்டன் நதியில் இருந்து தண்ணீர் பெறும் வசதி கிடையாது. மேற்குப் பகுதி இஸ்ரேயில் கைவசம்உள்ளது. இதனால் பாலஸ்தீனிய மக்கள் தண்ணீரை கள்ள விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை. பாலஸ்தீன் மக்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பவுசர்கள் எண்ணிக்கையை இஸ்ரேயில் அரசு கட்டுப்படுத்துகிறது. இரு நாடுகளுக்குமிடையே அரசியல் பிரச்சனை தீர்ந்தாலும் தண்ணீர் பிரச்சனை தீராத நிலை உருவாகிறது. கள்ளத்தனமாக பூமிக்கடியில்உள்ள நீரை குழாய் கிணறுகள் மூலம் பாலஸ்தீனர்கள் உறிஞ்சி எடுக்கிறார்கள் என்கிறது இஸ்ரேயில்.



## யாழ் குடாநாட்டில் தண்ணீர் தட்டுப்பாடு

யாழ் குடாநாட்டுக்கான தண்ணீர் பிரச்சனை பலகாலமாக இருந்து வரும் பிரச்சனையாகும். வெகு விரைவில் அப்பகுதி பாலைவனமாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. கடல் மட்டத்தில் இருந்து அதிக உயரத்தில் நிலப்பரப்பு இல்லாத காரணத்தால், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் சிலபகுதிகளில் உள்ள கிணற்று நீரானது குடிக்கமுடியாதளவுக்கு உப்புச் சுவையுடையது. ஒரு காணியின் மதிப்பு அதில் உள்ள கிணற்று நீரின் தரத்தில் தங்கியுள்ளது. நதிகளும் மலைகளும் இல்லாத இக்குடாநாட்டு மக்கள் நிலத்துக்கு அடியில் உள்ள நன்னீரையே நம்பி வாழும் நிலை உருவாகியுள்ளது. சுன்னாகம் ஏழாலை போன்ற கிராமங்களில் உள்ள கிணற்று நீர் சுவையானது. ஒரு காலத்தில் மணல் திடலாகவிருந்தது யாழ்குடா.

தீவுப் பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஒரு பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. இதுவும் அங்கு உள்ள மக்கள் வேறு பகுதிகளுக்குப் புலம் பெயரக் காரணமாயிருந்திருக்கிறது. யாழ் குடா நாட்டில் பல குளங்கள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. யாழ் மாநகரசபை எல்லைக்குள் மட்டும் பல குளங்கள் இருந்தாலும் சரியாக திட்டமிட்டு அதில் உள்ள நன்னீரினை மக்கள் பாவனைக்காக எடுக்க முயற்சிகள் எடுக்கப்படவில்லை. புல்லுக்குளம், ஆரியகுளம், அம்மன் குளம் போன்றவை அசுத்தம் நிறைந்த குளங்களாகவே தோற்றம் அளிக்கின்றன. இக்குளங்கள் முற்காலத்தில் தோன்றக் காரணம் என்ன?. மழை நீர் வளவுகளில் வெள்ளமாக தேங்கி நிற்காது இருக்க வழிவகுக்கப்பட்டதா, அல்லது மக்கள் பாவனைக்கு தமிழ்நாட்டினைப்போல் தென்னிந்தியாவில் இருந்து வந்த அரசர்களால் தோண்டப்பட்டவையா?. கந்தளாய் குளம், பல குளங்களைக்கட்டிய குளக்கோட்டன் என்ற மன்னனால் விவசாயத்துக்காகக் கட்டப்பட்டது. விவசாயத்தை நம்பிவாழும் அனுராதபுரப் பகுதியில், முற்காலத்தில் மன்னர்கள் பல குளங்களை உருவாக்கினர். ஏன் ஆரியகுளம் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரிய சக்கிரவர்த்தியால் கட்டப்பட்டிருக்கக் கூடாது? மழையை நம்பி வாழ்பவர்கள் ஈழத்து பெரும்பகுதி மக்கள். வன்னி மக்களின் உயிர் நாடியே விவசாயம். இரணைமடு, பெரிய கட்டுக் குளம். அக்கராயன் குளம், பாவற் குளம் போன்றவை அதற்கு எடுத்துக்காட்டு. நம் மூதாதையர் உருவாக்கிவிட்ட அப்பொக்கிஷங்களை நாம் சரிவரப் பேண வழிவகுக்க வேண்டும். மத்தியகிழக்கு நாடுகளில் உள்ள காய்ந்த மணல் ஆறுகள் போல், பல ஆறுகள் வன்னியிலுண்டு. மழைகாலத்தில் நீரினால் நிரம்பி வழியும் இந்நதிகள் கோடைகாலத்தில் வற்றி வளமற்றுப் போகின்றன. கடலைத் தேடி ஓடும் மழைநீரினைத் தடுத்து நிறுத்தி, பாவக்குளம் போன்ற குளங்களை அக்கால மன்னர்கள் உருவாக்கினர். ஆனையிறவு வாவியினை நன்னீர் வாவியாக்க போட்டத் திட்டம் அரசியல் கலப்பால் மறைந்துவிட்டது. அதுபோன்று மகாவலி கங்கையை வடக்கே திருப்புவோம் என்று ஒரு காலத்தில் அடிபட்ட பேச்சு, பேரினவாத அரசியல் காரணத்தால் நீரில் கரைந்துவிட்டது. இத்திட்டங்கள் நாட்டின் பொருளாதார, உணவு, வேலையில்லாப் பிரச்சனைகளை ஓரளவுக்குத்தீர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

## தென்னிந்திய நீர்ப்பிரச்சனை

தென்னிந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் விளைவிப்பதற்காகவே நதிப்பிரச்சனைகள் தோன்றியுள்ளன. காவேரி நதி கர்நாடகாவில் தோன்றி தமிழ்நாட்டில் கடலுடன் கலக்கிறது. பவானி நதி கேரளா, தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுக்கு ஊடாக ஓடுகின்றது. யாருக்கு அந்நதியில் உள்ள தண்ணீர் சொந்தம் என்ற பிரச்சனையால் விவசாயம், பொருளாதாரம், ஏன் - உறவு கூட பாதிக்கப்படும் அளவுக்கு பிரச்சனைகள் விரிவடைந்துள்ளன. தண்ணீரை அரசியலுடன் கலந்ததினால் இனக்கலவரங்கள் வெடித்தன. 'தண்ணீர் தண்ணீர்' என்ற தமிழ் சினிமாப் படமானது தமிழ்நாட்டு கிராமத்தில் உள்ள தண்ணீர் பிரச்சனையை அழகாகப் படம் பிடித்துக் காட்டி பலரின் பாராட்டை பெற்றது. பருவகால மழை தாமதித்து வந்தால் தமிழ்நாட்டு மக்கள் தண்ணீர்கேட்டு தவித்தனர். அக்காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் பல ஏரிகள் விவசாயத்திற்காக உருவாக்கப்பட்டன. மழை காலங்களில் நீர் விரையமாகாதவாறு பல திட்டங்களை உருவாக்காமல், யாருக்கு ஓடும் நதி சொந்தம் என்ற தர்க்கத்தில் அரசியல்வாதிகள் ஈடுபட்டுள்ளனர். வடக்கில் ஓடும் கங்கையை தெற்கிற்குத் திருப்பி தண்ணீர் பிரச்சனையைத் தீர்க்கலாம் என்ற திட்டம் கூட அரசியலில் கலந்ததால் அமுல்படுத்த முடியவில்லை. நதிகளை தேசிய மயமாக்கி


39ம் பக்கம் பார்க்க...

**$369,900**



**Mccowan/16 Ave**
**BR 3, WR 3**
Approx. 19Mnts. New Mattamy-The Cardinal Model 1600 Sq.Ft. Steps To Pond, Schools, Shops. Clean Bright & Spacious

**$379,000**



**Midland/Finch**
**BR 4, WR 2**
Fabulus Location, Very Spacious 4 Bedroom Home. Steps To Schools, Ttc, Shopping, Resturants Etc. Ideal For Big Family, Large Backyard; Finished Basement W/Lots Of Storage Space

**$379,900**



**Midland/Steeles**
**BR 3 , WR 4**
Gorgeous & Bright Home*Many Upgds. Brand New Kit Cabinet. Perenial Gdn/Fruit Tree/Deck&Pond. Bmt W/Legal Sd Entry To Self Contain In-Law Suite

**$379,900**



**Morningside/Finch**
**BR 4, WR 4**
Shows Pride Of Ownership. Sep Ent To Fin Bsmt W/ Kit And 2 Bedrms! California Shutters In Kit & Fr* Main Fl Laundry, Spiral Staircase And Sitting Rm Off Mbr, + Sep Shower, Step-Up Tub & W/I Closet.

**$379,900**



**Finch/Mccowan**
**BR 4, WR 3**
Fabulous Location* Spacious, Bright Italian Built 4 Bedrm Home* Newer Roof(Oct05)* Skylight* Eat-In Kit W/O To Yard. Greenhouse Porch- From Kithen* Large Yard* Close To Plaza,Supermkt,Mall,Bank, Mins To Hwy 401

***உங்கள் மனநிறைவில்தான்!!***

0% Down Mortgage Available
for qualified Applicants only

Free Market Evaluation

HomeLife/ GTA Realty Inc.
Realtor Member



**வசந்தி நிரஞ்சன்**
**Vasanthy Niranjan**
Sales Representative

1711 McCowan Rd., Suite 206
Toronto, Ont M1S 3Y3
Tel: 416•321•6969
Fax: 416•321•6963
vasanthy_nir@hotmail.com

**Cell: 416•845•8272**

Each office is independently owned and operated





**உங்கள் இல்லக்கனவுகளின் திறவுகோல்**

- Residential 1st, 2nd, 3rd Mortgage
- Refinancing/Renewal/Transfer
- Switch the mortgage without loosing/paying any cents
- Mortgage for new immigrants
- Mortgage for non immigrants
- Mortgage for social insurance starting with 9
- 0 down payment mortgage
- Mortgage for previously bankrupt
- Mortgage for no credit established
- Mortgage for self-employed
- Mortgage for poor credit
- Commercial mortgages
- Secured, Unsecured line of credit
- Debt consultation


**NO CMHC or Genworth Premium**
**Guaranteed lowest rate**

Questions pls call
***Thevan Kankesu***
Certified Mortgage Consultant

**Future Financial Inc.**
**Direct: 416.939.8789**
Office: 416.446.0077 ext. 224

# வீடு கொள்வனவு

## எவ்வாறு செயல்படுகின்றது?



T.M. கேசவன்
- Barister & Solicitor -
Legal Practitioner

### ஒரு கட்டிடக்காரரிடமிருந்து வீடு கொள்வனவு செய்வது: வீடு கொள்வனவு நிறைவு எவ்வாறு செயல்படுகின்றது? **(Buying from a Builder: How does closing work?)**

மாநகரசபையின் உபசட்டம் (By-law) நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒரு குறித்த தராதரத்தைக் (Standards) கொண்டிருக்க வேண்டும் எனவும் குடியிருக்க முன்னர் சோதனை செய்யப்பட வேண்டும் எனவும் கோருகிறது. அதன் தராதரத்தில் திருப்திப்படுமிடத்து, அந்த மாநகரசபை குடியிருப்பு அனுமதிப் பத்திரத்தை (Occupancy Permit) வழங்குகிறது. நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு குடிமனை மீதான வீட்டுச்சோதனையும், குடியிருப்பு சட்டபுர்வமாக ஆரம்பிக்க முன்னர், மாநகரசபை கட்டிடப்பகுதியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் (Authorized Representative) ஏற்கப்பட்டு கட்டிட நியமத்தின்படி (Building Code) அந்தவீடு கட்டப்பட்டது என உறுதிப்படுத்தப்படுகிறது.

வீடுகொள்வனவு நிறைவிற்கு (Closing) முன்னர், இந்த வீட்டின் முன்-விநியோக சோதனை (Pre-delivery Inspection) யை நிறைவு செய்வதற்கு கட்டிடக்காரரின் பிரதிநிதியுடன் நீங்கள் அந்த வீட்டிற்கு செல்ல வேண்டும். வீட்டைக் கவனமாக சோதனை செய்வதுடன் சகல வெளித்தெரியும் குறைகள் (Apparent defects), நிறைவு பெறாத வேலைகள் (Incomplete works) மற்றும் வேறு குறைகள் என்பவற்றை கட்டிடக்காரர் வழங்கும் படிவத்தில் பட்டியலிடுமாறு நீங்கள் ஆறிவுறுத்தப்படுகின்றீர்கள். அவற்றை நீங்கள் பட்டியலிடாவிட்டால் அந்த குறைகளை சரிசெய்து தருமாறு கட்டிடக்காரரை வற்புறுத்த முடியாது.

வீட்டுச் சோதனையின் போது நீங்கள் எதைக் கவனிக்க வேண்டும் என்பதற்கான ஒரு சிறிய
பட்டியலை இங்கு தருகின்றேன்.

- பூரணமான வீட்டுச்சோதனையை செய்வதற்கு போதுமான நேரத்தை நீங்கள் எடுக்கவேண்டும்;
- வீட்டுச் சோதனையை விரைவில் முடிக்கும்படி கட்டிடக்காரரின் பிரதிநிதி உங்களை வற்புறுத்த அனுமதிக்கவேண்டாம் என்பதுடன் உங்களுக்கு ஏற்ற வேகத்துடன் செய்யவும்;
- சிறியதாகவோ அல்லது முக்கியமற்றதாகவோ தோன்றுகின்ற ஒவ்வொரு குறைபாடுகளையும் எழுத்தில் இடச்செய்யவும்;
- ஏதாயினும் ஒன்று சீராக இல்லாதிருந்து, அது திருத்திதரப்படும் என்ற வாய்மூல வாக்குறுதிகளை ஏற்கவேண்டாம்;
- பழுதுபடக்கூடிய ஒவ்வொன்றையும் குறிப்பாக ஒவ்வொரு சாதனங்கள் யன்னல், பூட்டுகள் , கதவுகள் என்பவற்றை சோதித்துப்பார்க்கவும்;
- Carpet இல் கறைகள், பலகை நிலத்தில் கீரல்கள், சுவரில் வெடிப்புகள், போன்றவற்றை அவதானிக்கவும்;
- வீட்டிற்கு வெளிப்புறத்தில் ஏதாயினும் குறைகள் உண்டா? என பார்க்கவும்;
- Condo வைப் பொறுத்தமட்டில், வரவேற்பறை, குப்பைகள் போடும் இடம், வாகனத் தரிப்பிடம் போன்ற பொது இடங்களையும் சோதனை செய்யவும்.

வீடு கொள்வனவு நிறைவுதினத்தில் (closing date) வீடு கணிசமான அளவு பூரணமாக்கப்பட்டிருந்தால் வீட்டுவாங்க கொடுக்க வேண்டிய பணத்தில் ஏதாயினும் பகுதியை பிடித்து வைத்திருக்காமல் அந்தக் கொடுக்கல்வாங்கலை வீடுவாங்க உடன்பட்டவர் நிறைவு செய்யவேண்டும் என கட்டிடக்காரரின் கொள்வனவு விற்பனை உடன்படிக்கை கூறுகிறது. அதாவது, வீடு கொள்வனவு நிறைவுதினத்தில் உங்கள் புதுவீடு பூரணமாக நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டுமென நீங்கள் எதிர்பாக்கமுடியாது. எனினும் ஆட்கள் குடியிருப்பதற்கு நியாயமான அளவு உகந்ததாக (Reasonably fit) இருக்கவேண்டும். அப்போதுதான் ஒருவர் எந்த நேரத்திலும் அங்கு குடியிருக்கக்கூடியதாக இருக்கும். வீடுகொள்வனவு நிறைவு தினத்தின் (closing date) பின்னர் வரைக்கும் நிறைவு செய்யப்படாத பல்வேறு விடயங்கள் அநேகமாக அங்கு காணப்படும்.

### ஒரு புது Condo கொள்வனவு செய்வது **[Buying a new Condo]**

ஒரு கட்டிடக்காரரிடமிருந்து Condo கொள்வனவு செய்வது இடைக்கால நிறைவு [Interim Closing] மற்றும் சிலமாதங்களில் பின்னரான, இறுதி நிறைவு [Final Closing] என்ற இருகட்ட படிமுறைகளை [Two Stage Process] கொண்டது. இடைக்கால நிறைவு தினம் [Interim Closing date] என்பது Condo வில் நீங்கள் குடியிருக்கும் தினம்[Occupancy date] ஆகும். இறுதி நிறைவுதினம் [Final Closing date] என்பது கட்டிடக்காரரிடமிருந்து உங்களுக்கு உரித்தை மாற்றும் தினமாகும். அது வரைக்கும் நீங்கள் உண்மையாகவே அந்த Condo விற்கு உரித்துடையவராக மாட்டீர்கள். இடைக்கால நிறைவுதினத்தன்று ஒரு கற்பனை ஈட்டை [Phantom Mortgage or Fictional Mortgage] என்று அழைக்கப்படுகின்ற ஒன்றைக் கட்டிடக்காரருக்கு நீங்கள் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த ஈட்டின் தொகையானது [Amount of mortgage] உங்கள் முற்பணத்திற்கும் [Deposit] வீட்டுவிலைக்கும் இடைப்பட்ட வித்தியாசத்திற்கு சமமான தொகையாகும். (அதாவது, இறுதி நிறைவிலுள்ள மீதிப்பணம்) உங்கள் மாதாந்த இடைக்கால நிறைவு/ குடிபுகுதல் கொடுப்பனவு [Monthly Interim Closing/ Occupancy Payment ] கற்பனை ஈட்டின் மீதான மாதாந்த வட்டி(Monthly Interest), உங்கள் Condo விற்கான உள்ளூராட்சி வரிக்கான[ Municipal Tax] கட்டிடக்காரரினால் மாதாந்த அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு தொகை மற்றும் உங்கள் Condo விற்கான பிரேரிக்கப்பட்ட மாதாந்த பராமரிப்பு செலவு (Maintenance Fee) என்பவற்றின் மொத்தத்தொகை என கணக்கிடப்படுகின்றது.

Condo கூட்டுத்தாபனம் ஒழுங்கமைக்கப்பட்டு அதன் பதிவு பூரணமாக்கப்படும் வரைக்கும் கட்டிடக்காரர் அதற்கான உரித்தை உங்களுக்கு மாற்ற முடியாத காரணத்தால் இடைக்கால நிறைவின [Interim Closing] போது முழுப் பணத்தையும் கட்டிடக்காரருக்கு செலுத்தும் வாய்ப்பு உங்களுக்கு இருக்காது. ஆகவே இடைக்கால நிறைவு தினத்தில் வங்கிக்கடனை (Mortgage) நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டிய தேவையில்லை. மாதாந்த இடைக்காலக் கொடுப்பனவுகள் ஒரு வாடகையாக(Rent) கருதப்படுவதுடன் அது மீள உங்களுக்கு தரப்படமாட்டாது. அது மட்டுமல்ல இறுதி நிறைவின்போதும் அது உங்களுக்கு வரவாக (Credit) காட்டப்படமாட்டாது. இடைக்கால நிறைவு நாளின் போது மாதாந்த இடைக்கால குடியிருப்பு கொள்வனவிற்கான6 அல்லது 12 பின்திகதியிடப்பட்ட காசோலைகளை (Post-dated Cheques) கட்டிடக்காரர் கோருவார். ஆந்த குடியிருப்பு தினத்தன்று உங்கள் முற்பணத்தை அதிகரிக்குமாறும் நீங்கள் கட்டிடக்காரரினால் கேட்கப்படலாம்.

■ ■ ■

கனடா பாரதி புறொடக்சன்ஸ்
பிரான்ஸ் நேயாலயம்
வழங்கும்

**மூன்று சர்வதேச குறும்படங்களின் தொகுப்பு**
**DVD வெளியீட்டு விழா**

பாரதி புறொடக்சன்ஸ் “வாழ்வு ஒரு வட்டம்” (கனடா)
நேயாலயம் பராவின் “பேரன் பேர்த்தி” (பிரான்ஸ்)
ஜனா வதனனின் “எது மட்டும்” (பிரான்ஸ்)

**June 24th** ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.30க்கு

இடம்:
**Scarborough Civic Centre**
**150 Borough Drive**
(North-west corner of McCowan Road and Ellesmere Road)
Toronto, ON M1P 4N7
தொடர்புகளுக்கு: (416) 438 -1035/ (416) 457 -8424, (416) 297 -2821



# For All Your Real Estate Needs..

## Lucky Draw for New Car Will be on August,2007

**Buy or Sell through us before August15, 2007 and win a New Car****



**Sasi Chelvaratnam**
Sales Representative
**416.858.4828**




- Gorgeous 4 Bdrm Freehold T/H
- No Condo Fees
- Private Garden Backing Unto A Park
- Close to All Amenities
- Call **Sasi** For Details....




- Beautifully Maintained House
- Only 2 Years Old
- Many Upgrades
- Excellent Neighbourhood
- Call **Sasi** For Details....




- Beautifull & Well Maintained House
- Hardwood On Main Floor
- Tastefully Decorated
- Lots Of Upgrades
- Call **Sasi** For Details....





- Brand New House
- 9' Ceiling On Main Floor
- Hardwood Floors, Fireplace
- Upgraded Kitchen Cabinets
- Call **Sasi** for details....




- Less Than Five Years Old
- Beautiful House
- High Ceilings
- Close To Many Amenities
- Call **Sasi** For Details....




- 2 Bedroom Condominium
- 2 Parking Spots & 2 Full Bath
- Over looking Ravine
- Luxurious Building With Indoor Pool
- Call **Sasi** For Details....




- Renovated Detached Home
- Close To School And Shops
- Huge Master Bedroom
- Unfinished Basement
- Call **Sasi** For Details...

## HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated

# Kuberan

# Divine Homes

1845 Lawrence Av.East. Scarborough,
ONT. M1R 2Y3 (Lawrence /Pharmacy)

**Tel: 416 999 3997, 647 435 0105**

இல்லத்திற்கு ஏற்றாற் போல் வழிபாடு செய்வதற்கு சிறிய கோவில் போன்ற பூஜை மேடைகள் எம்மிடம் உண்டு
உங்கள் விருப்பத்திற்கேற்ப சமயமுறைப்படி சரிமேடை செய்து தரப்படும்.
கீழே அமர்ந்து பூஜை செய்யக்கூடிய மேடைகளும், உட்கார முடியாத பெரியவர்களுக்கும்,
பிள்ளைகளுக்கும் நின்று கொண்டு பூஜை செய்யக்கூடிய மேடைகளும் உண்டு.






சுவாமி சிலைகள், குபேரன் சிலைகள், வலம்புரிச் சங்குகள்,
அலங்காரப் பொருட்கள், பூச்சாடிகள்
அன்பளிப்பு பொருடகள் இன்னும் பல...

www.divinehome.org
divinehome@rogers.com

Graphicland - 647 219 7576

# அறியவில்லையானால் அறிந்து கொள்ளுங்கள்

## கனடாவில் சில தகவல்கள்

தகவல் தொடர் - 5

சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -



(The Motor vehicle accident claims fund) வாகனக் காப்புறுதி ஒப்பந்தம் என எதுவும் இல்லாது வாகனம் செலுத்தி, விபத்துக்கு உள்ளாகி உடல் காயமுற்ற ஒருவர் நட்டஈடு என்பதைப் பெற்றுக்கொள்ளவே முடியாது!

ஏனெனில் எந்த ஒரு காப்புறுதிக் கம்பனியிலும் ஒப்பந்தம் செய்யவில்லையே! இது தவிர, இன்னொரு உதாரணம்: வீதியால் நடந்துசென்ற பாதசாரி ஒருவரை அடையாளம் தெரியாத வாகனம் ஒன்று மோதிக் காயப்படுத்திவிட்டுத் தலைமறைவாகிவிட்டது. மோதிய வாகனத்தின் அடையாளம் தெரியாதபடியால் எங்கே எப்படி நட்டஈடு கோருவது?

இந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்புறுதியில் நட்டஈடு பெறுவதுபோல, நட்டஈடு பெற்றுக்கொள்ள மாகாண அரசின் நிறுவனம் கனடாவில் உண்டு. அறிந்து கொண்டீர்களா?

மாகாண நிதியமைச்சின் கீழ் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு என ஒரு பிரத்தியேகமான நிதியம் fund ஒதுக்கப்பட்டு அதனை மாகாண அரசு நிர்வகித்து வருகிறது.

**அதன் விலாசம் பின்வருமாறு:**
**Financial Services Commission of Ontario**
**Motor vehicle Accident Claim Fund**
**5160 Young Street**
**16th floor, P.O. Box 85**
**Toronto, On**
**M2N 6L9**
**Tel: 416 250 1422 or 1 800 -268-7188**
**Fax: 416 590 7076**
**email: contractcentre@fsco.gov.ca**

வாகன விபத்துகளில் உடல் காயம் அடைந்தவர்கள் எந்த வழியிலும் நட்டஈடு பெற்றுக்கொள்ள வழி இல்லையாயின் பெற்றுக்கொள்ளும் இறுதியான இடம் (Payer of last Resort) இந்நிறுவனம் என்பதால் நட்டஈடு கோரிக்கைக்கு விண்ணப்பிப்பவர் வேறு எந்த இடத்திலும் நட்ட ஈட்டினைப் பெற்றுக்கொள்ள வழியே இல்லாதவர் என்பது இந்நிறுவனத்திற்கு மனுச்செய்யும் போது நிரூபிக்கப்படல் வேண்டும்.



இந்நிறுவனம், வாகன விபத்தில் உடல் காயம் அடைந்த ஒருவருக்கு நட்டஈடு வழங்கும் சாதனங்களைப் பின்வருமாறு ஒழுங்குபடுத்தலாம்.

1. வாகன விபத்தில் விபத்துக்கு உள்ளான ஒருவர், தமது வாகன காப்புறுதி ஒப்பந்தம் எந்தக் கம்பனியில் உள்ளதோ அந்தக் கம்பனியில் இருந்து நட்டஈடு பெற விண்ணப்பிப்பது முதலாவது வழி.

2. முதலாவது நிலைப்பாட்டில் இருந்து விபத்தில் பாதிக்கப்பட்டவர் நட்டஈடு பெற முடியாவிட்டால் அதாவது வாகனக் காப்புறுதி ஒப்பந்தம் எதுவும் இல்லையாயின், உதாரணமாக இன்னொருவரின் வாகனத்தில் ஒரு பிரயாணியாகச் சேர்ந்து போய் விபத்தில் பாதிக்கப்பட்டவர், பிரயாணம் செய்த வாகன உரிமையாளரின் காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்து நட்டஈடு பெறலாம்.

3. மேற்குறித்த பிரயாணம் செய்த வாகனத்திற்கும் காப்புறுதி இல்லையாயின், வாகனத்தில் சேர்ந்து பிரயாணம் செய்து உடல் காயமுற்றவர், விபத்துக்குக் காரணமான ஏனைய வாகன காப்புறுதிகளில் இருந்து நட்டஈடு பெற முயற்சிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட மூன்று வழிகளிலும் நட்டஈடு பெற வழி இல்லையாயின் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்நிறுவனம் கைகொடுக்கத் தயாராய் உள்ளது.

இங்கு விபத்தில் பாதிக்கப்பட்டு இந்நட்டஈட்டுக் கோரிக்கைக்கு விண்ணப்பிப்பவர் எவராக இருத்தல் வேண்டும் என்பது இவ்விண்ணப்பப் படிவத்தில் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**1. விபத்துக்குள்ளான பாதசாரி**

**2. சைக்கிளில் சென்று வாகனத்துடன் விபத்தினை எதிர்கொண்டவர்.**

**3. வாகனக் காப்புறுதி இல்லாத வாகனத்தில் சேர்ந்துபோய் விபத்தில் சிக்கியவர்.**

**4. காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்தி, விபத்துக்கு உள்ளாகி காய மடைந்தவர்**

காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்தியதற்கான தண்டனைகள் பெறுவது வழமை போல தவிர்க்க முடியாத ஒன்று!

■ ■ ■

காப்புறுதி சம்பந்தமான

தேவைகளுக்கும்

ஆலோசனைகளுக்கும்

சிவ. பஞ்சலிங்கம்
B. Com,

Licensed Insurance Broker

416.321.0999




# நல்லவீட்டில் குடிபுகுவேம்...

**52ம் பக்கத் தொடர்ச்சி...**

ஆகவே வீட்டை அடிமட்ட விலையில் பேரம்பேசுவதால் வீட்டை விற்பவருக்கும் அவமரியாதை, வீணான நேரச்செலவும் ஏற்படும்.

தவறு 71: நிரல்ப் பட்டியல் பத்திரத்தில் “ wet bar/ sink” included.

பாடம்: வீட்டை வாங்கும் பத்திரத்தில் வீட்டை வாங்கும்போது Personal property and fixtures உள்ளடக்கப் பட்டுள்ளதா என்பதைக் கருத்திற்கொள்க.

நிச்சயமாக எங்கே, எப்பொழுது வீட்டை வாங்குகிறீர்களோ வீட்டை வாங்கும் விலைக்குள் உங்களால் பார்வையிடப்பட்ட பொருட்களான தபால்பெட்டி, விலையுயர்ந்த மின்விளக்குகள், சலவை இயந்திரம் போன்றவை அப்பத்திரத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளதா என்பதைக் கருத்திற் கொள்க. புதிதாக வீடு வாங்கிய மொன்றியல் மோகன் தனது அனுபவங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறார். மொன்றியலில் இருந்து தனது புதிய வீட்டிற்கு குடி புகுவதற்கு வருவதற்கு இரவு 9 மணியாகி விட்டது. வீட்டின் கதவைத் திறந்து மின்விளக்கைப் போட்டபோது அது வேலை செய்யவில்லை. பின்பு ஒவ்வொரு அறைகளைத் திறந்து மின்விளக்குகளைப் போட்டபோதும் அம் மின்விளக்குகளும் வேலைசெய்யவில்லை. ஒரே இருள்மயம் மோகனுக்கு மின்சார நிறுவனம் தான் மின்சாரத்தை நிறுத்திவிட்டார்களோ என்கின்ற சந்தேகம். இறுதியாக அயலில் வசிக்கும் நண்பர் ஒருவரிடம் ரோச் லைட் ஐ வேண்டி அவ்வீட்டை பரிசோதித்தபோது அவ்வீட்டிலுள்ள அனைத்து மின்குமிழ்களும் கழற்றப்பட்டிருந்தன. இதற்கிடையில் தளபாடங்களுடன் மொன்றியலில் இருந்து வான் வந்துகொண்டிருக்கிறது. இது மோகனுக்கு ஒரு புதிய அனுபவம். மோகன் இவ்வீட்டை வாங்கும்போது, தான் ஆசைப்பட்ட “wet bar/sink” இருந்தது. மோகன் கையெழுத்திடப்பட்ட வீடு விற்பனைப் பத்திரத்திலும் இது உள்ளடக்கப்பட்டிருந்தது. தரமான மரத்தினாலும், நல்ல வடிவமைப்பும் சேர்ந்து wet bar ஆனது மிகமிக அழகாக இருந்தது. மோகன் அவ்வீட்டிற்கு குடிபுகுந்ததும் அந்த bar ஐக் காணவில்லை. ஆனால் அவ்விடத்தில் அந்த bar இருந்ததற்கான அடையாளம் மாத்திரமே இருந்தது. மோகனும் உடனடியாக தனது விடயத்தை தனது முகவரிடம் தெரிவித்த போது Sink தான் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் Wet bar இதில் உள்ளடக்கப்படவில்லை எனவும் கூறினார். வீட்டை விற்பவர் wet bar ஐ எடுத்துக் கொண்டுபோய் விட்டார். sink மட்டும்தான் அவ்விடத்திலிருந்தது, இது மட்டுமல்லாமல் தபால் பெட்டியும் அவ்விடத்தில் இருக்கவில்லை. ஆகவே மோகனின் இவ்வனுபவங்களிலிருந்து பெறப்பட்ட பாடம் வீடு விற்பனைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எவை மீதமிருக்கின்றன? எவை எடுத்துச் செல்லப்படுகின்றன என்பது பற்றிய தகவல்கள், வீட்டில் உள்ளடக்கப்படுகின்ற நிரலில் உள்ள விலையுயர்ந்த பொருட்களையும் கருத்தில் எடுக்கவும்.


வீடு விற்பனை தொடர்பான சட்டதிட்டங்கள் (உதாரணமாக Real property, fixtures, personal property) பற்றிய தெளிவான விளக்கங்கள்.

வாய்மொழி உத்தரவாதம் தவிர்க்கப்பட்டு எழுத்து மூலம் உறுதி செய்யுமிடத்து இத்தவறுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

‘மீண்டும் அடுத்த இதழில்’

■ ■ ■

# கோபப்படாதீர்கள்



கே. எஸ். பாலச்சந்திரன்

Anger- A Wind which blows out the lamp of the mind - Robert Ingersoll

கோபம் சிந்திக்கும் வல்லமையை அழித்து விடும். இது தத்துவஞானி இங்கர்சால் சென்னது.

இன்று கும்பராசிக்கு என்ன பலன் சொல்கிறதென்று பத்திரிகையில் புரட்டிப் பார்த்தேன். நம்புவது, நம்பாமல் இருப்பது வேறு. யாரோ எழுதியதை அவர்கள் போட்டிருக்கிறார்கள். எழுதுவதும், போடுவதும் அவரவர்கள் வேலை என்றால் வாசிப்பது என் வேலை அல்லவா?


இனியும் இப்படியே தொடர்ந்தால் உங்களுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்து விடும்.

இப்படித்தான் பலன் போட்டிருந்தார்கள்.

இன்று பேச்சில் நிதானம் தேவை. வேலையாட்களிடம் அனுசரித்து போவது நல்லது. குடும்பத்தில் சின்ன சின்ன சண்டை சச்சரவுகள் வந்து போகும். தனி நபர் விமர்சனத்தைத் தவிர்க்கவும். தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வந்து போகும்.. அவசர முடிவுகளை தவிர்க்கப் பாருங்கள்.

அடடே.. எல்லாமே கோபத்தின் அடிப்படைக் காரணங்களாகவே தெரிகின்றன.

பேச்சில் நிதானம் தேவையென்றால் நிதானம் என்னவென்று தெரியவேண்டும். நாங்கள் எப்போது நிதானம் இழக்கிறோம். சொல்ல வெட்கமாக இருந்தாலும், மது போதையில் இருக்கும்போது நிதானம் இழக்கிறோம். கோபம் கட்டுக்கடங்காமல் வருகின்றது. காரணமின்றியே கோபம் வருகின்றது. மனைவி, மக்கள், சமூகம், நாடு எல்லாவற்றிலுமே கோபம் வருகின்றது. சிறு, சிறு பிழைகளெல்லாம் மலை மாதிரி தெரிகின்றன. நிதானம் இல்லாததால் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் போய் விடுவதுண்டு.



மது அருந்தாதவர்கள் நிதானம் இழப்பார்களா? இழப்பார்கள். கோபம் வந்தால் இழப்பார்கள். கண், மண் தெரியாத கோபம் என்பார்களே அது.

ஒரு சின்னக்கதை சொல்கிறேன். ஒரு இளந் தம்பதியினர். ஒரே ஒரு செல்லக்குழந்தை. அந்தக்குழந்தைக்கு உடல்நலக்குறைவு. மருத்துவர் மருந்து தந்திருக்கிறார். ஒரு குறித்த அளவுதான் மருந்து கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை. தாய் ஏதோ அவசரத்தில் மருந்து அளவை மாற்றிக் கொடுத்து விட அந்தக்குழந்தை இறந்து போய் விட்டது.

எங்கோ போயிருந்த கணவன் வீட்டுக்கு ஓடோடி வருகின்றான். அந்தப்பிஞ்சுக் குழந்தையின் உடலை அணைத்து கதறி அழுகின்றான். கண்ணீர் வற்றுமளவிற்கு அழுகின்றான். உறவினர்கள் ஒரு பூகம்பம் வெடிக்கப்போகின்றது என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவன் தன் மனைவியின் பக்கம் திரும்பி, கோவென்று அழும் அவளைத் தேற்றுகின்றான். எல்லோரும் அவனை ஆச்சரியமாகப் பார்க்கிறார்கள். அவன் சொன்னது இதுதான் - ''என் பிள்ளையை இழந்த விட்டேன். என் மனைவியையும் நான் இழக்க விரும்பவில்லை.''.. அதுதான் நிதானம்.

வேலையாட்களிடம் அனுசரித்து போவது நல்லது - ''இடம் கண்ட இடத்தில்..'' ஏதோ கட்டுவது என்பார்கள். எங்களுக்கு கீழ் பணிபுரிபவர், எங்களை நம்பியிருப்போர் மேல் கோபம் காட்டுவது எங்கள் பிறப்புரிமையல்ல. தவறை சுட்டிக்காட்டுங்கள். திருந்த இடம் கொடுங்கள். இது மனைவி, மக்கள், நண்பர்கள், உறவினர் எல்லோருக்கும் பொருந்தும்.

குடும்பத்தில் சின்ன சின்ன சண்டை சச்சரவுகள் வந்து போகும் -வந்து போகட்டும். விட்டு விடுங்கள். மீண்டும் மீண்டும் அதை அசை போடாதீர்கள். தவறுதலாக ஏதோ சொல்லப்பட்டாலும், சொல்லப்பட்டது என்ன என்பதை வடிவாகத் தெரிந்து கொண்டே, ''என்ன.. சொன்னனீர்'' அல்லது '' என்ன சொன்னீங்கள்' என்றோ திருப்பிக்கேளாமல் விடுங்கள்.

தனி நபர் விமர்சனத்தைத் தவிர்க்கவும். காரணமின்றி மற்றவர்களை விமர்சனம் செய்யாதீர்கள். இது அண்ணந்து பார்த்து எச்சில் துப்புவது போன்றது. காரணத்தோடு மற்றவர்களை விமர்சனம் செய்வது அறவே கூடாது. அவர்கள் பற்றி நீங்கள் அறிந்த நல்லவற்றை மற்றவர்க்கு சொல்லிப் பாருங்கள். பிணக்கு தன்னால் அழிந்து விடும். ஒரு எதிரி இல்லாமல் போக ஒரு நண்பன் கிடைத்த விடுவான்.

தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வந்து போகும் - தாய், தந்தை வாழ்ந்த சூழல் வேறு, அவர்கள் முக்கியமானதாய் நினைக்கும் பல விஷயங்கள் உங்களுக்கு அப்படி இல்லாமற் போகலாம். உங்களுக்கு பிரதானமானவையாகத் தெரியும் பல அவர்களுக்கு தெரியாமற் போகலாம். அது அவர்களின் குற்றமல்ல. உங்களின் குறையுமல்ல. இதே இடைவெளி நாளைக்கு உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் ஏற்படத்தான் போகின்றது. தயவு செய்து அவர்களை உணர முயற்சி செய்யுங்கள்.

அவசர முடிவுகளை தவிர்க்கப் பாருங்கள் - நிதானமாக, ஆற, அமர யோசித்து முடிவு எடுங்கள், ''கண்டதே காட்சி.. கொண்டதே கோலம்''... வேண்டாம். ஒரெயொரு சின்னக் கதை. நட்பின் சின்னமான கதை. துரியோதனன் மனைவி பானுமதியும், அவன் நண்பன் கர்ணனும் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்க துரியோதனன் வருகின்றான். கணவனைக் கண்ட பானுமதி எழுந்து நிற்க, ஆட்டத்தை விட்டுப் போகிறாள் என்ற எண்ணத்தில் கர்ணன் அவள் இடுப்பு மேகலையைப் பற்ற, முத்துக்கள் அறுந்து சிதறியோட, துரியோதனன் நிதானமாகச் சொன்னது '' எடுக்கவா.. கோர்க்கவா''. சிந்தித்து முடிவுக்கு வாருங்கள்.


இன்றைய பலன் பரவாயில்லை. உங்களோடு பேசிக்கொண்டதின் பலனைச் சொன்னேன்.

■ ■ ■


## வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க...



**Gas Station with Convenience**
**Two Acre land included**
Asking Only $650,000




**Vacant Store With Property**
Including 5 Separate Apartments
Asking Only $389,000




**Grocery Store**
Scarborough
Asking Only $39,000





**Fish And Chips**
(Fast Food Eat In Restaurant)
Can Be Convertible Both Srilankan
And Canadian Restaurant
Including All Equipments
In Scarborough
Asking Only $29,000
SOLD!





**Property for Sale**
Vacant Store With Apartment
Asking Only $394,000



**Brand New Industrial Building**
Markham
Asking Only $562,000



**Plaza for Sale**
Asking Only $2,099,000



**Store With Office For Investment**
Scarborough
Asking only $720,000

Your #1 choice agent for commercial properties!

Commission as low as 1% *
* some conditions apply.



**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416.880.8585**

**HomeLife GTA Realty Inc.**
1711 McCowan Rd., Suite 206
Toronto, ON. M1S 2Y3
416.321.6969

HOMELIFE HIGHER STANDARDS

# பிளாஸ்டிக் பைகள்

குப்பைகள் சேருவதைத் தவிர்க்கமுடியாது, ஆனால் கட்டாயமாக குறைக்கமுடியும். இங்கு கொடியதிலும் கொடியதான ஒரு பொருளை, சற்று விரிவாக ஆராய்வது எனது நோக்கம். கனடாவில் வதியும் முதல் தலைமுறை முதியோருக்கு ஞாபகமிருக்கும் - நாம் கடைக்குக் காய்கறி, அரிசி போன்றவற்றை வாங்குவதற்கு அடுக்குப் பெட்டி கொண்டு சென்றது. இவை ரஷ்ய பொம்மைபோல் ஒன்றுக்குள் ஒன்றாக பல பனையோலைப் பெட்டிகள் அடுக்கப்பட்டு இருக்கும். வரும்போது ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பொருளாக ஒன்றின்மேல் ஒன்றாக பெட்டிகளில் பொருட்களை வாங்கி வந்தோம்.

இதன் அடுத்தபடி பரிணாம வளர்ச்சியின் விளைவாகத் தோன்றியதுதான் சிமென்ட் பேப்பர் பை. இதற்கு இன்னுமொரு சிறப்புப் பெயர் உண்டு. மாட்டுத்தாள் கடதாசிப் பை. 56 இறாத்தல் சிமென்டைத் தாங்குவதற்காக நல்ல தடித்த தாளில் பல படைகளில் சிமென்ட் பை தயாரிக்கப்படும். இவற்றின் தாள்களைப் பிரித்தெடுத்து ஒட்டித் தரப்படுவதால் இதற்கு சிமென்ட் பேப்பர்ப்பை என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

எமது அங்காடிக் கலாச்சாரத்தின் அடுத்த படிதான் பிளாஸ்டிக் பை. இவை மேற்கு நாடுகளில் 1957களில் தோற்றமெடுத்தாலும், எமது பாவனைக்கு வெகுகாலம் கடந்துதான் வந்தன. ஆனால், இதன் பாவனை அசுர வேகத்தில் வளர்ந்து இன்று வாரம்தோறும் 100 மில்லியன் பிளாஸ்டிக் பைகள் எறியப்படுகின்றன. இந்தப் பிளாஸ்டிக் பைகள் மண்ணோடு மண்ணாகப் போவதற்கு ஆயிரம் வருடங்கள்வரை எடுக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு தலைமுறை இருபது வருடமானால் உங்கள் குப்பைகளை உங்களது ஐம்பதாவது தலைமுறைக்கு வைத்து விட்டுப் போகின்றீர்கள். இதைத் தவிர்ப்பதற்கு செய்யவேண்டியது வீட்டில் நிரந்தரமாக பாவிப்பதற்கு ஒரு நல்ல பையை வைத்திருப்பதே. உங்கள் சோம்பல் ஐம்பது தலைமுறைக்கு தொல்லை தருகிறது என்றால் பாருங்கள்.

ஒரு நாலு அங்கத்தவர்கள் கொண்ட சிறு குடும்பம் எத்தனை பிளாஸ்டிக் பைகளைப் பாவிக்கின்றன என்பதைக் கவனித்தீர்களானால் நிச்சயம் மூக்கில் விரலை வைப்பீர்கள்! வருடம் ஒன்றிற்கு ஆயிரம் பிளாஸ்டிக் பைகள் பாவிப்பீர்கள். உங்களுடன் இன்னும் நாலு நண்பர்களுக்கு இந்தச் செய்தியைக் கொடுத்தீர்களானால் வருடத்திற்கு ஐயாயிரம் பிளாஸ்டிக் பைகள் குப்பைத் தொட்டிக்குச் செல்வதைத் தவிர்ப்பீர்கள். அதாவது ஐந்து வருடத்தில் உங்கள் ஐம்பதாவது தலைமுறைக்கு எத்தனைகோடி குப்பை பிளாஸ்டிக் பைகளை தவிர்த்திருப்பீர்கள்?

உலகளாவிய ரீதியில் வருடமொன்றிற்கு ஒரு டிரிலியன் (1,000,000,000,000) பைகள் வரை எறியப்படுகின்றன. பொதுவாக பூமாதேவியை பொறுமைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவார்கள். பூமாதேவி எத்தனை இடிகளை, பூகம்பங்களைத் தாங்குகிறாள். ஆனால் அவராலும் தாங்குவதற்கு அரிதான விடயம்தான் இந்தப் பிளாஸ்டிக் பை. இந்தக் கொடுமைக்கு நீங்களும் உடந்தையாக இருக்கலாமா? ஆயிரம் யாகம் செய்வதிலும் பயனில்லை இத்தகைய கொடுமை செய்கையில். கோவிலுக்குச் சென்று புண்ணியத்துடன் ஒரு பிளாஸ்டிக் பையும் வாங்கிவந்து அதைக் குப்பையில் எறிந்து கொடுமை செய்வதிலும் கையில் பெற்றதை கொண்டு வருவது மேல் அல்லவா? வட அமெரிக்காவில் மட்டும் 1,000,000,000 பைகள் எறியப்படுகின்றன. இவற்றில் ஆயிரம் பைகள் உங்களுடையவை!!

கொலை செய்வதுடன், கொலைக்கு உடந்தையாய் இருப்பதும் குற்றம்தானே? இந்த பிளாஸ்டிக் பைகளை நீங்கள் குப்பையில் எறிவதால் ஆயிரக்கணக்கான கடலாமைகள், திமிங்கிலங்கள் மற்றும் பல நீர் வாழும் பிராணிகள் அழிகின்றன. மேலும் இந்தியாவில் பசுமாடுகள் (கோமாதா!) கூட இதனால் அகால மரணமடைகின்றன.

இன்று பல வியாபார அமைப்புகள் பிளாஸ்டிக் பைகளை விற்பனைக்குத் தருவதுடன், சில இடங்களில் மீண்டும் பாவிக்கக்கூடிய பைகளை மிக சொற்பவிலைக்குத் தருகிறார்கள். சோம்பல் காரணமாக பலர் இந்த பைகளை வாங்கி மீண்டும் மீண்டும் பாவிக்கத் தவறுகிறார்கள். இறுதியாக இன்றைய நாள்பொழுதில் உங்களை ஒரு நல்ல செயலைச் செய்ய அழைக்கின்றேன். மற்றவர்களுக்காக அல்ல உங்கள் மனச்சாட்சிக்காக, ஒரு சந்தர்ப்பம் செய்வோம். முடிந்தவரையில் பிளாஸ்டிக் பைகளைப் பாவிக்காமல் மீண்டும் பாவிக்கக் கூடிய நிரந்தரமான பையைப் பெற்று தொடர்ந்து அதனைப் பாவிப்போம். அத்துடன் நண்பர்களுடன் அரட்டையடிக்கும்போது இந்தக் கருத்தையும் முன் வைப்போம். மறக்கவேண்டாம் - கம்பரும் ஒட்டக்கூத்தரும் பிளாஸ்டிக் பையை குப்பையில் போட்டிருந்தால் அந்தக் குப்பை இன்னும் இருக்கும் இனியும் இருக்கும். நன்றி.

**பிளாஸ்டிக் பையின் வாழ்க்கையில் மறக்க முடியாத மைல் கற்கள்:**

- **1957: முதன்முதல் பிளாஸ்டிக் பைகளும், சான்விச் பைகளும் அறிமுகப்படுத்தப் பட்டது.**
- **1958: பொலி டிரைகிளினிங் பைகள் அறிமுகம்**
- **1966: பிளாஸ்டிக் பைகள் பாண் சுற்றி வைக்க பாவனைக்கு வந்தது.**
- **1969: நியூயோர்க் நகரத்தில் குப்பை அள்ளுவதற்கு உதவியாக தொட்டிகளிலும் பிளாஸ்டிக்பை துப்பரவும், சுத்தம் குறைவாகவும் இருக்கும் என நிரூபித்து பாவனைக்கு வந்தது.**
- **1973: முதன் முதல் பாவனைப் பொருள்களுக்கு பிளாஸ்டிக் பைகள் அறிமுகமானது.**
- **1974-75: தொடர் வியாபார நிறுவனங்களான சியேர்ஸ், யே.சி பெனி, மொன்டகொமரிவாட் போன்ற நிறுவனங்களில் பிளாஸ்டிக் பை அறிமுகம்.**
- **1977: தொடர் வியாபார பலசரக்குக் கடைகளில் பிளாஸ்டிக் பைகள் அறிமுகமானது.**
- **1982: குறாகர், சேவ்வே போன்ற நிறுவனங்கள் Craft பைக்காக பொலிதீனின் பைகளைப் பாவிக்கத் தொடங்கியது.**
- **1990: முதன்முதல் மீள்பாவிப்பிற்கு நிலப் பெட்டி பாவிக்க துவங்கப் பட்டது.**
- **1990: பெரும் வியாபார அமைப்புக்கள் பிளாஸ்டிக்பைகளை மீள் பெற்று பாவிக்கத்துவங்கியது.**
- **1992: அமெரிக்காவில் 50விகிதமான அமைப்புகளில் பிளாஸ்டிக் பைகள் மீள்பெறப்பட்டது.**
- **1996: ஐந்தில் நாலு பைகள் பிளாஸ்டிக்காக பலசரக்குக் கடைகளில் பாவிக்கப் படுகிறது.**

தகவல் www.plasticbag.com

## குமார் புனிதவேல் பக்கம்

## புரியாத புதிர்

சில கேள்விகள்.........

**அ) உங்கள் நண்பர் அவசர தேவைக்காக கைமாற்றுக் கடனாக உங்கள் வங்கி அட்டையை தருமாறு கேட்கிறார் நீங்கள்- - - - - -**

- வங்கி அட்டையைக் கொடுத்து உடனடியாக திருப்பிப் பெற்றுவிடுவீர்கள்.
- ஒருபோதும் உங்கள் வங்கி அட்டையைக் கொடுப்பதில்லை. அது சொந்தப் பாவிப்பிற்கே.
- உண்மையாகவே தேவை இருந்தால் நம்பிக்கையான நண்பருக்கு தற்காலிகமாகத் தரலாம்.

**ஆ) உங்கள் இருபதாவது பிறந்ததினத்தில் ஆயிரம் வெள்ளிகளை 8வீதம் வருமான கூட்டுவட்டியுள்ள முதலீட்டில் வைத்தால், உங்கள் ஐம்பத் தைந்தாவது பிறந்த தினத்தில் பணத்தை மீளப்பெற முடிவுசெய்தால் எவ்வளவு பணம் மீளப்பெறலாம் என்று ஊகியுங்கள். இங்கு வரிக்கழிவு இல்லை என நீங்கள் கணிக்கலாம்.**

• 14,785.34 • 11,516.02 • 4,999.99

**இ) நீங்கள் மிகச்சிரமப்பட்டு உங்கள் RRSP இல் ஆயிரம் வெள்ளிகளை இடுகிறீர்கள். அதன் வளர்ச்சி வருடத்திற்கு 10வீதமானால் 30வருடங்களுக்குப் பின் எவ்வளவு பணம் இருக்கும்.**

• 17,449 • 4,245 • 12,621

**ஈ) நீங்கள் கடன் வங்கிகளில் பெறுவதற்கு முயல்கையில், உங்கள் கடன் மதிப்பெண் மிக முக்கியமான ஒன்று. இம்மதிப்பெண் இலக்கத்தை கீழ் தரப்பட்ட எந்த விடயம் பாதிக்காது?**

- பணம் பற்றாமையால் மீள் திரும்பும் காசோலைகள்.
- உங்கள் வாகன கட்டுத்தவணையில் இரண்டு தவணை தவறிவிட்டீர்கள்.
- நீங்கள் மிகக்குறைந்த வருமானமுடையவராயுள்ளீர்கள்.

**உ) டொலர் 350 பெறுமதியான பொருளை கடனட்டையில் பெற்றுப் பின் கடனட்டையில் ஆகக்குறைந்த தொகையைக் கட்டி கடனை அடைத்தால் எவ்வளவு விலையில் அப் பொருளை வாங்கி இருப்பீர்கள். (கடனட்டை முழுமையாக கடனடைப்பதற்கு 72 மாதங்கள் செல்லும்)**

• $ 465 • $ 502 • $ 685

**ஊ) நீங்கள் டொலர் 10,000 பெறுமதியான ஒருவாகனத்தை வாங்கவிரும்புகிறீர்கள். உங்களிடம் உள்ளதோ டொலர் 2000. மீதி டொலர் 8000 ஐ 10 விகித வட்டியில் பெற்று ஐந்து வருடங்களில் தவணையாகக் கட்டி முடிக்கிறீர்கள். அந்த வாகனம் உங்களுக்கு என்ன விலையில் கிடைத்தது,**

• $11,400 $• 11,900 • $12,200

**எ) நீங்கள் ஒரு சஞ்சிகைக்கு மாதாமாதம் பெற கையொப்பம் இடுகிறீர்கள். ஒருசில மாதங்களுக்குப்பின் இது உங்களுக்கு ஏற்ற சஞ்சிகையல்ல என்று தீர்மானிக்கிறீர்கள். உங்களுக்குப் பில் வந்தபோது அதனை உதாசீனம் செய்து விடுகிறீர்கள். என்ன நடைபெறும்.**

- ஒன்றும் நடக்காது. இதுபோல் பலரும் செய்வதுண்டு, சிறு தொகைதானே.
- உங்கள் கடன் மதிப்பெண் பாதிக்கப்படலாம்.
- சில ஞாபகப்படுத்தலுக்குப்பின் சஞ்சிகை பிரசுரத்தார் உங்கள் பெயரை பட்டியலிலிருந்து விலக்கி விடுவார்கள்.

**ஏ) நீங்கள் உங்கள் கடனட்டையில் டொலர் 500 பணமாகப் பெற்றால் அதற்கு வங்கி வட்டி அறவிட எப்போது ஆரம்பிக்கும்.**

- 30 நாட்களுக்குப் பின்
- அன்றைய தினத்திலிருந்து
- அடுத்த தவணையில் கட்டிவிட்டால் வட்டி அறவிடப்பட மாட்டாது.

**ஐ) வருடமொன்றிற்கு மேற்படிப்பிற்கு எவ்வளவு செலவு செய்யவேண்டி வரும் என நம்புகிறீர்கள்.**

- $ 7,00- $ 9,000
- $ 11,000- $15,000
- $ 10,000- $11,000

**ஒ) நீங்கள் கல்வியை முடிக்கையில் டொலர் 20,000 கடன் இருக்கிறது எனக் கொண்டு 10வருடத்தில் 10 வீத வட்டியில் ஆகக்குறைந்த கட்டணத்தைக் கட்டினால் எவ்வளவு?**

• $ 22,400 • $ 31,722 • $ 26,990

புரியாத புதிர்
விடைகள்.

அ-2) உங்கள் கடனட்டை ஒரு முக்கியமான பொருள். உங்கள் வங்கி இருப்புக்கு அது ஆதாரமான திறவுகோல். அதை அவதானமாக பாதுகாப்பது உங்கள் கடமை.

ஆ-1) கூட்டுவட்டியின் செயற்பாட்டால் வட்டிக்கு வட்டி பெறப்பட்டு தொகைபாரியதாய் வளர்ந்திருக்கும்.

இ-1) வியப்பாய் இல்லை? கூட்டுவட்டியினால் உங்கள் ஓய்வூதியம் பெரும் தொகையாக வளர்ந்திருக்கும். நீங்கள் நிம்மதியாய் ஓய்வெடுக்கலாம்.

ஈ-3) நீங்கள் எவ்வளவு சம்பளம் பெறுகிறீர்கள் என்பதற்கு மதிப்பெண் அல்ல. ஆனால் பெற்ற சம்பளத்தை எவ்வளவு பக்குவமாகச் செலவு செய்கிறீர்கள் என்பதை தருவது தான் கடன்மதிப்பெண். எனவே சம்பளத்திற்கும் இவ்வெண்ணுக்கும் தொடர்பு இல்லை.

உ-3) பொருளின் இரண்டு மடங்கு விலை செலவு செய்திருப்பீர்கள். கடனட்டை உங்கள் பணத்தை வல்லமையாகப் பாவிப்பதற்கு ஒரு கருவி அல்லாமல் அது கடன் பெறுவதற்கு ஒரு கருவி அல்ல. கடனட்டையைப் பாவிக்குமுன் நெடியகாலத்துக்குக் கடன் தொடர்வது பயனுடையதா என மீளாய்வு செய்யுங்கள்.

ஊ-3) நீங்கள் பெறும் டொலர் 8000 கடன் 10வீதம் வட்டியில் டொலர் 10,200 ஐக் கொண்டுதான் அடைக்கமுடியும். இந்நிலையில் முதல் கொடுத்த டொலர் 2000 உடன் மொத்தத் தொகை டொலர் 12,200 ஆக உயர்ந்து இருக்கும்.

எ-2) உங்கள் கடன் மதிப்பெண் குறைக்கப்படலாம். ஒரு பில் அனுப்புகையில் நீங்கள் செய்த உடன்படிக்கை மேலோங்கி நிற்கும். வியாபார அமைப்புகள் இலாபத்துக்காக இயங்குவன என்பதை மறக்கலாகாது.

ஏ-2) அன்றைய தினத்திலிருந்து வட்டி அறவிடுவது ஆரம்பிக்கும். கடனட்டைகள் பொருட்களை வாங்குவதற்கு வசதிக்காக தரப்பட்டதன்றி கடன் பெறுவதற்காகவல்ல. பலர் பொருட்களை வாங்குவது போலவே அடுத்த கட்டும் தினம்வரை வட்டி அறவிட மாட்டார்கள் என நம்புகிறார்கள்.

ஐ-2) புத்தகங்கள், பாடசாலைக் கட்டணம், வாடகை, உணவு ஆகியவற்றைக் கூட்டிப் பார்க்கையில் டொலர்11,000 முதல் டொலர் 15,000 வரை செலவாகலாம்.

ஒ-2) டொலர் 31,722 தான் சரியான மறுமொழி ஆனால் ஞாபகத்தில் வைத்திருங்கள். இது கட்டாயமாக பயனான செலவு தான். ஔவை சொன்னதை மறக்க வேண்டாம். **'பிச்சை புகினும் கற்கை நன்றே'**

■ ■ ■

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்
**வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர். வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!**
416-400-6406

காப்புறுதி முகவர் ஆவதற்கான

# இலவச பயிற்சி வகுப்புக்கள்

எமது நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.

## Who Wants to be an Insurance Agent

- Free LLQP Lessons • Free Sales Training • Free Workshops
- We will teach you until you pass the exam
- We will prepare you for the Certification and provincial exams.

**Best Compensation package available in the industry**

# உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஓர் பாதுகாப்பு...

### சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி
(Universal Life Insurance)

*உங்கள் ஆயுட்காலம் வரை இந்தக் காப்புறுதி நீடிக்கும். இதற்கான கட்டுப்பணம் எந்தக்காலத்திலும் அதிகரிக்காது. நீங்கள் விரும்பியபடி 10,15 அல்லது 20 வருடங்களுக்கு மட்டுமே பணம் செலுத்தவேண்டும். அதன்பின்பு விரும்பினால் நீங்கள் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்; அல்லது 75 வீதத்தை கடனாகப் பெறமுடியும்.*

### வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி
(Non Medical Life Insurance)

*இத்திட்டத்தின் மூலம் எண்பது வயதுக்கு உட்பட்டோர் அனைவரும் வைத்திய பரிசோதனை இன்றி ஆயுட்காப்புறுதியை செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.*

### கொடிய நோய்களுக்கான காப்புறுதி
(Critical Illness Insurance)

Cancer, Stroke, Heart Attack, Bypass Surgery, Kidney Failure, Coma, Paralysis, Blindness, Deafness, Alzheimer, Parkinson *போன்ற 23 வகையான கொடிய நோய்களில் ஏதாவது ஒன்று உங்களுக்கு ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதியாகப் பெற்றுக்கொள்ளலாம். நோய் ஏதும் ஏற்படாவிட்டால் 65வது வயதில் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்.*

### குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்
(RESP)

*கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர்* Canada Learning Bond *அரசினால் வழங்கப்படுகின்றது.*

**கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்**

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

LILAND INSURANCE INC.



# சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

digi Media Creations

# இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

# மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி

## (Non Medical Life Insurance)



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

மருத்துவப் பரிசேதனை இல்லாத காப்புறுதி... இப்படியான திட்டங்களை நம்ப முடியுமா? மரணம் ஏற்பட்டால் காப்புறுதி நிறுவனம் பணம் தருவார்களா? எந்த வகையான நோய்கள்ஏற்பட்டவர்களும் காப்புறுதி பெற்றுக் கொள்ள முடியுமா? எதற்காக நாங்கள் மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதியைத் தெரிவு செய்ய வேண்டும்? மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் ஒருவர் இத்திட்டத்தைப் பெறத் தகுதி உடையவரா? புற்றுநோய் அல்லது இருதய நோய் உள்ளவர்கள் மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி பெற முடியுமா? இப்படிப்பட்ட பல கேள்விகள் எழுகின்றன.

மருத்துவப்பரிசோதனை இல்லாத காப்புறுதி என்பது ஒருவர் சாதாரண காப்புறுதித் திட்டம் எதுவும் பெறத் தகுதி இல்லாத பட்சத்தில் மட்டுமே உகந்த திட்டமாகும். மாதாந்தக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் சாதாரண காப்புறுதித் திட்டத்தைவிட அதிகமாக இருக்கும். அத்துடன் காப்புறுதித் தொகை அதிகம் பெறமுடியாது. அதிகமான காப்புறுதி நிறுவனங்கள் டொலர் 50,000 தொடக்கம் டொலர் 100,000 வரை அனுமதிப்பார்கள்.

கூடுதலான நிறுவனங்களில் 80 வயதுக்குட்பட்டவர்கள் மட்டுமே இத்திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும். மருத்துவப் பரிசோதனையுடன் கூடிய திட்டத்தில் 85 வயதுவரை இணைந்து கொள்ளமுடியும். மருத்துவப் பரிசோதனை இல்லாத திட்டங்களைப் பெற்றுக்கொள்ளும்போது காப்புறுதி நிறுவனம் மருத்துவப் பரிசோதனை எதுவும் செய்யப்போவதில்லை. ஆனால் விண்ணப்பப் படிவத்தில் மருத்துவம் சம்பந்தமான சில கேள்விகளைப் பூர்த்தி செய்யவேண்டி இருக்கும். இதற்குத் தவறான அல்லது பொய்யான தகவல்கள் கொடுத்தால் காப்புறுதிப் பணத்தை மீளப்பெறும்போது (Death Benefit) நிராகரிக்கப்படுவார்கள். எனவே காப்புறுதி விண்ணப்பத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான பதில், உண்மையான தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும்.

காப்புறுதி நிறுவனங்கள் மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதித் திட்டத்திற்கு விண்ணப்பிக்கும்போது நீங்கள் கொடுக்கும் தகவல்கள் உண்மையானதா அல்லது பொய்யானதா என்று பரிசீலணை செய்வதில்லை. ஆனால் ஒருவரின் மரணத்திற்குப் பின்பு காப்புறுதிப் பணத்திற்கு மனுச் செய்யும்பொழுது விண்ணப்பத்தில் கூறிய தகவல்கள் சரியானதா என்று பார்ப்பார்கள். அதில் தவறுகள் இருந்தால் காப்புறுதிப் பணம் நிராகரிக்கப்பட்டு கட்டிய பணம் மட்டுமே கிடைக்கும்.

எல்லாக் காப்புறுதி நிறுவனங்களும் மருத்துவப் பரிசோதனை இல்லாத திட்டங்களை வழங்குவதில்லை. சில குறிப்பிட்ட நிறுவனங்கள் மட்டுமே இத்திட்டத்தை வழங்குகின்றார்கள். சாதாரணமாக, வைத்திய பரிசோதனைகள் செய்து காப்புறுதி பெறக் கூடியவர்கள் எந்தக் காப்புறுதி நிறுவனத்திலும் விண்ணப்பிக்க முடியும். ஆனால் ஏதாவது ஒரு நிறுவனம் காப்புறுதி தருவதற்கு நிராகரித்தால் பின்பு அந்தத் தகவல் எல்லாக் காப்புறுதி நிறுவனங்களுக்கும் தெரிய வாய்ப்பு இருக்கின்றது. காரணம் (MIB) Medical Information Bureau இல் காப்புறுதிக்கு விண்ணப்பித்த ஒவ்வொருவரினதும் மருத்துவத் தகவல்கள் பதிந்து வைக்கப்படும். எனவே காப்புறுதி நிறுவனங்கள் அனைத்தும் இந்த நிறுவனத்தில் இருந்து எல்லோருடைய மருத்துவத் தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒருவர் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது வைத்திய பரிசோதனைக்குட்பட்டு தகுதி பெறமுடியுமா என்பதை கவனத்திற் கொண்டு விண்ணப்பிக்க வேண்டும். ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் பின்பு வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதித் திட்டம் பெற்றுக்கொள்ள முடிந்தாலும் அதன் பின்பு இரண்டு வருடங்களுக்குப் பின்புதான் காப்புறுதியின் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். காப்புறுதிக்கு விண்ணப்பித்து இரண்டு வருடங்களுக்கு முன்பு மரணம் ஏற்பட்டால் கட்டிய பணம் மட்டுமே திருப்பிக் கொடுப்பார்கள். இரண்டு வருடங்களுக்குள் வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே இதனால் பாதிக்கப்படுவார்கள்.

மருத்துவ ரீதியாக ஏதாவது பாதிப்புக்கள் அல்லது நோய்கள் உள்ளவர்கள் வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதித் திட்டம் ஒன்றை முதலில் பெற்றுக் கொண்டபின் சாதாரண மருத்துவ ரீதியான திட்டத்திற்கு விண்ணப்பிப்பது சாலச் சிறந்தது.

சில காப்புறுதி முகவர்கள் கடமையாற்றும் நிறுவனங்களில் வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதித் திட்டங்கள் எதுவும் இல்லை. எனவே இந்த நிறுவன முகவர்கள் எல்லோருக்கும் மருத்துவப் பரிசோதனையுடன் கூடிய காப்புறுதித் திட்டத்திலேயே விண்ணப்பம் செய்வார்கள். அந்தத் திட்டம் நிராகரிக்கப்பட்டால் நீங்கள் இரண்டு வருடங்களுக்கு வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதியைப் பெறும் வாய்ப்பை இழக்கின்றீர்கள். அப்படி ஒரு காப்புறுதியைப் பெற்றுக் கொண்டாலும் முதல் இரண்டு வருடங்களுக்குள் மரணம் ஏற்பட்டால் காப்புறுதித் தொகை பெறமுடியாது. கட்டிய பணம் மட்டுமே கிடைக்கும். இதனால் வயதானவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். பெரும்பாலான காப்புறுதி நிறுவனங்கள் வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது கவனிக்கும் மருத்துவ ரீதியான கேள்விகள் சில பின்வருமாறு.

- கடந்த இரண்டு வருடங்களுக்குள் நீங்கள் ஏதாவது காப்புறுதி நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்டு இருக்கிறீர்களா?
- தற்போது ஒரு வைத்தியசாலையில் அல்லது நோயாளிகளுக்கான வதிவிடத்தில் தங்கியுள்ளீர்களா?
- இருதய நோய், மாரடைப்பு, புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் ஏதும் இரண்டு வருடத்திற்குள் ஏற்பட்டுள்ளதா?

இந்தக் கேள்விகளில் ஏதாவது ஒன்றுக்கு ஆம் என்று பதில் அளித்தால் அவர்கள் வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதிக்கு தகைமை அற்றவர்கள். எனவே நீங்கள் விண்ணப்பப் பத்திரம் பூர்த்தி செய்யும்போது அதில் உள்ள கேள்விகளுக்கு சரியான உண்மையான தகவல்களைக் கொடுக்கவேண்டும்.

ஆங்கிலம் தெரியாதவர்கள், ஆங்கிலம் தெரிந்தவர்கள் மூலம் அந்தக் கேள்விகளை நன்கு வாசித்து விளங்கிப் பூர்த்தி செய்ய வேண்டும். காப்புறுதி முகவர் மூலம் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தாலும் நீங்கள்தான் அதில் கொடுக்கும் தகவல்களுக்குப் பொறுப்பாளிகள் ஆவீர்கள்.

எனவே வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதித் திட்டத்திற்கு சரியான தகவல்களுடன் விண்ணப்பித்தால் காப்புறுதிப் பணத்தைப் பெறுவதில் எதுவித பிரச்சினைகளும் இருக்காது.

■ ■ ■

வீடு வாங்க, விற்க...

To Buy or Sell your:
- Residence
- Convenience Store
- Cottage
- Condo
- Restaurant



Markham/Sheppard
- 2+1 Bedrooms, 1 Washroom
- Newly Renovated,Countertop Painted, Laminated Floors & Renovated Washroom

$ 164,900



Bellamy/Lawrence
- 3 Bedrooms, 2 Washrooms
- Bright And Airy 3 Bedrooms
- New Roof(05), Newer Main Bath, Updated Kitchen

$ 277,000



Kennedy/Ellesmere
- 2 Bedrooms, 2 Washrooms
- Corner Unit With Lots Of Light
- Steps To T.T.C., Shops & Close To 401

$ 229,900



Pharmacy & Mcnicol
- 4+1 Bedrooms, 3 Washrooms
- Over $60,000 In Renovations
- All Appliances 3 Yrs New
- Pot Lights Throughout

$ 359,900





Markham/ Bur Oak
- 3+1 Bedrooms, 4 Washrooms
- Detached 2 Car Garage
- 42 Pot Lights On Main & Lower
- Professionally Finished Basement

$ 359,900



Morningide/401
- 4 Bedrooms, 3 Washrooms
- Quality Home Built By Lake view Homes
- Stainless Steel Appliances

$ 445,800



Markham/Steeles
- 4 Bedrooms, 4 Washrooms
- Less Than 1 Year New
- Secondary Service Entrance To Basement
- Brand New Appliances

$ 549,900



Oasis & Seasons
- 4 Bedrooms, 4 Washrooms
- Gorgeous 3 Yrs New Home
- 4 Bath Home Situated On Premium Lot
- Walk out To Garage

$ 509,900

SIVA THARMAN KANDIAH
Sales Representative
CELL: 416 301 9540
BUS: 416 284 4751(24 Hrs)

SALES ACHIEVEMENT AWARD 2006

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

-Hey ! This Guy Can Do It Better-

# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



புகைப்பிடிக்காத 30 வயதுடைய
ஆணுக்கு $200 000 காப்புறுதி
$17.28 மட்டுமே! (T10. R.C.)

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

**தனா**
**மாணிக்கவாசகர்**
*Broker*

**Life Insurance**

**Critical Illness Insurance**



**Disability Insurance**
**Mortgage Insurance**

**RRSP - Start from $25**
Loan approval within 24hrs - Bad credit no problem
**RESP - Start from $25**
(20%-40% Government Grant + 15% Company Bonus)

**INSURANCE SERVICE INC.**
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200

A to Z
SOLUTIONS



Tam Sivathasan
Broker of Record

# 416 759 6000

www.veedu.com

**VEEDU REALTY INC.**
BROKERAGE





## Neilson/Military Tr

End Unit In Excellent Condition; Steps To Schools, Ttc, Centenary Hospital, U Of T (Scarborough); Minutes To Hwy 401; Heating System Converted From Electric To Gas (New Furnace)By Consumers Gas Co. With Warranty.



**Karunahkaran Manickanadarasa***




## Markham/16th Ave.

Gorgeous, Spacious And Perfect Home. Stainless Steel Appliances (Fridge, Stove, B/I D.W.), Ceramic B/Splash, Strip H/Wood Floors, Almost 20K In Upgrades, Steps To Shopping, Go Station, Schools, Churches Etc., Fenced Private Yard And Additional Storage In The Garage And More




**Sarangan Ratnarajah***




## Kingston/Eglinton

Immaculate Luxury Condo In Well Maintained Building. Upscale Modern Rec. Facilities With 24 Hrs. Concierge. Master Has Soaker Tub And Separate Shower Stall. Shows Pride Of Ownership. Only 8 Units Per Floor



**Janath Thevathasan***




## Brimley/N Of Steeles

Monarch Built 'rosewood' model, 2400 Sqft, Neutral Decor, Show Very Well, 9'Ceiling On Main, Upgrd Appliances, Oval Tub, Skylite, Bright & Clean, 10 Potlights, Privately Fenced Back Yard, Interlocking Extended Driveway (Part).



**Sujatha Sathiabal***




## Milton

Overlooking Woodlot, Strip Hardwood Throughout, Stainless Refrigerator And Stove, California Shutters Throughout, Covered Balcony Overlooking The Woods (Seller Paid Premium For This Feature) Oak Staircase, 9 Ft. Ceiling, Steps To Schools, Minutes To Hwy 401.



**Tam Sivathasan****




## Mccowan/401

Well Maintained Luxury Condo. Corner Unit With 2 Full Baths. Excellent South/East Exposure Sun filled. Steps To Scarborough Town Centre, SRT/TTC, 401 Highway, Shopping And Many Other Amenities. Marble Foyer.



**Chand Vythilingam***




## Conlins / Ellesmere

Conlins / Ellesmere
Excellent Layout, Spacious and Bright Home. Newly Renovated With New Carpet, Paint, Granite Counter Top, Deck, Circular Stairs, Skylight, Jacuzzi And Much More.... Close To TTC, Schools And University Of Toronto.



**Suba Ayngaran***

## Real Estate Classes to Begin soon...

Guidance provided by experienced professionals

Enquire at CALL:

**416-759-6000**

*Sales Representative **Broker

... REALTORS without BORDERS! ™

# CENTUM™

## Optima Mortgages Inc.

New & Expanded Office...

Greater number of Agents...

Committed Service...

We are Growing...

To be beneficiary call 416-759-1818

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

என்றென்றும் இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி
சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborugh, ON

BUILDERS HOMES!! NEW HOMES!!!
PAT PUSHPAKANTHAN Broker of Record/Owner
OFF: 416 493 2100
Professional Choice REALTY INC.
200 Consumers Rd Suite 410. TORONTO, ONT. M2J 4R4
UPTO 100% SPLIT
JOIN THE WINNING TEAM AND BECOME TOP PRODUCERS
TOP PRODUCER 5 YEARS
EXPERIENCE!
TOTAL COMMISSION SOLUTION 2.5%**

# உலகின் எரிசக்தி

உலகின் எரிசக்தி உருவாக்கத்தைப் பற்றி மக்கள் தங்களளவில் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

யேர்மனியில் பல ஊர்களில் தனித்தனியாக மக்கள் தங்கள் எரிசக்தித் தேவையை நிறைவு செய்ய முனைகின்றார்கள்.

அது மட்டுமல்லாது பல வழிகளிலும் பூமியைப் பாதுகாக்கும் வகையில் உயிர்வாயு மற்றும் உயிர்சார் எரிசக்திகளை உருவாக்குகிறார்கள். சிறிய ஊர்களில் உள்ள பல வீடுகளில் சூரிய எரிசக்தி வழிமுறைகள் கைக்கொள்ளப்படுகின்றன.

யேர்மனியில் பாடன் பகுதியில் உள்ள ஒரு விவசாயி தனக்குக் கிடைக்கும் மேலதிகமான தானிய வகைகைள், குப்பைகளை வைத்துக்கொண்டே தெற்கு 2 கிலோவாட் மின்சக்தியை ஆண்டுக்கு உருவாக்கிறார். இதற்காக அவர் 10 தொன் சோளத்தையும் 1 தொன் புற்களையும் 4 தொன் தாவரக் குப்பைகளையும் எரிக்கிறாராம்.

அவருக்குத் தேவையான மின்சக்திக்கு அப்பாலும் அவர் எரிக்கும் பொருட்களின் வெப்பம் வீணாகிறதாம்.
அதை என்ன செய்யலாம் என்று நினைத்த அவர் தனது கிராமத்தில் உள்ள 100




வீடுகளுக்கும் மின்சக்தியைச் சேர்த்தே தயாரித்து கட்டணமில்லாமல் வழங்குகிறாராம்.

கொடுத்து வைத்த மக்கள்! காசில்லாமல் மின்சாரம் இந்தக்காலத்தில் எங்கு கிடைக்கும்.

வாழ்க ரால்ஃப் கெல்லர் என்ற அந்த விவசாயி!


# வீட்டில் கற்கும் குழந்தைகள்

வீட்டிலேயே இருந்து படிக்கும் சிறுவர்கள், குழந்தைகளைப் பற்றி தற்போது நினைக்க முடியுமா? அமெரிக்காவில் 2003 ஆவது ஆண்டில் மட்டும் 1.1 மில்லியன் குழந்தைகள் வீட்டில் வைத்து படிப்பிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. அதுவும் அமெரிக்காவின் கல்வித் திணைக்களத்தின் அறிக்கை அப்படிச் சொல்கிறது. இது வெறும் நுனிதான். உண்மைத் தொகை பலமடங்கு பெரிதாக இருக்கும் என்று தெரிகிறது.

தோமஸ் அல்வா எடிசனிலிருந்து தொடங்கி, ஆபிரகாம் லிங்கன், வாசிங்ரன் முதலான அமெரிக்க அதிபர் இருவரும் பெரிய மெய்யியலாளரான ரஸ்சலும் வீட்டில் இருந்து கல்வி கற்றவர்களே.

வீட்டில் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பது என்பது தொன்று தொட்டு இருந்து வருவது தான். இருப்பினும் இந்த நூற்றாண்டில் பலரும் பலவித காரணங்களுக்காக வீட்டில் வைத்து கல்வி கற்பிக்கிறார்கள்.

தங்கள் மதத்தில் இறுக்கமான நம்பிக்கை வளர்த்தல், பாதுகாப்பு, மரபான கற்பித்தல் முறையில் விருப்பமின்மை ஆகியவை பெரும்பாலான காரணங்கள்.
சில குழந்தைகளுக்கு சிறப்பு தேவை மற்றும் சிறப்பான அறிவுடைய குழந்தைகளுக்கு தனியான கற்பித்தல் போன்றவையும் இதற்கான காரணங்கள். ஆனால் வீட்டில் கற்கும் குழந்தைகள் கொடுத்து வைத்தவர்கள்தான். அவர்கள் ஒரே சலித்துப்போகாமல் கல்வியைக் கற்பார்கள். ஒன்ராரியோவில் வீட்டில் வைத்து பாடம் சொல்லிக்கொடுப்போருக்கான மூன்று சங்கங்களே இருக்கின்றன என்றால் பாருங்களேன்.



• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

NEED REAL ESTATE SIGNS... CALL
APEX CREATION
PRINTING & SIGN
• Advertisement
• Offset Print
• Large Format Printing (Out Door & Indoor)
• Smart Sign Solutions
• Vehicle Wrapping
• Design
• Digital Printing
• Vinyl Cut Graphics
5B-2950 Birchmount Rd,
Scarborough, ON M1W 3G5
Tel: 647.439.3310
www.apexcreation.ca